உ

அம்பிகை துணை.

# பதிவிரதபாரம்யம்

( ஒரு தமிழ் நாடகம். )

இது

மதுரை: முதல்கிரேடு வக்கீல்

P. S. சுப்பிரமணிய ஐயரவர்கள்

இயற்றியது.

MAHAMAHOPADHYAYA
U.V. SWAMINATHA IYER
TIRUVANMIYUR MADRAS-41

மதுரை:

புதுமண்டபம் புத்தகவியாபாரம்

வி. என். இராகவக்கோன் அவர்களால்

பதிப்பிக்கப்பெற்றது.

1912

[ *All rights reserved* . ]

PRINTED AT THE
SRI RAMACHANDRA VILASAM PRESS.
MADURA.
SECOND EDITION. 1.000 COPIES.

# PREFACE

THIS little drama which is intended to glorify the ancient ideal of Hindu womanhood has for its story the sublime life of **Savitri**, one of the most saintly heroines applauded by the magnificent epic of Mahabharata. It is noteworthy that, in these days of modern civilisation and advancing free-thought, many of the oriental conceptions, especially those bearing on the duties and restrictions imposed on the feminine partners of the Hindu household are thoughtlessly decried by some of the present day thinkers in their enthusiastic endeavours for social reform and without meaning any degree of disparagement to their well-intentioned devotion to the cause of social amelioration, it is my humble desire to emphasise the high moral regulation framed by our saintly Rishis of yore for the conduct of the Hindu consorts in their sojourn of life below and beautifully illustrated in the unique life of our heroine in the pages of the fifth Veda of our land, as the noblest and brightest example of the feminine virtues. The life of **Savitri**, as described in the Mahabharata, is rather short and is such that does not involve some of the traits and attractions required to make it adaptable to the stage. Following the method adopted by '*Kalidas*' in the development of the story narrated in his master-piece of '*Sakuntala*', I have here and there added certain suit-

able incidents to the life of **Savitri** with a view to bellish the story and to invest the representation v a power to produce scenic and dramatic effects. Th however, do not affect, or detract from, t of the beautiful life depicted and I am c that no further apology on my part will be nee for the apparent variation from the original authori In presenting this little volume to the appreciative pub I am not actuated by any other consideration than ardent desire that the ladies of the Hindu national should earnestly read it and endeavour to reduce practice the most magnanimous precepts involved in t glorious example set by the adorable heroine for t conduct of the feminine world.

MADURA,
31—1—1912.

**The Author.**

உ

# சிறப்புப்பாயிரம்.

மதுரை சேதுபதி ஹைஸ்கூல் உபாத்தியாயர்

மகா-ள-ள-ஸ்ரீ

**S. சாமிநாதஐயரவர்கள்**

இயற்றியது.

அறுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.

நிறைமொழி மாந்தர் போற்றும் நீர்மையான், நேச ரன்பன்,
மறைமொழி யாத்தி ரேய மரபினி லுதித்த மாண்போன்,
குறைவிலாத் தேவ பாஷை குறுமுனி வகுத்த பாஷை
முறையுட னாங்கி லேயம் மூன்றையுங் கற்ற சான்றோன்.

கண்ணொடு மனமுங் கைபோம் வழியினிற் களித்துச் செல்லப்
பண்ணுடை யாழும் பண்பாய்ப் பரிவுடன் பயில்பா வல்லோன்
எண்ணுட னேனை நூலு மெழில்பெற வினிது கற்றோன்,
வண்ணநன் மாந்தர் தம்முன் மணியென விளங்கும் வள்ளல்.

எருதுகாற் குளம்பா லெற்றி யிறைக்கும்வெண் சங்க முத்தங்
கருதுவா ரின்றிச் செந்நெற் கழனியி லொளிசெய் காட்சி
மருதஞ்சூழ் பழங்கா நத்த வளம்பதி வந்த தூயோன்,
சுருதிதேர் தந்தை பேர்கொள் சுப்பிர மணிய சன்மா.

இன்னவ னணிசேர் சொல்லால் இனியநூல் பலவி யற்றித்
தென்னவ னாட்டி னுக்கோர் திலகமாய் விளங்கி நிற்போன்,
கன்னலும் பாலுந் தேனுங் கலந்தன வனைய வின்றோன்
சொன்னலந் தெரிந்து சொல்ல வல்லனோ டானு மம்மா.

எண்ணிய கலியி லையா யிரந்தனிற் கற்பு மேன்மை
நண்ணிய புகழ்சா வித்ரி நற்கதை யங்க மேழாய்
மண்ணினு டகம தாக மாண்புசேர் தமிழி னாலே
நுண்ணிய வறிவா லாய்ந்தே நூல்வலோர் வியக்கச் செய்தான்

# பண்டிதர் P. R. கிருஷ்ணமாசாரியர் இயற்றியது.

---

எழுசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

பன்னலங் களுக்குங் காரண மாகும்
பதிவிர தத்தின்மேன் மையினைக்
கன்னலம் மொழிச்சா வித்திரி கதையாற்
காட்டிநல் விசையநாட் டினனால்,
நன்னல மதுரைப் பெருநகர் தனக்கோர்
நாயக மணியென விளங்குஞ்
சொன்னலங் கனிந்த வள்ளலாம் நமது
சுப்பிர மணியவே ளியனே.

---

MAHAMAHOPADHYAYA
Dr. U. V. SWAMINATHAIYAR LIBRARY
TIRUVANMIYUR, MADRAS-41

அம்பிகை துணை.

# இரண்டாவது பதிப்பின் முகவுரை.

முதற்பதிப்பிலமைந்த புஸ்தகங்கள் பலரால் கைக்கொள்ளப்பட்டு அவர்களுடைய ஆமோதனத்தையு மடைந்ததுகண்டு மறுபதிப்பிடும்படி சில நண்பர்கள் எனக்கு ஆர்ஞைபிட்டவண்ணம் இப்பதிப்பு வாயிலாக இதை மறுபடியும் வெளியிடலானேன்.

மதுரை<br>நவம்பர், 1911. } P. S. S.

---

# முதற்பதிப்பின் முகவுரை.

உலகத்தில் உத்தமிகளான மாதர்கள் இகபரஸாதனமாக அநுஷ்டித்துவரும் எல்லா விரதங்களிலும் பதிவிரதமே மிகச் சிறந்தது என்பதை வற்புறுத்திக் கூறுகின்ற பதிவிரத பாரம்யம் என்னும் இந்நூல் முக்கியமாய்க் கற்பரசியாகிய சாவித்திரி சரிதத்தை நாடக வாயிலாகக் கூறும். சாவித்திரி சரிதம் பாரதம் வனபர்வத்தின்கண்ணே ஆறு அத்தியாயங்களடங்கிய ஓர் உபாக்கியானமாகக் கூறப்பட்டுள்ளது. ஜயந்திரன் என்னும் அசுரன் உத்தமிகளிலுத்தமியாகிய துரோபதையைத் தூக்கிச் சென்றபோது, அதனை யுணர்ந்த தருமபுத்ரர் ஆற்றொணாத்துயருடன் மிகப்பிரலாபிக்கக்கண்ட மார்க்கண்டேய மகா முனிவர் அவருக்குத் தேறுதலுண்டாகும் வண்ணம் பதிவிரதைகளின் சரித்திரங்களைச் சொல்லக்கருதி இந்த உபாக்கியானத்தைக் கூறலுற்றனர். இதுகாறும் இந்த உத்தம சரித்திரத்தை எவரும் வடமொழியிலாவது தென்மொழியிலாவது நாடக ரூபமாகச் செய்யாதது ஒரு பெருங்குறையெனத் தோற்றுகிறது. பெண்கல்வி ஒருவாறு அபிவிர்த்தியாகிவரும் இக்காலத்தில் இவ்வுத்தம சரித்திரம் முக்கியமாய்ப் பெண்பாலார்க்கு மிகப் பயன்படுமெனக் கருதி இதனைத் தென்மொழியில் ஒரு நாடகமாகச் செய்யத் தொடங்கினேன்.

# முகவுரை.

இயல், இசை, நாடகமென்று சொல்லப்பட்ட முத்தமிழும் தமிழ்ப் பாஷையிலிருப்பினும், நாடகத்தமிழ் சம்ஸ்கிருதம் முதலிய பாஷைகளில் மதிக்கப்பட்டு வருவதுபோல் அவ்வளவு உயர்வாகத் தமிழில் மதிக்கப்பட்டு வந்ததாகத் தோற்றவில்லை. குணநூல், செயிற்றியம் என்னும் இலக்கணங்கள் நாடகத் தமிழுக்கென்றே ஏற்பட்டவைகளாயினும், இலக்கியங்களில் ஒரு நாடகத்தையாயினும் காண்பது அரிதினுமரிது. பஞ்சகாவியங்களில் ஒன்றாகிய சிலப்பதிகாரத்துள் நாடகத்தமிழ் சிறிது விரவி வந்திருக்கின்றதை யாவரும் அறிவர். இராம நாடகம், அரிச்சந்திரநாடகம், மார்க்கண்டேயநாடகம், இவை மேற்கூறிய இலக்கணங்களாற் கருதிய நாடகமாகா.

ஆங்கிலேய நாடகங்களை அநுசரித்துத் தற்கால விற்பன்னர்களிற் சிலர் சில நாடகங்களைத் தமிழில் இயற்றியிருக்கின்றனர். ஆங்கிலேயத்துக்கும் தமிழுக்குமுள்ள பொருத்தத்திலும் சம்ஸ்கிருதத்துக்கும் தமிழுக்குமுள்ள பொருத்தம் விசேஷமுடைத்தாதலால் சம்ஸ்கிருத நாடகங்களை அநுசரித்தே இதை எழுதலானேன்.

உலகமுவக்கும் நம் நாட்டில் கற்புநிலைமையை நமது பெண்கள் பூஷணமாகக் கொண்டு, அதனின்றும் சிறிதும் வழுவாமல், பிறந்த குலத்துக்கும் புகுந்த குலத்துக்கும் புகழுண்டாம்வண்ணம் நடப்பதற்கு இச் சிறுநூல் சிறிது உதவிபுரியுமானால், அதுவே யான் அடையும் பெரும்பேறாகும். எல்லாம் வல்ல உமாபதி நமக்கு என்றும் அருள்புரிவாராக.

மதுரை
நவம்பர், 1900.

இங்ஙனம்
பி. எஸ். சுப்பிரமணிய ஐயர்

உ

அம்பிகை துணை.

# பதிவிரத பாரம்யம்.

## பிரஸ்தாவனை.

வெண்பா.

சீராம் பொருள்கல்வி தெள்ளறிவு மெய்ஞ்ஞானம்
சோராத மெய்வலிமை தூயதவம்—நேராக
நம்புவார்க் கென்றும் நயத்தல் புகழொற்றைக்
கொம்புளான் தாளின் குணம்.

எண்சீர் விருத்தம்.

தந்தைதா யில்லானைக் குணமில் லானைத்
தங்குமிட மற்றானைத் தனியோன் றன்னை
அந்தமிலா னைத்திசையம் பரனைத் தான்கூத்
தாடியைமற் றோர்மாதை யணைகு வானைச்
சிந்தையொடு தேடிமணந் துலக மீன்ற
செல்விகுண வதியுமையைச் சிறந்தெந் நாளும்
பந்தமொடு காந்தனுடல் பிரியா நின்ற
பதிவிரதை கண்மணியைப் பகரு வாமே. (2)

[துதிக்குப்பின் சூத்திரதாரன் தோன்றல்.]

சூத்: (சபையை நோக்கி வந்தனம் செய்து)

வெண்பா.

கற்றவர்கள், மெய்ப்பொருளைக் கண்டவர்கள், நல்லிசையைப்
பெற்றவர்கள், நாவலிமைப் பேறுளார்—மற்றுமுயர்
அன்பர்கள் கூடும் அரங்கமே! தண்டமுனக்
கின்பமுட னிட்டே னிதோ. (3)

(சபையைப் பார்த்து ஆச்சரியம் அபிநயித்து)

இச்சபையினிடத்துக் கடல்போலு மளவிறந்த கல்வித் திறமையும், விநயம், பொறுமை, பிழையகற்றல், குணங்கொள்ளல் முதலிய உயர்ந்த சாதுர்யங்களும் இடைவிடாது குடிகொள்ளும் இடமென நீங்கள் பிரகாசிப்பதால் அநேக வாணிகள் ஓரிடத்தில் ஒன்றுசேரும் சிறப்பினும் அதிக மாட்சிமை உண்டாகின்றது. மேலும் நவரசமென்னும் பயோநிதியின்கண் உதித்த எண்ணிறந்த மலர்மங்கைகளின் சங்கமென நீங்கள் விளங்குவதால் நண்ணும் எம்போல்வர் வறுமை சிறுமை பெற்றது. பின்னும், குணமென்னும் குன்றளித்த கோடி உமையவள் கூடும் குழுவென நீங்கள் இங்கு சேர்ந்து விளங்குவதால் நாம் வேண்டிய எப்பேறும் கைப்பெற்றோம். நாம் புரியத்தொடங்கும் செயலானது உங்கள் அருளின் பெருமையால் நலம்பெற்று நிறைவேறுமாயினும், பலர்கூடி யிழுக்கும் இரதத்தின் முன்னணியில் நிற்கும் தூரகங்கள்போல நாடகமுறையால் ஒரு செயலுமில்லாத யாம் சூத்திரதாரனெனப் பெயர் கொண்டோம்.

( திரையை நோக்கி )

ஓய், விதூஷக! சபை மிகவும் நன்றாகக் கூடியிருக்கிறது நமது நாடகத்தைத் தொடங்குவதற்கு இதுவே சமயம்.

சங்கீதம்.

[விதூஷகன் தோன்றல்.]

விது:

அறுசீர் விருத்தம்.

ஞாலமீ துயிர்கள் எல்லாம் நலம்பெறும் உணவால் என்னில்,
சாலஅவ் வுணவை மாரித் தண்புனல் பயக்கும் என்னில்,
சீலநன் மாதர் கற்பால் செழிக்கும்அம் மாரி என்னில்,
கோலவேல் விழியார் கற்பைக் கூறுதல் தவத்துண் மேற்றே.(4)

ஐய! இதென்ன கூட்டம்? என்ன காரணத்தினால் நீர் என்னை இங்கு அழைத்தீர்?

சூத்திரதாரன்: நண்ப! நாம் செய்யத் தொடங்கும் கருமத்திற்கு உன் உதவியை வேண்டுகின்றோம்.

விது: கருமம் உமது தாய்க்கோ தந்தைக்கோ? உமக்கு உதவி செய்ய நான் புரோகிதன் அல்லவே.

சூத்: (சிரித்து)

கருமமென்பதற்கு வினையென்பது பொருள். அது இங்கு நாம் செய்ய முயலும் நாடகத்தைக் குறிக்கின்றது.

விது: நாடகமென்றாலென்ன? நாடு + அகம் = நாட்டக மென்று டகரத்தை இரட்டித்து உரையாமல் நாடகமென்று பிழையாய்ப் பேசும் நீர்தாமோ சூத்திரதாரர்?

சூத்: அப்படியல்ல; நாடகம் என்பது வடமொழி. அது முன் நடந்த செயலை நிகழ்ந்தவாறு புரிந்து காட்டுதலென்று பொருள்படுகின்றது.

விது: இதென்ன! நீர் கூத்தாடிகளின் தலைவரென்று சொல்லுமே. நாடகமென்பது கீழ்மக்கள் தங்கள் பிழைப்புக்காகப் புரியும் ஈனமான தொழில் அல்லவா? அதற்கு இத்தனை பெருமை யென்ன?

சூத்: நண்ப! உனது அறிவு மிகவும் புதுமையாயிருக்கின்றது. அப்பியாசம் இல்லாதவர்களுக்குச் சாஸ்திரம் விஷம் என்னும் வசனப்படிக் கல்லாதவர்களுக்குத்தான் நாடகமென்பது கூத்தாட்டமாகும். நவரசப் பெருக்கினால் சுரோத்திரம், நயனம் என்னும் புலன்களின் வழியாக மனத்தைக் களிப்புற முழுக்காட்டுவதனால், 'இதன்றிக் கற்றதனாலாய பயன் என்ன?' என்று அறிஞர்கள் மேலாகக்கொள்வது நாடகமல்லாது பிறிதுண்டோ? அதேதெனனில்,

விருத்தம்.

கதைபுகன் றிடிலோ, செவியுணர்ந் திடினும்
கண்ணினுக் கிலைபுலப் படுதல்;
இதமொடு விழியுங் கண்ணுறின் மனத்துக்
கின்பமே லாகுமென் றெண்ணிப்
பதியினின் முன்னர் நிகழ்முறை ஒருகாற்
பார்க்கவுங் கேட்கவு மினிதாம்
விதமியற் றினரம் முறைதனக் கறிஞர்
விதித்தனர் நாடகப் பெயரே. (5)

விது: நன்றாக இருக்கின்றது, இதுமட்டுமா! நாடகமென்பது தொன்று தொட்டு மேலாக வழங்கி, அலங்கார சாஸ்திரத்துக்கு உரைகல்லாகவும் நுண்ணறிவுக்குப் பெரும்பயனாகவும் இருக்கின்றது என்

றுஞ் சொல்லுகிறீர்களே! நமது தொழிலுக்கு அநுகுணமான வித்தையை நாம் மேலாகச் சொல்லிக்கொள்வது சாதுர்யந்தான். உமக்குச் சூத்திரதாரரென யாது காரணத்தால் பேர் கிடைத்தது?

சூத்: கயிற்றினால் பாவைகளை யாட்டிவைப்போனது உவமை பற்றி நாடகசாலையில் காலோசிதப்படி பாத்திரங்களைப் பிரவேசம் செய்து நடிப்பிவிக்கின்ற நமக்குச் சூத்திரதாரனென நூலாசிரியர் பெயர் விதித்தனர்.

விதூ: நீர் மேலாகப் பாத்திரங்களென்றும் ரசங்களென்றும் சொன்னீர். அன்னமொன்றுதான் சொல்லப்படவில்லை.

சூத்: நண்ப! நீ உணவைத்தவிர மற்றொன்றையும் அறியாதவன்போல் பிரகாசிக்கின்றாய்; பாத்திரமென்றால் உணவெடுக்கும் கலமல்ல. அது நாடகசாலையில் நிகழ்ந்தவாறு கதையை அநுகரிக்கும் வேஷதாரிகளைக் குறிக்கின்றது. ரசமென்றால் நாம் உணவுடன் அருந்தும் பானமல்ல; ஐம்புலன்களுக்கும் விஷயமான பொருள்களில் குணங்கள் பலவுளவாயினும் அவற்றுள் ஸாரமானது இதுவென்று கற்றறிந்த மனம் ஆராய்ந்து வியக்கும் அம்சம் ரசம் என்று உரைக்கப்படும். எவ்வாறெனில்,

அறுசீர் விருத்தம்.

கண்ணகன் ஞால மீது கடவுளும், புகலுஞ் சொல்லில்
எண்ணமார் பொருளும், தேகத் தினிலுறைந் திடுமான் மாவும்,
தண்ணறு மலர்கள் மீது தழுவுநன் மணமும் போல
மண்ணினிற் கலைக ளின்கண் மருவிடும் ரசங்க ளெல்லாம். (6)

விதூ: ஐய! உம்மால் நன்றாய் உரைக்கப்பட்டது. ரசம் எத்தனை வகைப்படும்?

சூத்: அதில் ஒன்பது வகையுண்டு. எல்லாப் பிராணிகளுக்கும் ஹிதமான சிங்காரமும், மனத்துக்கு விநோதத்தைச் செய்யும் ஹாஸ்யமும், அதற்கு எதிரான கருணையும், வியப்பைத்தரும் ரௌத்திரமும், கீர்த்தியைப் பயக்கும் வீரமும், அதிலிருந்து உண்டாகும் பயமும், அதற்குக் காரணமாகிய பீபத்ஸமும், வீர ரசத்தின் பலனாகிய அற்புதமும், மோக்ஷத்திற்குக் காரணமாகிய சாந்தமும், ஆக ஒன்பதுவகை. இந்த ஒன்பது ரசங்களாலும் உலகின்கண் எல்லா நூல்களும் விளங்குகின்றன.

விது: நாடகங்களிலெல்லாம் இவ்வொன்பது ரசங்களும் அநுப விக்கப்படுகின்றனவா?

சூத்: நாடகத்துக்கு அவசியமான ஒன்பது அங்கங்களும் குற்ற மின்றிப் பொருந்தி யிருக்குமாயின் ஒன்பது ரசங்களும் சற்றேறக் குறைய உதிக்கக்கூடியவைதாம்.

விது: அடடா! மேன்மேலும் வளர்க்கின்றீரே. அவ்வொன் பது அங்கங்களும் யாவை?

சூத்: நண்ப! கேள்.

எண்சீர் விருத்தம்.

தேடுமுயர் நாடிகையாம் மாதி னுக்குச்
சென்னிகதை யாம்; நடனஞ் சிறந்த கண்கள்;
நாடிரவு யௌவனம்; பாத் திரங்கள் மேனி;
நன்குபுரி சூத்திரதா ரனுமே யாவி;
பாடுமுயர் நல்லிசையே மருழுங் கொங்கை;
பகருமினி தாமொழிகள் பவளச் செவ்வாய்;
கூடுதிரை யேயணியுங் கலைகள்; காமக்
குறியெனவே விதூஷகனைக் கொள்வ ராய்ந்தோர். (7)

விது: கதையைச் சென்னி என்றீரே. நீர் இப்போது அநு கரணஞ் செய்விக்கும் நாடகத்தின் கதை எச்சிறப்பை யுடையது? அதற்கு எந்நூலில் ஆதாரம்?

சூத்: அது உமாஸுதாசன் என்னும் ஒரு பெரியவரால் இயற்றப் பட்ட பதிவிரத பாரம்யம் என்னும் நாடகம். அது, உணர்வோர்க்கு மேற்கூறிய ஒவ்வொரு ரசத்தையும் புகட்டிக் கடைசி ரசத்தின் பல னாகிய மோக்ஷத்துக்குப் பரமசாதனமாய் விளங்கும் மாதர்கற்பையே சிறப்பித்து விளக்கும். அது, ஒருவாறு மகாபாரதத்தின் ஆதாரத்தை யும், பல விடங்களில் மதியினால் ஏற்படுத்தப்பட்ட கற்பனைகளையு முடையது. எவ்வாறெனின், நாடகம் மூவகைப்படும். முழுமையும் ஒரு ஆதாரத்தை அநுசரித்தால் அதற்குச் சுத்தம் என்றும், முழுமை யும் கற்பனையாகில் கற்பிதம் என்றும், அவ்விரு குணங்களும் பொருந் தின் மிசிரம் என்றும் பெயர். இந்நாடகம் கடைசியிற்கூறிய வகுப் பைச் சேர்ந்தது.

விது: மெத்த சந்தோஷம்! இனி உமது கதையை வளர்த்த வேண்டாம். நான் இப்போழ்து செய்யவேண்டுவதென்ன?

சூத்: நாடகத்துக்குச் சிறந்த அங்கமாகிய நடியை வருவிக்க வேண்டும்.

விது: அவ்வாறே செய்கின்றேன்.

[மறைதல்]

சங்கீதம்.

[நடிதோன்றல், நடனத்துடன்.]

நடி: (சூத்திரதாரனைப் பார்த்து) ஐய! தங்கள் உத்திரவுப்படி இதோ நான் இங்கு வந்தேன்.

சூத்: அளவில்லாக் கலைகள் நிறைந்த அறிஞர் தங்கிய இச் சபையானது உன் நடனத்தைப் பார்த்து மிக்க ஆனந்தமடைந்தது. ரசிகர்களுடைய மனக்களிப்புக்குக் காரணமாகிச் சகல சராசரங்களை யும் அழகு செய்விக்கும் இக்காலத்தை ஓர் பாடலால் நீ வர்ணிப்பா யாக.

நடி: எழுசீர் விருத்தம்.

தூயநன் மலர்கொய் தங்கசன் பெருகுந்
தூணிமீ திடுவன்;பைங் கிளிகள்
வாய்பயின் றிடும்;நற் றென்றல்பூங் கொடியை
மருவியே புரியும்நல் லுறவை;
ஆயுநல் லிசைகற் குங்குயில்; மதுவுண்
டார்க்குமிவ் வளிகுலம்; பிரிவால்
நோயுறும் மடவா ரொடுசமர் புரிய
நோக்குவான் போலுமிவ் வசந்தன். (8)

சூத்: இப்பொழுதுதான் ஆரம்பமாயிருக்கும் வசந்த காலத்தை நன்கு சிறப்பித்து உரைத்தனை. நீ மிகவும் மதியுயர்ந்த பெண் நாயகம் ஆதலால், நீ இசைத்த செய்யுளின்கண் பொருள்படும் விநோதமான சிங்காரத்தினால் இதோ இந்நாடகசாலையில் பிரவேசிக்கப்போகிற சாவித்திரியினுடைய மனோவிருத்தியையும், அம்மாதுக்கு உறும் விரகமென்னும் தாபத்தையும் நீ சங்கேதமாய் விளக்கிக் காட்டினை. நமது முயற்சி மிகவும் பயன் பெறுவதற் கென்னதடை?

[எல்லோரும் மறைதல்.]

உ

அம்பிகை துணை.

# முதல் அங்கம்.

சங்கீதம்.

[ சாவித்திரியும் அவள் சகியும் தோன்றல். ]

சாவித்திரி: என்னுயிர்போன்ற நீதிமதி!

விருத்தம்.

கங்கைதொட் டினிதாங் குமரிநாட் டளவுங்
கடுகியே நகரமொவ் வொன்றாய்
மங்கையா மேகித் தேடினே னெனினும்
மனத்தினுக் கிசைமண வாளன்
எங்குமே காணேம், செலுமிட மொன்றங்
கேதுவே றினியென துடலைச்
சங்கையில் லாதிப் பொழுதியான் விடுதல்
தகுதியென் றெனதுசிந் தனையே. (9)

சகி! இந்நாள்வரை எங்கும் திரிந்து தேடியும் என் மனத்துக்கு இசைந்த கணவன் அகப்படவில்லை. இனி யான் என்னுடலை விட்டு விடுவதே உசிதமென்று நினைக்கிறேன்.

நீதிமதி: எனது உயிருக் குயிரான சகியே! என்ன கொடுமை யான வார்த்தையை நீ சொல்லுகின்றாய்!

விருத்தம்.

மெய்யான கண்ணின் மணியே! தவங்கள்
மிகநோற்று வாணி யருளால்
பொய்யாத எங்கள் அரசன் பயந்த
புதல்விக்கும் ஈனம் உறுமேல்
பெய்யாது மேகம்; இனிநீதி யேது?
பிழையென்ப தேது? மதியும்
வெய்யோனு மேது? சிறிதேனும் உள்ளம்
மெலியா திருந்திடுவையே. (10)

என்னறிவிற் கமுதம்போன்ற கிளியே! நான்குவித புருஷார்த்தத்துக்கும் நிலேயான கலேகளின் அருளே ஒரு பெண்ணுருவாயமைந்தாற்போன்ற உனக்கும் குறைவு வருமோ? உன் அழகுக்கும், கல்விக்கும், கற்பையே உறுதியாகக் கொண்ட சிந்தைக்கும் தகுதியான நாயகன் எவனே இருக்கின்றான்.

விருத்தம்.

இன்றலர் மலரோ, வாய்ந்தே யினிக்குமாங் கனியோ, இன்னுந்
தின்றிடா வமுதப் பேறே, தெவிட்டிடா தருந்து தேனே,
மின்றிரு வனப்பை யெண்ண வேண்டுமோ கல்லோ வென்னத்
துன்றிடு முனேம ணக்குந் தூயவ னெவனே காணேன். (11)

சகி! இதுவரையில் உனது அற்புதமான குணங்களுக்குச் சமமான குணத்தோன் அகப்படாதபடியால் உனது கன்னிப் பருவமாகிய ஒன்பது வயதுக்குள் உனது பிதாவாகிய எங்கள் அரசன் உன்னை மணஞ்செய்து கொடுக்கவில்லை. உனக்கு யௌவனம் வந்து சில நாள் ஆகியும் உனக்கு இசைந்த கொழுநன் கிடைக்காதது தெய்வத்தின் செயலன்றி வேறென்ன? அவன் மனம் அசையாது அணுவுமசையாது கண்டாய். ஆயினும் நீ மனக்குறைகொள்ளக் காரணம் இல்லை.

**சாவி:** சகி! நீ உரைத்ததெல்லாம் மெய்யாயினும் கன்னிகையை மணம்புரிந்து கொடுக்க மேலோர் விதித்த 'கர்ப்ப தசமம்' என்னும் ஒன்பது வருஷமும் கழிந்துவிட்டபடியால் சாஸ்திர முறைப்படி நானே கணவனை வரிக்க முயன்றேன். எனக்கு இப்போது பதினைந்தாவது வயது முடிந்தும் எனக்கினிய மணவாளன் கிடைக்கவில்லை. கணவனில்லாக் காதலி பொருளில்லாத மொழிபோல எப் பயன் பெறுவாள்?

வெண்பா.

கால மதிலளிக்குங் கன்னிகையெல் லாப்பொருட்கும்
மேலதாஞ் செல்வ மெனவிளம்பும்—ஞாலமதில்
நற்பருவத் தீந்திடா நங்கையுநல் லாகுதியும்
எப்பயனு மேபயவா ரிங்கு. (12)

என்று சொல்லும் வசனப்படி நாயகனை அடையப்பெறாத எனது யௌவனமானது மிகவும் பழிப்பை அடைகின்றது.

நீதி: (திக்கிட்டு நாலுபுறமும் பார்த்து) சகி! நம்முடைய விசாரத்தின் மிகுதியால் நாம் முன்னம்பற்றிய மார்க்கத்தை விட்டு வேறு வழியிற் சென்று வெகுதூரம் வந்தனம். நமக்கு முன் தோன்றிய விதர்ப்ப நகரமும் மறைந்து விட்டது. ஏதோ ஒரு பயங்கரமான காட்டில் நுழைந்து விட்டோம். நம்முடைய வேலைக்காரர்களும் துணைவர்களும் விதர்ப்பபுரியில் நாம் வசித்த மாளிகையில் நம்மைக் காணாமல் ஏங்கியிருப்பார்கள். என்னசெய்யலாம்? பகலும் முடிந்தது. அந்திப்பொழுதும் மேலாகின்றதே.

விருத்தம்.

உன்மனக் கனல்போ மாறங் கொளித்தனன் பரிதி; நின்றன்
நன்முக வாட்டங் கண்டே நலிவுறும் பதும மேங்கி;
கன்னி! நின் னளகம் போலக் கறுத்திடுந் திசைகள் எல்லாம்;
அன்னமென் னடையாய்! இப்போ தணுகுவோ மிடமொன் றிங்கே.

சாவி: (நன்றாய் நோக்கி) சகி! நீயுரைத்தது மெய். நம்மிருவர்களுடைய மனங்களும் ஒன்றுபட விஷயம் ஒன்றைப்பற்றி நின்றபடியால் அவைகள் நாம் சென்ற வழியை விட்டு அகன்றன. அஞ்ஞானிகளுடைய இதயம்போலக் கங்குல் மிகவும் இருளுகின்றது. பற்றறாதவர்களது இந்திரியங்களைப்போல் வனமிருகங்கள் எல்லாம் அங்குமிங்கும் சத்தித்து உலவுகின்றன, மார்க்கமும் கண்ணுக்குத் தெரியவில்லை.

நீதி: (உன்னிப் பார்த்து) சகி! நீ சிறிதும் மனவருத்தம் கொள்ள வேண்டாம். அதோ சொற்ப தூரத்தில் ஒரு வெளிச்சந் தெரிகின்றது. அங்கே மானிடர்கள் வாசஞ்செய்யவேண்டும். அதை நோக்கி நாம் செல்வோம்.

[ஒரு வெளிச்சமும் ஒரு வேடனும் வேலைக்காரனும் தோன்றல்.]

நீதி: (வேடனை நோக்கி) ஐய! வந்தனம். விதர்ப்பபுரி இங்கிருந்து எவ்வளவு தூரத்திலிருக்கின்றது? அது எந்தத் திசையில் இருக்கின்றது? வழிதவறி மனக்கவலையுற்ற எங்களுக்கு நீர் மார்க்கம் காட்டவேண்டும்.

வேடன்: (வெளிச்சத்தினால் இருவரையும் நோக்கி) குயில்களே! இங்கே வந்திருங்கள். விதர்ப்பபுரி வெகுதூரத்தில் இருக்கின்றது. இம்மார்க்கத்தில் புலி, கரடி முதலிய துஷ்ட மிருகங்கள் மிகவுள

வாகையால், நீங்கள் இனிச் செல்வது தகுதியன்று. இவ்விடத்தில் இருந்து நித்திரை செய்து இரவு கழிந்தபின் நீங்கள் செல்லலாம்.

சாவி: (நீதிமதியை நோக்கி) சகி! இப்பெரியோருடைய அருள் நிறைந்த குணத்தை நான் என்னவென்று சொல்வேன்! இனி நாம் செல்வது உசிதமில்லை. இவ்விரவை இந்தப் புண்ணியவானுடனே யிருந்து கழிப்போம்.

நீதி: ஐய! தாங்கள் யாவர்? என்ன காரணத்தால் இங்கே வந்திருக்கிறீர்கள்?

வேடன்: (சிரித்து) குழந்தைகளே! இல்லந் துறந்தார்க்கு எவ்விடந்தான் பொருந்தாது? நான் ஜாதியில் வேடன். என் உறவி னர் நெறி என் மனத்துக்கிசையாமல் நான் அவரையும் இல்லறத்தை யும் விட்டு இக்காட்டில் வாசஞ் செய்கின்றேன்.

(சாவித்திரியை நோக்கி)

(மனத்துள்) இவளென்ன! தெய்வமாதோ! கந்தர்வர்கள் அரசியோ!

கலித்துறை.

வண்டார் மலர்க்குழற் பெண்ணர சாமிவள் வார்தனத்தைக்
கண்டால் முனிவர்கள் கைவிடு வாரவர் காரியங்கள்
கொண்டாடு பூசையும் வேதாந்த மும்மதக் கொள்கையும்போம்
பண்டார மேது மடமேது சைவமும் பாழ்த்திடுமே. (14)

கூட அவளொருத்தி யில்லாவிடில் இம்மாது என் கைக்குள் அகப்பட்ட தேவாமிருதமல்லவா. உடனே இவளை நான் அநுபவிப்ப தற்குத் தடையாக அவளொருத்தி யிருக்கின்றாள். அவளை யிக்கணமே கொன்று காட்டிற்குள் எறிந்துவிடில் இப்பெண்குயிலுடைய முகமும் மனமும் வாடிப்போய்விடுமே.

சாவி: (நீதிமதியை நோக்கித்தனித்து) சகி! இப்பெரியவர் மிக வும் வைராக்கியம் கொண்ட துறவியாயிருக்கின்றார். இன்றிரவு முழுவதும் அவரோடு மெய்யறிவுக் கின்பந்தரும் சல்லாபம் செய்து கொண்டிருப்போம்.

நீதி: (தனித்து) சகி! ஒருவாறு நீ சொன்னபடி அவர் நல்ல துறவி யாயிருந்தாலுமிருக்கலாம். அதை நம்பவொண்ணாது. கண்ணே! இவ்

வுலகத்தில் கபடம் நிறைந்த சந்யாசிகளும், தீயநடப்பையுடைய பாகவதர்களும் அனேகரில்லாதிருக்கின்றார்கள். ஜானகியைக் கவர்ந்த தசமுகனும் சுபத்திரையைக் கவர்ந்த அர்ச்சுனனும் சந்யாசிவேடம் பூண்டல்லவோ அப்படிச் செய்தார்கள். கபடம் நிறைந்தவர்களுக்குத் துறவிவேடமும், வைராக்கியம் நிறைந்த மொழிகளும், திருடனுக்குக் கன்னக்கோ லுதவுவதுபோல உதவுகின்றன. நல்லவர்களும் இருக்கின்றார்கள். தீயோர்கள் நல்லவர்களினும் மேலான ஆசாரத்துடன் நடிக்கின்றார்கள். நாம்யாரைநம்பக்கூடும்? நல்லதுறவிகளுக்குப் பெண் கூட்டத்தில் மகிழ்ச்சியும், உண்மையான பாகவதர்களுக்கு மாதர் பணிவிடையில் ஆனந்தமும், பக்தியுடன் விபூதி ருத்ராக்ஷங்களை யணிவோர்களுக்குச் சமயம் வந்தால் பிறர் பொருளை யிரக்கமின்றிக் கைக்கொள்ளுவதில் ஆசையுமிருக்குமா? அப்படியும் எத்தனையோ பேர்களை நாம் பார்க்கின்றோம்.

சாவி: (தனித்து) சகி! நீ யுரைத்தது பிழையென்று நினைக்கின்றேன். இவர் மிகவும் நல்லவரென்றே தோன்றுகிறது.

நீதி: (தனித்து) நமக்கு அவரால் ஆவதொன்றுமில்லை. இந்த இரவு கழிந்தபின் செல்லவேண்டிய நமக்கு அவருடைய குணங்களைப் பற்றிய விசாரம் ஏன்?

(பிரகாசம்) ஐய! இங்கே நாங்கள் இருவர்களும் கொஞ்சம் நித்திரை செய்வதற்குத் தாங்கள் இடம் கொடுத்தால் இரவு கழிந்தபின் புறப்பட்டுப்போவோம்.

வேடன்: பெண்மணிகளே! நீங்கள் யாவர்? என்ன காரணத்தினால் நீங்கள் இங்கே வந்தீர்கள்? எல்லா உயிர்களையும் ஓர் உயிர் எனப்பார்க்கின்ற யோகிகளாகிய எங்களுக்கு, வருவோர்களுக்கு அன்பு புரிந்து உதவி செய்வதே பெரிய சுகம். நீங்கள் உங்கள் இச்சைப்படி சுகமாய் நித்திரை செய்யுங்கள்.

நீதி: உங்கள் கருணைக்காக உங்களுக்கு வந்தனம் செய்கின்றோம். இந்த மடமயில் மத்ரதேசத்தைப் பரிபாலனஞ் செய்கின்ற அசுவபதி மகாராஜனுடைய மகள். இவள் பேர் சாவித்திரி.

வேடன்: (மனத்துள்) சாவித்திரி, சீ! அது நல்லபேரன்று. நமது சாதியார்க்கு வழக்கமான ஒரு பேரை அவளுக்கிடவேண்டும்.

நீதி: நான் அவளுடைய சகி. எனக்கு நீதிமதி யென்று பேர். ஒரு காரியத்தை யெண்ணி நாங்கள் இருவர்களும் பாண்டிய தேசம் சென்று திரும்பி மத்ரதேசத்துக்குப் போகின்றோம். எங்களுடைய வேலைக்காரர்களும் எங்கூடவந்த மற்றவர்களும் விதர்ப்பபுரியிலிருக்கின்றார்கள். நாங்கள் இன்று சாயங்காலையில் நகரத்துக்கு வெளியிலிருக்கும் சோலையின்கண் உலாவித்திரிந்தோம். வழிதவறி நகரை விட்டு வெகுதூரம் வந்தோம்.

நீதி: (சாவித்திரியை நோக்கி) சகி! நீ மிகவும் வழிநடந்தாய். (ஒரு இடத்தைக்காட்டி) நீ இவ்விடத்தில் படுத்து நித்திரைசெய்யலாம்.

சாவி: (உட்கார்ந்துகொண்டு) சகி! ஏனோ எனக்கு மிகவும் தாகமாய் இருக்கின்றது. நான் அருந்துவதற்கு ஜலம் வேண்டும்.

வேடன்: ஐயோ! தாகத்தாலாவது பசியாலாவது ஒரு பிராணி வருந்தினால் என் மனம் சகிக்காது. அம்ம, நீதிமதி! இங்கிருந்து கொஞ்ச தூரத்தில் ஒரு தடாகம் இருக்கின்றது. நீ சீக்கிரமாகப் போய் ஜலம் கொண்டுவா. எனது ஊழியக்காரனாகிய இந்த வலலன் உனக்குத் துணையாக வந்து அந்தத் தடாகத்தைக் காட்டுவான்.

(ஊழியக்காரனை நோக்கி)

அட, வலல! நீ அந்த மாதுடன் தடாகத்துக்குத் துணையாகப் போய்வா. (அவன் காதில் ரகசியமாய்ச் சில வசனங்கள் மொழிந்து) நீதிமதி! சீக்கிரமாகச் சென்று புனல்கொண்டு வருவாயாக.

நீதி: (சாவித்திரியை நோக்கி, தனித்து) உன்னை இவ்விடத்தில் தனியாக விட்டுவிட்டுப்போக என் மனம் இணங்கவில்லையே. உனக்கோ சகிக்க முடியாத தாகம் உண்டாயிருக்கின்றது.

சாவி: (தனித்து) இப்பெரியவர் எனக்குந் துணையாய் இருக்கின்றார். நீ சீக்கிரம் போய்வரலாம்.

நீதி: (தனித்து) சகி! அப்படியே செய்கின்றேன்.

(மனத்துள்) என்ன காரணத்தினாலேயோ என் மனம் மிகவும் சஞ்சலத்தை யடைகின்றது. சாவித்திரியை இங்கே விட்டுப்போவது பிழையென்று என் இதயத்துள் யாரோ உரைப்பதுபோல இருக்

கின்றதே. நான் என்ன செய்வேன்! அவளுக்குத் தாகமும் மிகுதியா யிருக்கின்றது.

வெண்பா.

எங்கள்பூ மன்னன் இயற்றும் பலவறமும்
தங்க விழிபுனையுந் தோகையிவள்—சங்கையொன்றும்
இல்லாது செல்லும் இனியநெறி யுந்துணையாய்
நில்லாவோ தாமவட்கு நேர். (15)

[நீதிமதியும் வலலனும் மறைதல்.]

வேடன்: குயிலே! எனக்கும் மிகுதியான தாகம் உண்டா யிருக்கின்றது. அதை நீ தான் தீர்க்கவேண்டும்.

சாலி: ஐய! நீதிமதி உதகம் கொணர்ந்தவுடன் முதலில் நீங்கள் அருந்தலாம். தூயவரே! உங்கள் ஆச்ரமம் எங்கேயிருக்கின்றது? தவப்பேறு நிறைந்த உங்கள் நிலையே சிறப்புள்ளது.

கலித்துறை.

முள்ளென் றறிந்ததைக் கையான் மருவிடும் மூடரெனக்
கள்ளுஞ் செறிந்திடு பொல்லா உடலெனுங் கண்மயக்கை
உள்ளந் தெரிந்தும் வெறுக்காத மாந்த ருறவகற்றித்
தள்ளிப் பிழைக்கும் புனிதர்கள் துன்பம் தவிர்த்தவரே. (16)

மாதவரே! இக்காயமானது முன் புரிந்த கருமத்துக்குப் பலனாகவும் இனி ஓய்வில்லாத கருமத்தை விளைவிக்குங் கருவியாயுமிருக்கின்றது. அதன் சம்பந்தங்களை வெறுத்துக் காடுசென்று புலன்களை யொடுக்கி ஞானநெறியில் நிற்கும் உங்கள் பெருமையே பெருமை.

வேடன்: பெண்ணே! நான் பலநாள் புரிந்த தவம் இன்றுதான் பலன்பெற்றது.

வெண்பா.

மண்ணாசை தன்னை மறந்திட்டேன்; இங்குமறு
பெண்ணாசை யென்னுமோர் பித்தில்லை—கண்ணேகேள்
பொன்னாசை யுந்தொலைத்தேன்; போகா தினியென்றும்
உன்னாசை யாலென் னுயிர். (17)

சாலி: (மனத்துள்) அம்ம, என்ன ஆச்சரியம்! நான் இங்கு வந்து கொஞ்ச நேரந்தான் ஆயிற்று. அதற்குள், என்னிடம் வெகு காலம் பழகினவர்போல அன்புகூர்ந்து என்னைப் பெற்றோரைப்போல

'உன் ஆசையால் என்னுயிர் போகாது' என்று கருணையுடன் சொல்லுகிறார். நன்றாக நினைக்காமல் நீதிமதி இப்பெரியோரைக் குறித்து ஒருவாறு சந்தேகமாகச் சொன்னாளே.

(பிரகாசம்) கருணையே உருவமாயமைந்த உங்களுடைய மனத்தின் சுபாவம் அப்பான்மையை யுடையது. இந்திரியங்களினால் பல விடங்களில் இழுக்கப்படுவதின்றி, மனத்தை ஒரே பொருளின்கண் நிறுத்தித் தவம் புரிகின்ற உங்களிடத்தில் கருணையின்றி வேறு எக்குணம் பொருந்தும்.

வேடன்: தவம் நிறைந்த என் சிந்தையானது வேறு எப்பொருளையும் வேண்டாது. சிறந்த ஒரு பொருளினிடத்தே குறியாக நிற்கும்?

வெண்பா.

உண்ணேன், உறங்கேன், ஒருதிவலை நீரருந்தேன்,
பண்ணேன் ஒருகருமம், பாரிலெதும்—எண்ணேன்யான்
பங்கயத்தை வென்றமுகப் பாவையே! என்மதிக்குன்
கொங்கையது வொன்றே குறி. (18)

சாவி: (மனத்துள்) (திடுக்கிட்டு எழுந்து காதுகளைக் கையினால் மூடிக்கொண்டு) ஐயோ! இதென்ன பாவம். இவருரைத்த வேதாந்தத்துக்கு இதுதானா முடிவு? இவரைத் தூயவரென்று நினைத்தேனே. என் காதில் விழக்கூடாத வசனங்களை இவர் உரைக்கின்றாரே. நீதிமதி சொன்னது முழுதும் உண்மையாயிற்றே. அவள் மிகவும் உலகத்திற் பழகிய புத்திசாலியாகையால் சந்யாசிகளுடைய வேடத்தையும், பாகவதர்களுடைய வசனத்தையும், வைதீக வேடம் பூண்டவர்களுடைய விபூதி ருத்திராக்ஷங்களையும் நம்பவொண்ணாதென்று திண்ணமாய்ச் சொன்னாள். இருந்தாலும் உலக சுகங்களை, வாந்தி செய்த அன்னம்போல வெறுத்த சந்யாசிகளும், சகல கருமங்களையும் செய்து பலாபேக்ஷையின்றிச் சுகதுக்கங்களை ஒன்றுபோல எண்ணி வரும் பாகவத சிரோமணிகளும், எல்லாம் அவன் செயலேயன்றி வேறு ஒன்று மில்லையென்னும் உறுதியுடன், இக்காயமும் கரணங்களும் அவன் பணிவிடைக்காக ஏற்பட்டனவென்று கருதி அதற்கடையாளமாகத் தம் மேனியில் திருநீறணிந்து ருத்திராக்ஷமாலை புனையும் புனிதர்களும், அங்குமிங்கும் சிலர் இல்லாவிடில் உலகம் பிழைப்பது எவ்வாறு?

(பிரகாசம்) ஐய! நீர் வஞ்சனையான ஒரு வேடங்கொண்டு வழியிற் செல்லுவோர்களுடைய தனங்களைக் கவருகின்ற சோரர்கள் போலத் தனியாளாகிய என்னுடைய தர்மத்தைக்கெடுக்க நினைக்கிறீர். ஏன் இந்த அக்கிரமத்தில் உமது மனம் செல்லவேண்டும்?

வேடன்: என் கண்ணே! என்னால் சகிக்க முடியவில்லை. நான் நீ நினைத்தபடி தவசியல்ல. நான் மிகவும் விஸ்தாரமான இந்த வேடர் நாட்டுக்கு அரசன். இவ்வழியில் வந்த அநேக மாதர்களைச் சிறைபிடித்து என் வீட்டில் வைத்திருக்கின்றேன். அவர்களெல்லாம் உனக்குப் பணிவிடை செய்ய, என் நாட்டுக்கு நீ அரசியாகி என் பிராணனுக்கும் நாயகியாய், சகல சுகங்களையும் அநுபவிப்பாயாக, உன்னுடைய பொன்போன்ற மேனியையும் அதன்அழகையும் பார்க்கில் துறவிகளும் காமுறுவார்களே.

கலித்துறை.

தேனைப் பழிக்குமென் கண்ணேயுன் வாய்ச்சொல்; சிறந்தவிழி
மானைச் சினந்திடும்; நின்கொங்கை கண்டுயர் மால்வரையும்
கூனிக் குறுகும்; துறவிகள் நொந்து குலைவரென்றால்,
நானெப் படிச்சகிப் பேனருள் வாய்பெண்கள் நாயகமே! (19)

(என்றுசொல்லிக் கிட்டவருகின்றான்.)

சாவி: (காதிற் கையைவைத்து மூடிக்கொண்டு,) ஐய! வேண்டாம், வேண்டாம்; கொடுமையான பாவத்திற் புகவேண்டாம். நீர் செய்ய நினைக்கும் பாவத்தை நீர் ஒருதரம் புரிந்தால், நூறு ஜன்மங்களில் இடைவிடாது நீர் நற்கருமம் புரிந்தாலும் அப்பாவத்தைத் தொலைக்க முடியாதே. ஒரு கெண்டைமீனைப் பிடிப்பதற்காக ஒரு ஏரி முழுவதையும் வெட்டித் தண்ணீரை அகற்றலாமா? அந்நிய ஸ்திரீயை நினைப்பதினும் ஆலம் உண்ணலாமே. அவள் கலவியுறுவதினும் அனலில் முழுகலாமே. அவளைத் தழுவுவதினும் கொதிக்கின்ற நெய்ச்சாலில் விழலாமே. அவள் கையைப் பிடிப்பதினும் விஷத்தைக் கக்குகின்ற அரவைக் கையால் எடுக்கலாமே. அவளைச் சிநேகிப்பதினும் நேராகக் காலனையே சிநேகிக்கலாம். ஐயோ! இந்தக் கொடிய கருமத்தில் ஏன் பிரவேசிக்கின்றீர்?

வேடன்: மங்கையே! பிரமன் உன் உடலைப் பொன்னாலும் பூவாலும் இதழாலும் செய்து, உன் மனத்தை வயிரத்தால் செய்துவிட்டனன். உன் சிறந்த அழகுக்குத் தக்கபடி உனக்கு மனப்பழக்கமில்லை.

சுகமறியாத வனவாசிகளும், சுகங்கிடையாத தரித்திரர்களும், சுகத்துக்கு யோக்கியமில்லாத விருத்தாப்பியர்களும், சுகத்துக்கு வேண்டிய புண்ணியம் புரியாத பேடிகளும் பிதற்றும் வசனங்களை உன் வாயால் நீயும் உரைப்பது நியாயமன்று. உன் கலவி கிடைத்தால் நீ மேற்சொல்லிய ஒவ்வொன்றுக்கும் நான் அஞ்சேன்.

வெண்பா.

ஆலமதை யுண்பேன், அனல்மூழ்கு வேன், கொதிநெய்ச்
சாலில்விழு வேன், அரவைத் தானெடுப்பேன்—காலனெதிர்
வந்தாலும் செல்வேன், மடவன்ன மே! யுனக்குச்
சந்தோஷ மானாற் சரி. (20)

(என்று சொல்லிச் சாவித்திரியின்மேல் கைபோட வருகின்றான்.)

சாவி: (தூரத்தில் ஓடி நின்றுகொண்டு, உரக்க) ஐயோ! நான் என்ன செய்வேன். நீதிமதி! தாகம் அடங்கிவிட்டது. உன் வார்த்தையை நிந்தித்த நான் அதற்குப் பலனை இப்போது அநுபவிக்கின்றேன். ஜலம் வேண்டுவதில்லை. உடனே நீ வரமாட்டாயா!

வேடன்: கிளியே! நீதிமதி இனி இங்கே வரமாட்டாள். அவளை இதற்குள்ளாக வலலன் யமபுரத்துக்கு அனுப்பியிருப்பான். என்னைத் தவிர வேறொருவரும் உனக்கு உறவில்லை. (என்று அவளைத் தொடர்வான்.)

சாவி: ஐயையோ! நானினி யென்னசெய்யத்தக்கது. எனக்கு யார் துணை? சகல உயிர்களையும் காக்கும் பரமேசுவரி!

அறுசீர் விருத்தம்.

நீதி யிலையோ? எனக்கருளும் நெறிநீ யறிந்த திலையோ? எப்
போதும் நினதா ரருள்பெருகப் புரிய விலையோ நல்வினைநான்?
ஏது மறியா தவளன்றோ? இன்னோன் கையில் வீழாதிப்
பேதை துயரம் போக்கிவிடப் பெருமா னெமனு மங்கிலையோ? ()

வேடன்: பெண்ணே! நீ தானாய் வர வெட்கப்படுகின்றாய். உன்னைப் பலவந்தமாய் மருவுவதுதான் உசிதம். (என்று உரைத்து அவளைத் தழுவ வருகின்றான்.)

[திரைக்குள் மடமடவென்று சத்தமும், இறக்கின்ற ஒரு பிராணியின் விகாரமான ஒலியும் கேட்டல்.]

வேடன்: இதோ பார்! புலி ஒன்று ஓடிவந்து கீழே விழுந்தது. ஆ, ஐயோ! என் தலையில் ஒரு அம்பு பாய்ந்ததே! (என்று சொல்லிக் கீழேவிழுந்திறந்தான்.)

சாவி: இதென்ன புதுமை! இப்பாதகன் திடீரென்று இறந்தான். நீதியே உருவமாயமைந்த சர்வேசுவரி! உன் அருளிருக்கில், (கைகூப்பித் தண்டனிட்டு,)

எண்சீர் விருத்தம்.

கோதாய்ந்த மாமுனிவர் தேடித் தேடிக்
  கூவியுங்கா ணாப்பொருளே! குணத்தின் வெற்பே!
வேதாந்த வேலையின்முத்தே! நின்பால்
  மேவியறி வோரகல மற்றோர்க் கெல்லாம்
சூதே! சூ தகன்றதருப் பணமே! ஓயாச்
  சுக லகரி யே! துலங்கா னந்த ரூப
மாதேயோ லமைந்திலகு முமையே! உன்றன்
  மலரடியைத் துணைகொண்டார் வருந்த லுண்டோ? (22)

[நீதிமதி தோன்றல் பரபரப்புடன்.]

நீதி: (மனத்துள்) எனது சகி என்ன செய்கின்றாளோ தெரியவில்லையே. இவ்விடத்தில் ஒரு பிராணி கொல்லப்படுகின்றது போல ஒரு பயங்கரமான ஒலி கேட்கப்பட்டது. தடாகத்தைக் காட்டுகிறேனென்று வழி காட்டவந்த அந்தப் பாவி என்னை ஒரு கிணற்றுக்குள் தள்ளிவிட முயற்சி செய்தான். அவன் கால் சறுக்கிக் கிணற்றில் விழுந்தமையால் நான் பிழைத்தேன். அப் பெரியவரைச் சீலம் பொருந்திய யோக்கியரென்றும் வலலனை அவருடைய சன்மார்க்கந் தங்கிய சீடன் என்றும் எண்ணியதற்கு இவ்விதம் நடந்தது.

(சாவித்திரியைப் பார்த்து.)

தெய்வத்தி னருளால் என் சகி சௌக்கியமாய் இருக்கின்றாள். (பிரகாசம்) என் கண்மணியே! இதோ ஜலம் கொண்டுவந்திருக்கின்றேன். இதை அருந்தித் தாகத்தைத் தீர்த்துக்கொள்.

சாவி: சகி! சகி! நீதிமதி! (என்று அவளைத் தழுவிக்கொண்டு மூர்ச்சையானாள்.)

நீதி: குயிலே! உனக்கு ஏன் இந்த மயக்கம்? விழித்துக்கொள். என்ன காரணத்தினால் உன் உடல் இப்படி நடுங்குகின்றது?

(கீழே கிடக்கும் வேடனைப் பார்த்து)

ஐயோ! இதென்ன கொடுமை. இவர் இறந்துகிடக்கின்றாரே. இவருடைய ஒலிதானோ நான் கேட்டது? அவ்வொலியினாலும், இவருடைய மரணாவஸ்தையைக் கண்டும், குழந்தையாகிய என் சகி பயந்துகொண்டிருக்கின்றாள். பாதி ராத்திரியாய் விட்டதே. நான் இங்கே என்ன செய்வேன்!

[ஒரு அரசகுமாரன் வில்லுடன் தோன்றல்.]

(தூரநின்று நீதிமதியையும் அவள் மடிமேற் படுத்திருக்கும் சாவித்திரியையும் பார்த்து)

அரசன்: (மனத்துள்) அவர்கள் சிறியபெண்கள்போல் தோன்று கிறார்கள். இந்த இரவில் அவர்கள் என்ன செய்கின்றார்கள்?

நீதி: சகி! கொஞ்சம் கண்திறந்து பார். உடலில் உனக்கு என்ன உபாதி செய்கின்றது? இதோ என் உயிர் போகின்றது.

அரசன்: (மனத்துள்) அடா, அடா! இதென்ன கஷ்டம்! யாரோ இறக்கின்றதுபோலவும், ஒருத்தி வருந்துகின்றது போலவும் இருக்கின்றதே. அது என்னவென்று பார்க்கவேண்டும்.

(சமீபத்தில் போய்)

(பிரகாசம்) அம்மா! நீர் யார்? நீரேன்வருந்துகிறீர்? உமது மடிமேலிருப்பவர் யார்? நான் செய்யவேண்டிய உதவி இருக்குமாயின் அதைச் சொல்லலாம்.

நீதி: ஐய! இவள் மத்ரதேசத்து அரசனாகிய அசுவபதி மகாராஜாவின் பெண்ணாகிய கண். அவள் பேர் சாவித்திரி. நான் அவளுடைய சகி. நான் ஜலம்கொண்டுவரப்போனபோது என்ன காரணத்தினாலேயோ பயந்துகொண்டு மூர்ச்சையாயிருக்கின்றாள்.

அரசன்: அம்ம! நீர் பயப்படவேண்டாம். சீக்கிரமாக உமது சகி சௌக்கியத்தை அடைவள்.

[நீதிமதியின் அருகிலிருந்த ஜலத்தில் தன்னுடைய வஸ்திரத்தைத் தோய்த்து சாவித்திரியுடைய முகத்தைத் துடைக்கிறான்.]

நீதி: (சாவித்திரி விழிப்பதுகண்டு.) என் கண்ணே! என்னைப் பார். எனக்குத் தைரியமாக ஒரு வார்த்தை சொல்.

சாவி: சகி, சகி! நீ எப்படிவந்தாய்? உன்னை அந்த வலலன் கொன்றுபோடுவானென்று அந்தப் பாவி உரைத்தானே.

நீதி: நான் சுகமாய்த் தப்பிவந்தேன். அந்தப்பாவி யென்று நீ யாரை உரைக்கின்றாய்? நீ ஒன்றுக்கும் பயப்படவேண்டாம். அப் பெரியவர் எப்படி இறந்தார்?

சாவி: நீ இவ்விடம் விட்டுப்போன பிறகு ஒரு பெரியவர்போல் வேஷம் பூண்டிருந்த அந்தப் பாதகன் அவனுடைய சுயரூபமாகிய வேடரூபத்துடன் என்னை— (பிறகு வசனிக்கமுடியாமல் உடல் நடுக்கத் துடன் நீதிமதியைத் தழுவுகின்றாள்.)

நீதி: அட! அட! என்னபாவம். உன்னை இவ்விடத்திலே தனியாக விட்டுவிட்டுப்போக என் மனம் சற்றேனும் இணங்கவில்லை. நீ தாகத்தால் வருந்துவதைப் பார்க்கமுடியாமல் நான் சென்றேன். ஐயோ! அவனுடைய கட்டளைப்படிதான் வலலன் என்னைக் கிணற் றில் தள்ளிவிட முயற்சித்தான். அது கிடக்கட்டும். அவன் எப்படி இறந்தான்?

சாவி: அதன் காரணம் நான் அறியேன். நான் என்ன நீதி யுரைத்தும் அதைக் கேளாது அந்தப் பாவி வெறிகொண்டவன்போல் என்னைத் தொடர்ந்துவந்தான். திடீரென்று கீழேவிழுந் திறந்தான்

அீசன்: (மனத்துள்) இதென்ன புதுமை! நீதியே இவளுரு வாய் வந்ததுபோலிருக்கின்றது.

(வேடனருகில்போய் விளக்கின் வெளிச்சத்தைக்கொண்டு அவன் தலையை உற்றுப்பார்த்து)

(பிரகாசம்) இவன் தலையில் ஒரு அம்பு பதிந்திருக்கின்றது. (அம்பைப் பிடுங்கிப்பார்த்துப் பரபரப்புடன்) ஐயோ! நான் என்ன பாவம் சம்பாதித்தேன். என்னுடைய ஆச்ரமத்தில் வளர்ந்த ஒரு மானை அக் கிரமமாக ஒருபுலி தூக்கிப்போயிற்று. அந்தப் புலியைக் கொல்வதற் காக இந்த அம்பை நான் எய்தேன். அது மிகுதியான வேகத்தால் புலியையும் கொன்று பின்பு இவரையும் கொன்றது. ஒருவரைக் கொன்றபின் என்னுயிரை நான் விடாது தரித்திருப்பது மிகவும் பிழை யல்லவா?

சாவி: (எழுந்திருந்து) நீர் அரசகுலத்தில் பிறந்தவரென்று நினைக் கின்றேன். தீயோரைத் தண்டிப்பதும் எளியாரைப் பாதுகாப்பதும் உமது தருமமல்லவா? நான் தனியாயிருந்தவேளையில் அந்தப் பாவி வஞ்சனையான துறவி வேடத்துடன் என் கற்பை அழித்து என் ஜன் மத்தைப் பாழாக்க முயன்றான். நான் பலவாறு உரைத்தும் அவன்

கேட்கவில்லை. கடைசியாய் அவன் என்னைப் பலாத்காரம் செய்ய வருகையில், உமது அம்பானது அந்த ரிஷீகேசனுடைய சக்கரம் போல் வந்து அவனையும் கொன்று, முதலில் என் மானத்தையும், பின்பு என் உயிரையுங் காப்பாற்றி என்னைப் பெற்றோனாகிய அசுவ பதி மகாராஜனுடைய குலத்தின் பெருமையையும் நிலை நிறுத்திற்று. உமது கருணையால் நான் பிழைத்திருக்கின்றேன். அந்தப் பாவியைக் கொன்றதும் மிகுதியான தருமமாயிருப்பதால் அதற்கு நீர் வருந்தக் காரணமில்லை.

நீதி: ஐயா! நீர் யார்? என்ன காரணத்தினால் உமது உதவி சமயத்தில் எங்களுக்குக் கிடைத்தது? எங்கள் குலத்தைக் காப்பாற்றின தெய்வமல்லவோ நீர்.

அரசன்: அம்மா! நான் சாலவ தேசத்து அரசனாகிய துமத சேன மகாராஜாவின் மைந்தன். என் பேர் சத்தியவான் என்பார்கள். என்னுடைய மாதா பிதாக்கள் சமீபத்திலிருக்குமோர் ஆச்ரமத்தில் வாசஞ்செய்கின்றார்கள். அந்த ஆச்ரமத்தில் வளரும் ஒரு மானை அக்கிரமமாக ஒரு புலியானது தூக்கிப் போயிற்று. அந்த மானை விடுவிப்பதற்காக நான் அந்தப் புலியின்மேல் கடிய வேகத்துடன் எய்த அம்பானது அந்தப் புலியைக் கொன்று மானை விடுவித்ததுமன்றி, இவரையும் கொன்றது. அர்த்த ராத்திரியா யிருப்பதால் நீங்கள் இரு வரும் எங்க ளாச்ரமத்தில் வந்திருந்து விடிந்ததின்மேல் போகலாம்.

நீதி: சகி! இவர் சொல்லுகிறபடி செய்யலாமல்லவா?

சாவி: உயிரையும் பெருமையையும் பாதுகாத்த அவருடைய சொற்படியே நடப்போம்.

[எல்லாரும் மறைதல்.]

உ

அம்பிகை துணை.

# இரண்டாவது அங்கம்.

சங்கீதம்.

[நாரதர் தோன்றல்.]

(மனத்துள்) கணக்கில் அடங்காத நாமங்களும் ரூபங்களும் புதியன புதியனவாய் உண்டாகி அழிந்துகொண்டிருக்க அவைகளுக் காதாரமான பரம்பொருள் மட்டும் விகாரமின்றி நிலையாயிருக்கின் றது. அதை யறியாத மானிடர்கள்தாம் சம்சாரிகளாகிச் சுகமில் லாமல் அலைகின்றார்கள்.

கலி விருத்தம்.

அன்றி ருந்ததும், ஆனதும், உண்மைபோல்
இன்றி ருப்பதும், இங்கினி யாவதும்,
சென்றி டத்திரி யாது திகழ்ந்தெலாம்
ஒன்றி நின்றிடும் ஓர்பொருள் எங்குமே. (23)

இக்காலத்தில் புவியை யாளும் அரசர்களுக்குள் மத்ரதேசத்து அரசனான அசுவபதி மிகவும் தர்மசீலன். அவனுடைய பெண்ணாகிய சாவித்திரி தேவமாதர்களும் வணங்கத்தக்க மேலான குணம்பொருந் தியவள். அவளைவிட்டுப் பிரிந்து வெகு நாளானபடியால் அவ்வரசன் மிகுதியாய் வருந்துகின்றான். அவளும் நீதிமதியும் நேற்று இரவில் தும்தசேனராஜாவின் ஆச்ரமத்திலிருந்து அவ்வரசனாலும் அவ்வர சன் மனைவியாலும் உபசரிக்கப்பட்டு இந்தவழி வருகின்றார்கள். சத் தியவானுடைய குணாதிசயங்களைப்பார்த்து ஆனந்தித்து, அவனையே தன் கணவனாகச் சாவித்திரி மனத்தால் வரித்துவிட்டாள். அவ்விரு வர்களும் சன்மார்க்கம் நிறைந்த மனமுடையவர்கள். அவ்விருவரும் தம்பதியாகச் சேரில் எல்லாத் தர்மங்களும் வாசனை நிறைந்த பொன் மலரைப்போல மேலாய் விளங்கும். பதிவிரதமும் கிருகஸ்தநீதியும் மேன்மேலும் சிறைப்பை யடைந்தது. நான் இங்கேயிருந்து அந்தக் குழந்தையைக் கண்களிக்கப் பார்த்துவிட்டுப் போகவேண்டும். (என்று ஒரு மரத்தின் கீழ் உட்காருகின்றார்.)

சங்கீதம்.

[சாவித்திரியும் நீதிமதியும் தோன்றல்.]

நீதி: சகி! சாவித்திரி! புண்ணியம் செய்தவர்களுடைய பாக்கியம்போல இதோ சூரியன் உதயமாகின்றான். துஷ்டர்களுடைய வாழ்வுபோல் இருளானது மறைந்துவிட்டது. தன் மனத்துக்கு இனிமையான நாயகனைக்கண்ட பதிவிரதையின் முகம்போல இதோ தாமரை மலர்கள் மலர்ந்து பிரகாசிக்கின்றன.

சாவி: (லச்சையுடன் சிரித்து) சகி! நன்றாய் உரைத்தாய். தாமரை மலர்களிடத்தில் மிகவும் அருமையான பதிவிரதம் நிறைந்திருக்கின்றது. எக்காலத்திலும் மாறுதல் இல்லாமல் ஒரேவிதமான அன்பு பொருந்தியுள்ளன.

நீதி: விதர்ப்பபுரியில் நம்முடைய வேலைக்காரர்கள் முதலியவர்கள் நம்மைக் காணாமல் வருந்துவார்கள். நாம் சீக்கிரமாகப் போக வேண்டும். நேற்று இரவில் நாம் அடைந்த வருத்தத்தையும் பிறகு அந்த அரசகுமாரனால் செய்யப்பட்ட உபசாரத்தையும் நினைக்க நினைக்க ஆச்சரியம் உண்டாகின்றது.

சாவி: (புளகம் அபிநயித்து) சகி! அவனுடைய நற்குணங்களையும் பராக்கிரமத்தையும் நான் என்னென்றுரைப்பேன்! அவனுடைய ஒரு அம்பானது அந்த வேடன் உயிரையும், அப்புலியின் உயிரையும் கொன்று உன் உயிரையும், என் உயிரையும் காப்பாற்றிற்று. அவன் தாயார் திருவே உருவாயமைந்தவள் போல் இருக்கின்றாள். அவன் தந்தையோ அறக்கடவுள்போலத் தயை, சாந்தி முதலிய நற்குணங்களால் விளங்குகிறார்.

நீதி: நீ கேட்கவில்லையா? அப்பெருமான்தான் சாலவதேசத்தை யாண்ட துமதசேனராஜன். ஒரு கொடிய அந்தணனுடைய சாபத்தால் அவனும் அவனுடைய மனைவியாகிய அக்கோமாட்டியும் கண் தெரியாத குருடர்களாகித் தங்கள் நாட்டையும் இழந்து தங்கள் குமாரனை அந்தச் சத்தியவானுடன் காட்டில் வாசம்செய்கிறார்கள்.

சாவி: ஐயோ! அவ்வளவு நற்குணம்பொருந்திய சாதுக்களுக்கு எப்படி இந்தத் தீமைகள் வந்தன? உலகத்தில் நீதி இல்லையா? (என்று கண்ணீர் விடுகின்றாள்.)

நீதி: நீ என்ன ஒன்றும் அறியாத குழந்தைபோல வியசனப்படுகின்றாய்? நல்லவர்களையும் தீயோர்களையும் பக்ஷபாத மில்லாமல் கர்மமானது வருத்துகின்றது.

எழுசீர் விருத்தம்.

குற்றமில் லார்தங் குறையும் என்,ளவும்
குணமிலார் சுகமும்,ஓர் பாவம்
சற்றுமெண் ணூர்தம் வறுமையும், தீயோர்
தம்மையே மருவுநற் றிருவும்,
உற்றநன் னிதியார் சேய்பெரு ததும்,அங்
குண்ணவும் வகையிலா தவர்கள்
சுற்றிலும் மகவு சூழ்ந்திடப் பெறலும்,
தோகையே! விணையினும் துயரே. (24)

கண்ணே! இந்த உலகத்தில் ஒன்றிருந்தால் மற்றொன்று இருக்கிறதில்லை. மானிடர்களுடைய கர்மங்களே மேலான காரணங்களாயிருப்பனவாதலால், அற்பர்களிடத்தில் செல்வம் சேர்வதும், நல்லோர்களுக்குத் துன்பம் உண்டாவதும், நிலைகெட்ட மாதர்களுடைய சௌந்தர்யம் போலவும், இரக்க மில்லாதவர்களுடைய மகிழ்ச்சியைப் போலவும் விணையின் வலியால் இந்தப் பாழான உலகத்திற்குச் சகஜமாய் இருக்கின்றன.

சாவி: சகி! அந்த அரசகுமாரனுடைய பேரை இன்னம் ஒருதரம் சொல்.

நீதி: சகி! அவன் பேரை மந்திரம்போல், ஜபிப்பாய்போல் இருக்கின்றதே! அவன் பேர் சத்தியவான்.

சாவி: (லச்சையுடன்) சகி! அவனுடைய படம் ஒன்று நீ எழுதமுடியுமா? அவனழகைப் பற்றி நீ என்ன நினைக்கின்றாய்?

நீதி: அது உனக்கல்லவோ நன்றாய்த் தெரியும்.

சாவி: சகி! அது கிடக்கட்டும்; அவன் தன் தந்தை தாய்க்கு என்ன பணிவிடைகள் செய்கின்றான். அவன் பாக்கியமே பாக்கியம்! அவனே இகத்தில் யாவையும் பெற்றுப் பரமபதத்தையும் நிலைபெறக் கைப்பெற்றான். அவனை மணஞ்செய்யும் மங்கையே அதிர்ஷ்டசாலி. "அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்" என்னும் பழமொழியை அவனே நிலைநிறுத்துகின்றான். சகி! என்ன இருந்தாலும் அவனிடத்திலும் ஒரு குறைவு இருக்கின்றது.

நீதி: சகி! அதென்ன?

சாவி: நான் சொல்லவா? (லச்சையுடன்)

எழுசீர் விருத்தம்.

நன்முகத் தெழிலும், பெருகுமோர் மார்பும்,
நளினமேங் கிடுவிழி யிணையும்,
வன்மலைப் புயமும், புன்னகை முழுதும்
வாய்ந்தசெங் கனியிதழ் வாயும்,
சொன்மிகச் சுவையாய்ப் புகலுநற் பேறும்,
தூயவாய் மையுமுளா னெனினுங்
கன்மனத் தவனென் றவனையான் நெஞ்சிற்
கருதுவேன் உனதுளம் பகரே. (25)

நீதி: சகி! நீ ஏன் அக்கிரமமாக அவனைத் தூறுகிறாய்?
(மனத்துள்)

வெண்பா.

வேந்தன் அரும்புதல்வன், மெய்யறிவா ளன், வீரன்
சாந்தன், குணநிறையுந் தன்மையான்—ஏந்துமுயர்
நல்லழகன், இன்னோனை நங்கையெவள் தான்கண்டே
புல்லலினை யாள்நெறியே போய்?

கோடி மன்மதனைப்போல விளங்குகின்ற சத்தியவானுடைய வழகு சௌரியம் முதலிய குணங்களால் சாவித்திரியுடைய மனம் கவரப்பட்டிருக்கின்றது. ரஸத்தை அறியத்தக்க யௌவனத்தின் மகிமையே மகிமை!

கலி விருத்தம்.

பரிதி கண்டிடு கஞ்சமும், பார்மதி
வருதல் கண்டிடு மாம்பலும், வண்ணமாய்ச்
சுருதி கண்டிடு தூயவர் சிந்தையும்,
பொருவும் நேயனைக் கண்டவள் புந்தியே. (26)

(பிரகாசம்) சகி! மெல்லிய மலர்போலும் இனிய சுபாவத்தையுடைய அவ்விரசன் மைந்தனைக் கன்மனத்தோனென்று ஏன் அநியாயமாய்ப் புகல்கின்றாய்?

சாவி: (லச்சையுடன்) சகி! நேற்று இரவில் அந்த வனத்தில் அவன் வரும்போது நீ வருகிறாயென்று எண்ணி அவன் முகத்தை ஒருதரம் பார்த்தேன். அவன் என் முகத்தை ஒருதரம்கூடப் பாராமல் பிடிவாதமாயிருந்தான். அதனால் அவன் வயிரம்போன்ற மனத்தானென்று எண்ணுகிறேன்.

நீதி: (சிரித்து) திருடுவோருடைய மதியின்மையாலன்றி அவர் திருட்டு வெளியாகிறதில்லை. அவன் முகத்தை நீ ஒருதரம் பார்த்த பின் அப்பால் நீ பாராவிடில், உன் முகத்தை அவன் பாராதது உனக்கெப்படிப் புலப்பட்டது?

சங்கீதம்.

(வழியிலிருக்கும் மரத்தின்கீழே யிருப்பவரைப் பார்த்துத் திடுக்கிட்டு) யாரோ ஒரு மாதவர் அந்த விருக்ஷத்தின்கீழ் வீற்றிருக்கின்றார்.

சாவி: சகி! நாம் சமீபத்தில் போய்ப் பார்ப்போம்.

நீதி: (உற்றுப் பார்த்து) என் கண்ணே! நம்முடைய நல்ல காலத்தினால் கருணைக் கடலாகிய நாரத மகாமுனிவர் நமக்குத் தரிசனம் தருவதற்காக இங்கே வீற்றிருக்கின்றார். அவரை வந்தனம் செய்வோம். (இருவரும் அவர் முன் வணங்குகிறார்கள்.)

சாவி: விருத்தம்.

காலமென்பது நீ, கலை யாம்பெரு
வேலை யின்கரை கண்டது நீ, மிகு
ஞால மீது நிறைந்து விளங்குநல்
மூல மெய்ப்பொரு ளாய்ந்திடு முத்தனே! (27)

நொந்தோர்களுடைய குறையை அகற்றுகின்ற கிருபாசமுத்திரமே! என் பெரியோர் செய்த பூஜையால் உமது தரிசனம் எனக்கு இங்கே கிடைத்தது.

நாரதர்: வா, குழந்தைகளே! உங்களுக்கு மங்களம். (சாவித்திரியை எடுத்து மடிமீதுவைத்துக்கொண்டு) சாவித்திரி! உனக்கும் உன்னை அண்டினவர்களுக்கும், மங்களமானது அடிமைப்பட்ட பொருள். உனக்கு நான் என்ன புதிதாக ஆசீர்வாதம் சொல்லப்போகிறேன்?

அறுசீர் விருத்தம்.

மாமன்மா மியர்கள் கண்ணுப், வருமண வாளன் வேண்டிக்
காமுறும் உயிராய், ஈன்ற காவலன் குலமும் நீசேர்
பூமனின் குலமும் ஓங்கப் புரியுநற் றேவாய்ப், பாரில்
தீமையொன் றணுகா தென்றுந் திருவெனத் திகழ்வை யம்மா.

சாவி: (எழுந்து மறுபடியும் வணங்கி) என் குலதெய்வம் போன்ற மாதவரே! உம்முடைய ஆசீர்வசனத்தைச் சிரசால் வகித்தேன். உமது வாயிலிருந்து புறப்படுவதெல்லாம் வேதமாயின் உமது ஆசீர்வசனம்

பெற்றவர்களுக்குக் குறையென்பதில்லை. அறியாதவர்கள் உம்மைக் கலகத்தை விளைவிக்கும் ஒரு முனிவரென்று நினைக்கின்றார்கள். அக் ஞானிகளுக்குரிய புராண வசனமும் அப்படியே மொழிகின்றதுபோ லும். தமோகுணம் நிறைந்தவர்களைப் பிரவிர்த்தியில் ஏவுதலுக்காக, ஓரிடத்திராது, நிகழும் விந்தைகளை ஆங்காங்கு உரைத்துப் பிராணி களைக் கருமத்திலே நடத்துகின்றீர். பிரவிர்த்தியில் மூழ்கினவர்களைக் கைதூக்கி விடுமாறு ஓங்காரத்தின் பொருளுரைக்கும் குருசுவாமியாய் இருக்கின்றீர். பிரவிர்த்தியை விடுகின்ற முமுக்ஷுக்களுக்கு, மகதி என்னும் வீணையின் ஒலியால் சப்தத்தைக் குணமாகவுடைய சிதாகா சத்தில் அவர்களுடைய மனம் லயிக்கும்படிசெய்து அவர்களைப் பரமா நந்தத்தில் மூழ்கக்காட்டுகின்றீர். உமது வீணையின் சுருதி அமைந்த நாதம் ஒலிக்குமளவும் சிருஷ்டியும், அந்த சுருதி கலைந்து அமரும் போது பிரளயமும் உண்டாகுமெனில் நீரே ஆக்கல், காத்தல், அழித் தல் என்னும் முத்தொழில்களையும் வகித்திருக்கின்ற பரமபுருஷர். உமது பெருமையை யாரும் அறிவதற்குத் தடையாகப் பிரவிர்த்தி நிறைந்த புருஷன்போல் நீர் நடிக்கின்றீர். நரனுடைய முத்திக்கு ஏது வாகிய 'நாரம்' என்னும் ஞானத்தை நீரே கொடுத்து அக்ஞானத்தை அகற்றுவதால் உமக்கு நாரதர் என்று பேர் கிடைத்தது.

நாரதர்: (சாவித்திரியைப் பார்த்து) கண்ணே! நீ பிறந்த வீடல் லவோ சுவர்க்கம். நீ புகும் வீடானது எல்லாச் சுகங்களையும் கொடுக் கும் பரமபதம்போல விளங்கும். உன் அறிவுக்குப் புலப்படாதது என்ன இருக்கின்றது? நீங்கள் இருவர்களும் இங்கே வந்த காரணம் என்ன?

சாவி: ஐய! நீரொன்றும் அறியீரா? எனக்கு வயது முதிர்ந் தும் விவாஹமும் ஆகாதபடியால் என் மனம் இசைந்த ஒரு நாயகனைக் கண்டு வரிப்பதற்காக எங்கள் பிதாவின் உத்திரவுப்படி தேசந்தோறும் சுற்றினோம்.

நாரதர்: நாயகனை எந்தக் கடையில் வாங்கலாமென்று நினைத் தாய்? நீ செல்லும் வழி மிகவும் புதிதாயிருக்கின்றதே; இருக்கட்டும், நாயகன் அகப்பட்டானா?

சாவி: நேற்று இரவில்தான் (லச்சையுடன்) நீதிமதி! நீ சொல்.

நாரதர்: குழந்தாய்! என்ன காரணத்தால் லச்சைப்படுகின்றாய்? நாயகனை வாங்கியாய்விட்டதோ?

நீதி: திரிகாலக்ஞானியாகிய பகவானே! நாங்கள் உரைத்தா உமக்குத் தெரியவேண்டும்? நர்மதாதீரத்தில் சாலவதேசாதிபதியான துமதசேனராஜன் தவம்செய்துகொண்டிருக்கின்றார்.

நாரதர்: தெரியும். கண்ணில்லாதவன்; அவன் மனைவிக்கும் கண் தெரியாது; அவனிடத்தில் உங்களுக்கென்ன காரியம்?

நீதி: சுவாமி! அவருக்குச் சத்தியவானென்று ஒரு குமாரன் இருக்கின்றான்.

நாரதர்: ஆமாம். அதிர்ஷ்டமற்ற ஒரு சிறுவனிருக்கின்றான்; அவன் ஒன்றுக்கும் உதவாதவன்; அவனைப்பற்றி நமக்கென்ன பேச்சு வேண்டியிருக்கின்றது? நீங்கள் இங்கே என்ன காரணத்தினால் வந்தீர்கள்?

நீதி: அந்தச் சத்தியவானைத் தனக்கு இனிய கணவனென்று என் சகி தன் மனத்தில் பாவித்ததாக எண்ணுகிறேன். சகி, சாவித்திரி! நான் சொன்னது உண்மைதானா?

நாரதர்: (தலையிலும் வாயிலும் அடித்துக்கொண்டு) துஷ்டப்பெண்களே! என்னுடைய முக்கிய சிஷ்யனாகிய அசுவபதியின் குடியைக் கெடுத்தீர்களே. பெண்கள் படிப்பு எந்தக் காரியத்துக்கு உதவும்? கூத்தாடிச் சிலம்பம் படைவெட்டுக்கிசையுமா? துமத்சேனன் இராஜ்ய பிரஷ்டன்; தரித்திரம் நிறைந்தவன்; அவன் வீடு முழுமையும் குருடு; இருந்திருந்து உண்ணச் சோறில்லாதவன் வீட்டில் ஒருவன் பெண்ணைக் கொப்பானா? சாபத்தால் கெட்ட குடியல்லவோ அவன் குடி. சீ! சீ! அந்தக் கலியாணம் வேண்டாம். செல்வம் நிறைந்த மன்னவர்கள் எத்தனை பேர்களோ இருக்கின்றார்கள். சாவித்திரி! என்ன பிழை செய்துவிட்டாய்? நீ சத்தியவானைக் கனவிலும் நினையாதே. வேண்டாம்.

**கலி விருத்தம்.**

கண்ப யந்திடு நூல்பல கற்பினும்,
மண்ணி லாரறி வாரொடு வாழினும்,
விண்ணி னோர்குடி மீது பிறக்கினும்,
பெண்ம திக்குயர் பேதைமை திண்ணமே. (29)

சாவி: கண்ணீர்விட்டு, (மனத்துள்) நான் ஒருபிழையும் செய்யவில்லையே.

நாயகனுக்கு வேண்டிய குணங்கள்.

(1) சௌரியம் ... அது நிறைந்திருக்கின்றது.
(2) நற்குலம் ... மேலான கீர்த்திபெற்ற துமதசேனராஜன் மகன்.
(3) அழகு ... என் கண்கள் பொய் சொல்லுமா?
(4) கல்வி ... அவன் கல்லாதது ஒன்றிருக்குமா?
(5) பெண்டிர்கள் வியக்க மொழிதல் ... அவன்சொல்லை வியக்காதவள் பெண்ணுவளா? அவள் கல்லாயிருக்கவேண்டும்.
(6) சம்பத்து ... அவன் குணங்கள் அல்லவோ மேலான சம்பத்து.
(7) ராவிக்யம் ... அவனிடத்தில் ராவிக்யம் இல்லாவிடில் உலகத்தில் ரஸங்களுமில்லை.

(பிரகாசம்) எங்குலதெய்வமே! ஏதுக்கு எங்கள் மேல் பிழையுரைக்கவேண்டும்? நாங்கள் பிழையே செய்தாலும் அது பிழையாய் முடியாமல் நேர்மையாய் விளையும்படி நீர் செய்யமுடியாதா?

நாரதர்: நீதிமதி! அவள் தெரியாத குழந்தை. அவள் பிழை செய்தாலும் நீ அதைத் தடுக்காமல் அதற்கு நீயும் ஒற்றுமையாயிருந்தது பெரும் பிழை. அஷ்ட ஐசுவர்யமும் நிறைந்த அசுவபதிக்கு வறுமையே பெருமையாகவுடைய சத்தியவான் தகுதியான மருமகன் ஆவனு?

நீதி: (தனித்து) சகி! இனி நாம் என்ன செய்யலாம்? முனிவர் இப்படி உரைக்கின்றாரே.

சாவி: சகி! அவர் அப்படித்தான் பேசுவர். அவர் மனம் கருணையாலமைந்தது. அவர் மொழிந்த ஆசீர்வசனம் பொய்யாகுமா?

(பிரகாசம்) சுவாமி!

வெண்பா.

வாய்மையே செல்வம்; மனஉறுதி யேவீரம்;
தூய்மையே நற்றவமாய்ச் சூழுயிர்மேல்—நேயமிகக்
கொண்டுமகி ழும்பெரிய கோமகனுக் குத்திருவும்
தொண்டுபுரி யாளோ சொலும். (39)

நாரதர்: பெண்ணே! உன்மேல் என்ன குற்றமிருக்கின்றது? சிறுவயதில் மிகுதியாய்ப் படித்தோமென்கிற செருக்கு குறைவில்லா

இருந்தபடியால் இவ்வாறு கெடுதியை விளைவித்தது. ஐயோ! அசுவ பதி இதைக் கேட்டால் உயிர்தரிக்கானே.

சாவி: சுவாமி! நான் செய்தது பிழையன்றே. நான் குறித்த நாயகன் உயிர்பெருகி யிருப்பானாகில், அதுவே எனக்கு அளவில்லாத சம்பத்து.

நாரதர்: (தலையிலடித்துக்கொண்டு) ஐயோ! எது பிரதானமோ அதுதான் அவனிடத்தில் இல்லை. அவன் அற்ப ஆயுளுடையவன் ஆயிற்றே. அவன் இன்று முதல் பதினொரு மாதம், பதினொருநாள், பதினொரு நாழிகை மட்டுந்தான் உயிர்தரித்திருப்பான்.

சாவி: நீதிமதியைக் கட்டிக்கொண்டு, (தனித்து) சகி! எல்லாம் தெய்வத்தின் செயல். (கண்ணால் ஜலம் விடுகிறாள்.)

நமது கருமத்தை நாமே அனுபவிக்கவேண்டியது. உலகத்தில் பிறக்கும்போதே அந்தகனாகவும், ஊமையாகவும், கால் முதலிய அங் கம் ஒழிந்தவர்களாகவும் இருக்கிறவர்கள் என்னசெய்கின்றார்கள்? கரு மத்தால் விளையும் சுகதுக்கங்களை அநுபவித்தல் கடமையென்று ஜன் மத்தைக் குற்றமின்றிக் கழித்தால் அல்லவோ நாம் முன்பு செய்து குவித்திருக்கும் கருமங்கள் குறையும். இல்லாவிடில் ஓடுவோரைத் துரத்தும் சுவானம் போலவும், பயந்தோர்களை வருத்தும் பேய்போல வும் பின்னிடுவோர்களைக் கருமமானது மிகவும் இரக்கமின்றி நோகச் செய்யும். ஆகையால், நான் ஒன்றுக்கும் அஞ்சேன்.

நாரதர்: பெண்களே! என்ன இரகசியம் பேசுகின்றீர்கள்? இப் படி எல்லாம் பேசிப்பேசித்தானே கேடு விளைவித்துக்கொண்டீர்கள். சாவித்திரி! சத்தியவானை மறந்துவிட்டாயல்லவா? வேறு ஒரு பாக்கிய வானை விவாகம் செய்துகொள்.

சாவி: ஐய! நான் பிறந்தபொழுதே என் அங்கங்களும் பிறந் தனபோல் என் நாயகனும் பிறந்திருக்கின்றான்.

வெண்பா.

திங்கள் கதிர்மாறித் தெற்குவடக் கேகிடினும்
வங்கிசத்தி லேபிறந்த மாதொருத்தி—எங்கெனினும்
சிந்தைகொள் நாயகனைச் சேராது பின்னொருவன்
பந்தமதை வேண்டாள் பரிந்து. (31)

சுவாமி! இனி என் மனம் மாறமாட்டாது. வருவதெல்லாம் என் வினையின் பயன்; ஆதலால், அதற்கு நான் வருந்தலேன்.

நீதி: ஐய, கருணைக் கடலே! அந்தச் சத்தியவான் ஆயுள் நிறையாதவனா? ஐயோ! என்ன துன்பம் விளைந்தது. ஐயோ! என்னைப் போல் ஒரு பயனும் அற்றவர்களுடைய உயிர்களெல்லாம் சேர்ந்து அவனிடத்தில் இருக்கலாமே.

வெண்பா.

வீரம், பொறுமை, மெய்யறிவு, நற்சீலம்,
மாரன் வியக்கும் வடிவெல்லாம்—சேரப்
பொருந்தும் எழில்மன்னன் பூணு உயிர்கள்
இருந்தென்ன போயென்ன வே?

சுவாமி! என் சகிக்கு ஒரு குறையும் நேராதிருக்கும்படி நீர் கிருபைசெய்தருள வேண்டும். உமது மலர்ப்பதங்களே எங்களுக்குத் துணை (என்று நாரதருடைய காலில் விழுகின்றாள்.)

சாவி: என் குலதெய்வமே!

அறுசீர் விருத்தம்.

உற்றவென் கணவன் போய்நான் உயிர்தரித் திடுவ தென்று
பற்றிடு மெனது கற்பும், பகருநன் முறையும், உன்பால்
பெற்றிடு வரமும் என்னைப் பேணிடா வோவென் னெஞ்சம்
அற்றிட தருள்வாய் அன்பர்க் கமுதென விசையுந் தேவே!

நாரதர்: (மனத்துள்) இந்தக் குழந்தை தர்மமே உருவாயமைந்தவள். அடா! இவளுக்கு வைதவ்யம் வருமாயின் துர்க்கை, லக்ஷ்மீ, சரசுவதி என்னும் இம்மூவர்களுடைய மாங்கல்யத்துக்கும் அல்லவோ குறைவு வரும். இவளுடைய ஞானத்துக்கும் மன உறுதிக்கும் எந்தத் தெய்வமும் அஞ்சுமெனில் இவளை அமங்கல்யம் என்பது எப்படி அணுகும்? (கண்ணில் ஆனந்தபாஷ்பங்களுடன் சாவித்திரியைக் கட்டிக் கொண்டு) "புனிதனைத் தழுவில் நூறு புதல்வரொத் திடுவ ளோர்பெண்" என்னும் வசனப்படி உத்தமனான நாயகனை அடையும் உன்னால் கிடைக்கும் பெருமை அசுவபதிக்கு ஆயிரம் புதல்வர்களாலும் கிடைக்கமாட்டாது. நான் ஒரு மந்திரத்தை உனக்கு உபதேசம் செய்கின்றேன். உன் கணவனுக்கு மரணமென்னும் விபத்தானது நேருவதற்கு மூன்று நாட்களுக்கு முன் முதல் உபவாசத்துடன் அந்த மந்திரத்தை ஜபித்து வருவாயாகில், (சாவித்திரியைத் திருக்கண்ணால் பார்த்து) உன் கணவன் உயிர்பெற்று வாழ்வன். அந்த மந்திரத்தின் பெருமை யாதெனில்,

கலி விருத்தம்.

வேதம் உண்டு விரிந்தஇஞ் ஞாலமோ
டோதம் உண்டுளம் உன்னுவர் முன்செயும்
கோதெ லாமகற் றிச்சுகங் கொண்டிட
மோத மீந்திடு மூவெழுத் தாமதே. (34)

(சாவித்திரியைத் தடவிக்கொடுத்து)

அறுசீர் விருத்தம்.

நீதியே யுருவாய் வந்த நின்னருங் கணவன் றன்னைத்
தீதெது மணுகா தந்தத் தென்புலத் தமரர் கோனும்
சாதகத் துடனே யீவன் சாலவும் பலவாம் பேறு
மாதருந் ததிபோல் நாளும் வாழ்ந்திடாய் மடவார் கண்ணே!

அவள் காதில் மந்திரத்தை உபதேசம் செய்கின்றார் (பிரகாசம்) பெண்களே! நீங்கள் சீக்கிரமாக உங்கள் நகரம் போய்ச் சேருங்கள்.

சாவி: (வணங்கி) ஐய! எங்களுக்கு விடைதந்தருளவேண்டும்.

நாரதர்: நல்லது கண்மணிகளே.

[எல்லோரும் மறைதல்.]

உ

அம்பிகை துணை.

# மூன்றாவது அங்கம்.

சங்கீதம்.

[அசுவபதி ராஜன் தோன்றல்.]

அசுவபதி: (மனத்துள்) என் குழந்தையாகிய சாவித்திரி இந்நாடு விட்டுச் சென்று வெகுகாலமாகியும் இன்னும் வரவில்லை.

அறுசீர் விருத்தம்.

புகையுமென் னிதயம் வாட்டும் புண்மிகுந் திடலால்; மற்றோர்
பகருநன் மொழியென் காதிற் படிவது மிலை;யென் நெஞ்சம்
தகுதியாம் பொருளி மூந்தோர் தம்மனம் பொருவும்; கொஞ்சும்
சுகமகல் பஞ்ச ரம்போல் தோன்றுமிப் புவன மெல்லாம். (36)

[சேவகன் தோன்றல்.]

சேவகன்: சத்திரபதி! அடியேன் வந்தனம்.

அசுவ: சேவக! என்ன விசேஷம்? அந்தப்புர வாசலில் உனக்குள்ள வேலைகளைவிட்டு நீ இங்குவரக் காரணமென்ன?

சேவ: நமது உயிர்க்குயிராகிய சாவித்திரியும் நீதிமதியும் மற்றவர்களும் சுகமாய் வந்துவிட்டார்கள். அந்த சந்தோஷத்தினால் மகாராணியவர்கள் நமது குலதெய்வமாகிய உமாதேவிக்குப் பூஜைசெய்து வணங்கினார்கள். அந்தப் பூஜையின் பிரஸாதமாகிய மலர்களையும் கனியையும் உங்கள் கையிற் கொடுக்கும்படி மகாராணியவர்கள் எனக்குக் கட்டளையிட்டார்கள். (மலர்களையும் கனியையும் அரசன் கையில் கொடுக்கிறான்.)

அசுவ: சேவக! மெத்தவும் சந்தோஷமாயிற்று. (மனத்துள்) குழந்தையைப் பார்க்க மிகவும் ஆவல் எனக்கு உண்டாகிறது. நான் அந்தப்புரத்துக்குப் போகின்றேன்.

[மறைதல்.]

சங்கீதம்.

சேவ: (தானகப் புலம்பல்) இந்த அந்தப்புரத்துச் சேவக வேலை இனிமேல் எனக்கு உதவாது. எல்லோரும் ஒரேவிதமாகப் புத்தி மாறாட்டம் உடையவர்களாக இருக்கிறார்கள். அரமனை யென்றால் விநோதங்கள், விசித்திரமான செய்கைகள் ஏதாவது இருக்கும். இந்த

அரமனையில் ஒன்றும் கிடையாது. எல்லோரும் உண்மையைப் பேசுகின்றார்கள். அதிலென்ன விநோதமிருக்கிறது? மற்ற அந்தப்புரத்திலிருக்கும் வேலைக்காரர்களுக்கு ஒவ்வொரு சமயங்களில் ஏதாவது சுகம் கிடைக்கும். இந்த அந்தப் புரத்தில் மாதர்களெல்லாம் ரிஷிகள் போல் வேதாந்தம் கற்றிருக்கின்றார்கள். நமக்கு என்ன கிடைக்கப் போகிறது? இரும்புப் பட்டடையில் ஈக்கு என்ன வேலை? பிராணிகளை வதைக்கக் கூடாதென்று எவனோ ஏட்டில் எழுதினானும். அதனால் எங்கள் அரசன் வேட்டைக்குப் போகிறதில்லை. அரசனென்றால் பற்பல மனைவிகளையும் எண்ணிறந்த போக மாதர்களையும் சேர்ந்து சுகமாயிருப்பான். எங்கள் அரசன் கையாலாகாதவன் போல் ஏக பத்தினி விரதத்தை அநுசரிக்கின்றான். அதெல்லாம் போகட்டும். புத்திசாலியாகிய சாவித்திரியையும் இந்தப் பேதைமை விடவில்லை. சீமையெங்கும் சுற்றிக் கடைசியாய், வீடின்றி வனத்திலே பொழுது போக்கும் ஒரு தரித்திரனை அவள் கணவனாக வரித்து வந்திருக்கிறாள். பெட்டியோடு களவுகொடுத்தவன் திறவுகோல் தன் கைவசமிருக்கிறதென்று தேற்றங் கொண்டாற்போல் படுக்க இடமில்லாத பரதேசியை மணம்புரிந்தாலும் ஏதோ பதிவிரதம் என்பது வந்து எல்லாரையும் காப்பாற்றிவிடுமென்று அந்தக் குழந்தை சொல்லுகிறாள். அது புதுமையில்லை. உலகத்தின் அநுபவம் கண்ட கிழவியாகிய அந்த மகாராணியும் அப்படிச் சொல்லுகின்றாளே! அரமனையில் எந்தப் பக்கம் போனாலும் தெய்வம், சத்தியம், கருமம், புண்ணியம், தவம் இந்த வார்த்தைதானா? மடங்களில் சேவகனாக இருந்தாலும் ஏதாவது விநோதங்களை நாம் பார்க்கலாம். இந்த நகரத்தில் ஒவ்வொரு மாதரும் அவளுடைய நாயகன் முகமன்றி மற்றொருவன் முகத்தையும் பார்க்கிறதில்லையென்றால், இங்கே என்ன விநோதமிருக்கும்?

[நீதிமதி தோன்றல்.]

நீதி: சேவக! நீ என்ன, இங்கே புலம்பிக்கொண்டிருக்கிறாய்?

சேவ: அம்ம! நீ என்ன இலகுவானவளா? நீ எல்லாம் படித்தவளல்லவா? அரமனை முழுவதும் வைதீகப் பிண்டங்களாகக் கூடியிருக்கின்றீர்கள். யாரோ இரண்டு மூன்றுபேர் காடிகள்போல வந்து விட்டுப் போகின்றார்களே. அந்த அழகர்கள் யார்?

நீதி: அட! முதலில் வந்துவிட்டுப் போனது அளவில்லாத தபோமகிமையுடைய ஆத்ரேய மகரிஷி. அவர் எல்லா உலகங்களையும் ஒரு நொடியிற் சுற்றிவரக்கூடிய மகிமையுடையவர்.

சேவ: அப்படியானால் அவர் பெரிய சிலம்பக்காரர்தான். மற்றவர்கள் யார்?

நீதி: நீ ஒன்றும் தெரியாத முரடன். தபோதனர்களை இகழ்ச்சியாய்ப் பேசாதே. மற்ற இருவர்களில் ஒருவர் சகல தர்மங்களுக்கும் விதாயக கர்த்தாவாகிய பராசர மகாமுனிவர். மற்றொருவர் கிருபா சமுத்திரமும், நமது அரசனுக்கு ஆசாரியருமான கௌதம மகாரிஷி.

சேவ: அவர்களுக்கு இங்கே என்ன காரியம்? நமது அரசனையும் தங்களைப் போலப் பரதேசி யாக்குவதற்காக வந்துகொண்டிருக்கிறார்களென்று நினைக்கிறேன்.

நீதி: நீ மிகவும் புத்தியற்றவன். கோடிகாலம் தவம் செய்தாலும் அவர்கள் தரிசனம் கிடைக்குமா?

சேவ: நான் ஒரு தவமும் செய்யவில்லையே. தினந்தோறும் நான் அவர்களைத் தவிர எந்த அழகான முகத்தைப் பார்த்தேன்?

நீதி: அடா! நீ தவம் செய்யாவிட்டாலும் நமது அரசனுடைய புண்ணியத்தின் பலன், அவனை அண்டினவனாகிய உனக்கும் கிடைக்கின்றது. தெய்வந்தொழல், பெரியோர் தரிசனம், நீதி வழுவாமை என்னும் இம்மூன்று தருமங்களும் அரசர்களுக்குப் பெரிதான பலம் அல்லவா?

சேவ: எனக்கு ஒன்றும் கேட்கப் பிடிக்கவில்லை. போதும், போதும்! நான் அந்தப்புர வாசலுக்குப் போகின்றேன்.

[மறைதல்.]

நீதி: (மனத்துள்) முக்காலமுமறிந்த நாரத மகாமுனிவருடைய கருணையால் என் சகிக்கு எல்லா மங்களங்களும் உள்ளங்கைக் கனி போல சுவாதீனமாயிருக்கின்றன. அரசனும் அவன் மனைவியும் வருத்தமடையாவண்ணம் சத்தியவானுக்கு ஆயுள் குறைந்ததென்று அவர்களிடத்தில் நானும் சாவித்திரியும் சொல்லவில்லை. நாரதருடைய வரத்தால் சத்தியவான் தீர்க்கமான உயிர் பொருந்தியிருப்பான். சீக்கிரமாகச் சாவித்திரியைச் சத்தியவானிடத்தில் கொண்டுபோய் மணம் புரிந்து கொடுக்கும்படி மகாராணியவர்கள் கட்டளையிட்டு விட்டார்கள். சாவித்திரியும் சத்தியவானாகிய அந்த அழகனைக் கண்டதுமுதல் அவனையன்றி வேறொரு பொருளையும் எண்ணாது, பரம்பொருளிலே மனத்தை நிறுத்தும் பிர்ம்மத்தியானியைப்போல அவனிடத்திலேயே தன் நினைவைச் செலுத்திக்கொண்டிருக்கின்றாள். யௌவனமானது

குறைவின்றி அவளிடத்திற் பொருந்தியிருப்பதால் பூர்ணசந்திரனைக் கண்ட கடல்வெள்ளம்போலச் சத்தியவானைக் கண்டது முதலாக அவளுடைய மையலானது மேன்மேலும் வளருகின்றது. அதனால், எப்பொருளினும் விருப்பமின்றி உன்மாதம் பிடித்தவள் போல எதை யும் வெறுக்கின்றாள்.

கலித்துறை.

பூவைச் சினப்ப ளொருகால்; அவனைப் புகன்றுபின்னர்
நாவைச் சினப்பள்; குயிலிசைத் தால்மிக நைந்துதங்கள்
தேவைச் சினப்பள்; மதியோ னிலங்கத் தெளியுமிவ்வி
ராவைச் சினப்பள் துயிலாது சற்றுமென் னாரணங்கே. (37)

இவ்விதமாக அந்தக் குழந்தை வருந்துவதைக் கண்டு மகாராணி யும் வருத்தப்படுகின்றாள்.

[ சாவித்திரி தோன்றல். ]

**சாவி:** சகி! இதென்ன ஆச்சரியம்! இதற்கு முன்னர் நமது சோலையில் வளரும் குயில்கள் கூவினால் மிகவும் காதுக்கு மதுரமாக இருக்குமே. இப்போது அவைகள் செய்யும் கூச்சலானது என் மேனியில் தாபத்தையும், என் மனத்தில் சங்கடத்தையும் உண்டுபண் ணுகின்றதே. சந்தனமும் தழல்போல் சுடுகின்றதே. சகி, சகி! ஒரு பக்கம் ஏகினால் தென்றல் கொளுத்துகின்றது. மற்றொரு பக்கம் போனால் மதியின் கிரணம் நெருப்புப் பொரிபோல் என் மேனியை எரிக்கின்றது. அதோ அங்கிருக்கும் சத்தியவானை எடுத்துச் சற்று வீசுவாயாக.

**நீதி:** சகி! விசிறிக்குச் சத்தியவான் என்று நீ பேர் வைப்பது உசிதம்தான். அது உன் வெப்பத்தை நிச்சயமாய்ப் போக்குமென்று எண்ணி அதற்கு அந்தப்பேர் கொடுத்தாய்.

(மனத்துள்) என் சகிக்கு மனத்தில் தோன்றுவதெல்லாம் சத் தியவானுடைய குணமாகவும், கண்ணாற் பார்க்கும் பொருளெல்லாம் அவனுடைய உருவமாகவும், அவள் வாயால் உரைப்பதெல்லாம் அவன் பேராகவும் இருக்கின்றது.

**சாவி:** சகி! ஏன் எனக்கு இத்தனை வருத்தம் உண்டாயிருக் கின்றது?

**நீதி:** என் கண்ணே! காவியங்கள் பலவற்றை நன்றாகப் படித் திருக்கும் புத்திசாலியாகிய உனக்கு நான் சொல்லித் தெரியவேண்டு

துண்டோ? நீ சத்தியவானைப் பார்த்தபோதே சந்திரனைக் கண்ட குவலயமலர்போல் உன் யௌவனமானது முழுதும் மலர்ந்துவிட்டது. விரகம் என்பது நீ படித்தறிந்த பொருளாயினும் இப்போது தான் அதன் தன்மை இன்னதென்று நன்றாக உணர்கின்றாய்.

சாவி: சகி! அப்படியானால் மாரன் பொல்லாதவனென்றும், மதியோனும் தென்றலும் அக்கினிமயமாயிருப்பார்களென்றும், நாம் வளர்க்கும் குயில்களும் நமக்கு விரோதிகளாயிருக்குமென்றும் சொல்லும் நூல்களெல்லாம் உண்மையையே உரைக்கின்றன. இவைகளிலிருந்து தப்புவதற்கு வகையென்ன?

நீதி: சகி! நான் சொல்லவேண்டுமா? நீ நாயகனைக்கொண்டவனுடைய மனம் இரங்குமாகில் இவைகளால் உனக்கு ஒரு வருத்தமும் விளையாது.

சாவி: சகி, சகி! அவன் மனம் மிகவும் கடினமுள்ளதென்று அப்பொழுதே நான் உரைக்கவில்லையா? ஐயோ! எல்லாம் ஒன்றாகச் சேர்ந்திருக்கின்றனவே.

எண்சீர் விருத்தம்.

வெய்யயமன் பாசமதா விரவைத், தீயால்
வெம்மதியைத், தென்றலைநோய் மிகுதேள் வாலால்,
துய்யகொடுஞ் சிங்கியினால் கலகண் டத்தின்
தொண்டையை, யாம் பூண்மலரைச் சுடுவெந் நீரால்
கையயரா தன்றுபடைத் திட்ட வேதக்
கடவுளிது பொல்லாத கபடம் தீமை
செய்ததுபோ தாதாசொல் லவன்ம னத்தைத்
திண்ணியகல் லாலமைந்தச் செய்த தம்மா. (38)

நீதி: சகி! வருந்தாதே. (மனத்துள்) அவள் வருத்தம் தீரப் பூக்களைக்கொய்து அவன்மேற் போடுகின்றேன். (பூக்களைக் கொய்து சாவித்திரியின்மேல் போடுகின்றாள்.)

சாவி: (திடுக்கிட்டு) ஐயோ! மலர்களே! ஏனிந்த அநியாயம் செய்கின்றீர்கள்?

கலித்துறை.

போகாது வீண்பழி வெம்மலர் காள்! உமைப் பூணிழல்
நோகாது வைத்துப் புனலூட்டி யாசையி னோடுபக்கம்
ஏகாது சிந்தை நிதமோம்பு மென்னையெண் ணாமலெனக்
காகாத பாவியின் கைக்கணை யாகிவிட் டீரவமே. (39)

நீதி: என்ன சொல்லுகின்றாய்?

சாவி: நீ பார்க்கவில்லையா? இதோ என் மேலே மன்மதன் மலர்க்கணைகளைத் தூவுகின்றான். இம்மலர்களும் என் அன்பு மறந்து அக்கொடியவன் கையிற் கணைகளாயினவே.

நீதி: விரகத்தின் புதுமையை என்னென்று சொல்லுவேன்! உன் உடல்வெப்பம் தீருவதற்காக யான் அல்லவோ மலர்களைத் தூவினேன். குற்றமற்ற மன்மதனையும் மலர்களையும் ஏன் நிந்திக்கிறாய்?

சாவி: மன்மதன் குற்றமற்றவனா? வேதன் விரகத்தைச் சிருஷ்டித்து, அவன் தம்பியாகிய மாரனுக்கு உபகாரம் செய்திருக்கிறான். ஐயோ, மன்மதனே! அங்கமிழந்த நீயும் ஒரு தலையிழந்த உனது அண்ணனும் மிகவும் நல்லவர்கள். உங்களையும் ஒருத்தி பெற்றாளல்லவா.

கலித்துறை.

மின்னார் விரகம் படைத்திட்ட தீவினை மேலிட்டயன்
தன்னா விழந்தனன் ஓர்தலை, உன்குணத் தாலவிந்த
துன்னா ருடல், கொடும் வேளே! இதெண்ணி யுமைப்பெற்றதாய்
பொன்னாய் உருகுகின் றாளிது வோமக்கள் புண்ணியமே? (40)

இதுமட்டுமா? உன்குலமே கொடியதல்லவா.

எழுசீர் விருத்தம்.

காய்பெருங் கடலும், வெம்மதிக் கனலும்,
கடியவோர் தென்றலும் உனக்குத்
தாய்வழி யுறவுன் தந்தைகாண் குயிலைத்
தாரணி மிசைதழைத் தோங்கச்
சாய்விழிக் காகந் தனையெரித் தொழியா
தன்றுவிட் டானவன் ஈன்ற
சேய்மலர்க் கணையாய்! நின்குலத் தியல்பாந்
தீமையீ துனைவெறுத் தென்னே? (41)

நீதி: சகி! உனக்கு ஏனோ இவ்வண்ணம் உடலில் தாபமுண்டாயிருக்கின்றது? அது விலகுமாறு அந்த நிலவின் பிரகாசமுள்ள இடத்தில் உட்காருவோம். சந்திரனுடைய குளிர்ந்த கிரணம் உன் மேனியில் பட்டால் உனக்கு இவ்வளவு வருத்த மிருக்காது. (இருவரும் திறந்த வெளியில் ஓரிடத்தில் உட்காருகிறார்கள்.)

சாவி: இங்குந்தான் அதிக வெப்பமாயிருக்கின்றது. இந்தச் சந்திரனைப் பார்க்கையில் மேல் உலகத்தில் யாருடைய வீடோ நெருப்புப்பற்றி யெரிகிறதுபோ லிருக்கின்றது. பக்கத்து வீடு ஒன் றெரிந்தாலும் எங்கேயாவது ஒதுங்கித் தப்பலாம். இது தலைக்கு மேலே நேராக எரிகின்றதே. மதியும் அக்கினிதேவனும் ஒருவனே யன்றி வேறல்ல. ஓ, சந்திரனே! உன்னுடைய அற்புதமான குணத்தை என்னென்று சொல்லுவேன்!

கலித்துறை.

அனலாரு வெம்மதி! நின்னோடு கங்கை யமர்ந்ததினால்
புனலா யுருகினள்; அன்றர னார்முப் புரமெரித்த
கனலா முறுவலு நீயன்றி வேறெது? காயுமுன்றன்
வினையா லவன்றிரு மேனியும் சாம்பல் மிகூத்திட்டதே. (42)

(உடலில் வெப்பத்தின் மிகுதியை அபிநயிக்கிறாள்.)

நீதி: சகி! நீ மிகுந்த தாபத்தால் வருந்துகிறாய். அது நிவர்த்தி யாகும்வண்ணம் இவற்றால் உன் அவயவங்களைப் போர்த்துகின்றேன். (தாமரை இலைகளைக்கொண்டு போர்த்துகின்றாள்.) சகி! உன் உடல் ஏன் இப்படிப் பதருகின்றது?

சாவி: ஐயோ! அந்தக் கோகிலங்களின் வாய்களைக் கட்டி விடாயா? ஓ, குயில்களே! ஏன் இந்தக் கொடுமை செய்கிறீர்கள்?

கலித்துறை.

நாடோறு மென்னொடு வாழ்ந்திருந் தேமனம் நையமத
னோடே யிணங்கியிப் போதிசைக் குங்குயில் காணுமக்கிக்
கேடே னுயர்ந்த குடியிற் பிறக்கினும் கீழ்க்குலத்தார்
வீடே பழகி வளர்ந்திட்ட புல்லரின் மெய்ம்மையிதே. (43)

நீதி: சகி, சாவித்திரி! ஏன் இவ்விதம் அரற்றுகின்றாய்? இதோ ஆதவன் உதயமாகப் போகிறான். உன் மெய்யை வருத்தும் வெப்ப மானது தீர்ந்துவிடும். இக்கொடியதாகிய இரவானது கழிந்து விடி யற்காலம் வருதல் நமக்கு எவ்வளவு சுகமாக இருக்கின்றது.

வெண்பா.

தண்டா மரையுஞ்சேர் சக்கரவா கப்புள்ளும்
விண்டே ரினிலமரும் வெய்யோனைக்—கண்டினிதாய்ப்
பெற்றபெரு மைக்குநிகர் பேசலாம் அன்பனைக்கண்
ணுற்றமடவார்தம் முளம். (44)

சாவி: சகி! இருந்தாலும் மறுபடியும் இரவு வரின் என் மெய் நோவும் வருமென்று என் மனம் பதருகின்றது. அது தீர மருந் தொன்றில்லையா?

நீதி: சகி! அம்மருந்து தெரிந்தவன் சாலவதேசாதிபதியின் குமாரன் சத்தியவான் தவிர வேறொருவருமில்லை.

சங்கீதம்.

[சேவகன் தோன்றல்.]

சேவ: (சாவித்திரியை வந்தனம்செய்து) அம்மணி! நர்மதாநதிக் கரைக்குப் போக எல்லோரும் இன்று புறப்பட வேண்டுமென்று அரசனும் மகாராணியும் உத்திரவுசெய்து அந்தப்படி இரதமுதலி யவைகளும் ஸஜ்ஜமாயிருக்கின்றன. உடனே தாங்கள் அந்தப்புரத் துக்கு வரவேண்டுமென்று மகாராணியவர்கள் உத்திரவுசெய்தார்கள்.

சாவி: (லஜ்ஜையோடு புன்னகைபுரிந்து) சகி! நீயும் என்னுடன் நர்மதாதீரத்துக்கு வரவேண்டும்; நான் அந்தப்புரத்துக்குப் போகி றேன். (மான்களும் குயில்களும் தன் கால்களைச் சுற்றுவனபோல் அபி நயித்து,) இவைகளைவிட்டு எவ்விதம் நான் பிரிவேன்? நான் போகிறேன் என்று எப்படியோ இவைகள் தெரிந்துகொண்டனவே. என் கண் போன்ற குயில்களே! இங்கே வாருங்கள். (அவைகளைத் தழுவி) நீங்கள் இப்போதிருப்பது போல இரவிலுமிராமல் துஷ்டத்தனம் செய்கிறீர் களே. மான்களே! இங்கேவந்து எனக்கு முத்தம் கொடுங்கள். (அவை களை முத்தமிட்டு,)

கலி விருத்தம்.

நல்வி எங்குயில் காள்! நகு மான்களே.
அல்ல ரும்பக லாயுமைப் பேணும்யான்
புல்லு மென்மனை யானிடம் போகுவன்
மெல்ல வென்னை மறந்திடு வீர்களோ? (45)

(அவைகளை அணைந்து) நீங்களிங்கே சுகமாயிருங்கள். நான் என் கணவனிடம் போய்ச் சீக்கிரமாக உங்களை வந்து பார்க்கிறேன்.

[அவைகள் பின்தொடர மறைதல்.]

நீதி: (மனத்துள்) என் உயிர்க்குயிரான சாவித்திரி அவ ளுடைய பதியின் வீட்டுக்குச் செல்லுகின்றனள். நானும் அவளுடன் சென்று அவளுடைய மணக்கோலத்தைப் பார்த்து மகிழ்ந்துவிட்டுத் திரும்பி என் அகம் செல்லவேண்டும். இதுவரையில் அவளுடைய

நட்பினால் அடைந்த சுகம் இனி எனக்கு எவ்வாறு கிடைக்கும்? நட்பு என்னும் ஒரு அன்பானது இல்லாவிடில் உலகம் பிழைப்பதெப்படி? அந்த மேலான ஒரு உணர்வுதான் பலவிதமாக உலகத்தின்கண் பரவிச் சகல சராசரங்களையும் வாழ்விக்கின்றது. நட்பொன்றுதான் தெய்வத்தினிடத்தில், "அருள்" என்றும், தாயினிடத்தில் "வாத்ஸல்யம்" என்றும், தந்தையிடத்தில் "அன்பு" என்றும், சகோதரர்களிடத்தில், "பற்று" என்றும், சிநேகிதர்களிடத்தில், "விசுவாசம்" என்றும், அரசனிடத்தில் "கருணை" என்றும், குருவினிடத்தில் "பட்சம்" என்றும், தம்பதிகளிடத்தில் "காதல்" என்றும் பலவிதமாகப் பேர்கொண்டு எல்லா உயிர்களையும் காத்து இரக்ஷிக்கின்றது. "நட்பு" என்னும் அபிமானத்துக்கு எதைத்தான் உவமை சொல்லலாம்?

வெண்பா.

பெற்றோரும் கூடப் பிறந்தோரும் தெய்வமுமங்
குற்றோரும் மேலாம் உறவோரும்—உற்றுணரில்
நட்பதுவொன் றில்லாத நாட்டமுளா ரேலவர்க்குக்
கட்புலனில் லாமுகம்நேர் காண். (46)

[மறைதல்.]

உ

அம்பிகை துணை.

# நான்காவது அங்கம்.

:0:

## சங்கீதம்.

[ சத்தியவான் புஷ்பக்குடலையுடன் தோன்றல். ]

சத்தியவான்: (*மனத்துள், யோசனையுடன் அங்குமிங்கும் உலவி,*) இது ஆச்சரியமில்லை,

அறுசீர் விருத்தம்.

மாயவன் மலரோன் அந்தி வண்ணனென் மூவர் நாளும்
சேயநல் வாணி துன்னும் திருவுமை யவளைத் தாங்கி
நேயமோ டணைந்து நிற்கில், நிலையிலா மாந்தர் நெஞ்சம்
தூயபூங் கொடியர் நோக்காற் றுன்புறல் நேர்மை தானே. (47)

அன்று இரவில் அந்த மடக்கொடியைப் பார்த்தது முதல் உலகமானது புதிதாக எனக்குத் தோற்றுகின்றது. அதுவரையில் நான் என் தந்தை தாயருடைய ஏவலையே என் சிரசில் கொண்டு முடித்து அது அல்லது மற்றொன்றையும் அறியாத சிறியோனாக இருந்தேன். அவளை நோக்கினவுடன் எனது ஜன்மமானது பலவிதமான பிரயோஜனங்களை யுடையதுபோலும் காணப்படுகின்றதே. அவளுடைய சௌந்தரியம் பொருந்திய பார்வையானது என் கண்முன்னே நிற்கின்றது. குயில்மொழி போன்ற அவள் சொல்லானது எனது செவிகளை விட்டு அகலவில்லை. (*ஆகாயத்தைப் பார்த்து*) அட! இன்று வெகு காலமாகியும் இன்னும் என் தந்தையுடைய பூஜைக்குவேண்டிய மலர் முதலியவைகளை நான் எடுக்கவில்லை. என் மனமானது என்ன காரணத்தினாலோ ஒரு பொருளையும் நாடாது நிற்கின்றது. இதென்ன பிரமை எனக்கு வந்திருக்கிறது! எங்கும் அவள் மயமாய்த் தோன்றுகிறபடியால் ஒரு மலரையும் கொய்ய என் மனம் இணங்கவில்லை.

அறுசீர் விருத்தம்.

பூத்திடும் பதுமம் அன்னாள் பொன்முகம் பொருந்தும்; இங்கே
பூத்தமல் லிகையும் மாதின் பைந்நகம் போலி லங்கும்;
நேர்த்தியாங் குவளை யின்னாள் நெடியகண் ணெனலாம்; எங்கும்
ஏத்திடும் கொழுந்தும் அம்மா ணிதழையொத் திருக்கு மன்றே.

(கொஞ்சம் மலர்கள் கொய்வதுபோல அபிநயித்து,) இதோ, அன்னப் பேடுகளும் அவள்போல நடக்கின்றனவே. (முன்னே பார்த்துத் திடுக்கிட்டு) ஐயோ! அந்தக் கிளியானது அந்தக் கோவைக்கனியை வாயால் பற்றுகின்றது. அது அவளுடைய அதரமென்று நினைத்தேன். அடா!

எழுசீர் விருத்தம்.

மையிருட் குழலும், திகழும்நன் முறுவல்
வாய்ந்தமின் முகமும், ஒப் பகலும்
பையரும் பவளக் கனியிதழ் வாயும்,
பகர்வன போன்றிடுந் தனமும்,
கையும்நு ணிடையும், சிறுமடப் பிடியேய்
நடையும்,யா னொருதரம் கண்டேன்
தையல்நல் லழகைக் கண்டபின் புறவென்
தந்தைதாய்க் கிலையரும் விழியே. (49)

அவளுடைய நினைவால் எனக்கென்ன பயன்? மூடவன் கொம்புத்தேனுக் கிச்சிப்பதுபோல் அவள் அழகை நினைந்து நினைந்து நான் ஆசைகொள்ளுதல் மிகவும் பிழை. (யோசித்து,) அவளை நினையாது என் மனம் எப்படி யிருக்கும்? எப்பொருளிலும் செல்லாது, அவளுடைய நடையிலும் உடையிலும், அவள் மொழியிலும் விழியிலும் நின்றுகொண்டு பிடிவாதம் செய்கின்றதே. அரசாட்சி செய்து பெரிதான ஐசுவரியம் நிறைந்த மன்னன் புதல்வியைக் காட்டிலிருந்து கிழங்கையே உண்ணுகின்ற நான் அடைய எண்ணலாமா? அந்தப் பெண்ணின் நிலைமைக்கும் என் சிறுமைக்கும் எவ்வளவு தூரமிருக்கின்றது? (மலர் கொய்வதுபோல அபிநயித்து,) என்ன இருந்தாலும் அவள் என்னை விரும்புவாளா? காமம் நிறைந்த நெஞ்சிற்குப் பகுத்தறிதலேது?

கலித்துறை.

இல்லானை, நாடு துறந்திட்ட வென்றனை, யேதும்நன்றாய்க்
கல்லானை, யிவ்வனத் தேபொழு தோட்டிக் கழிக்குமிந்தப்
புல்லானை, நாட்டின் சுகம்பெறு மாறுபுல் லாதவனை,
நல்லா னெனக்கொள்ள வெண்ணுவ ளோபெண்கள் நாயகமே.

ஐயோ! இன்னும் சிறிது போது இருந்துவிட்டுப் போவென்று என் தாய் தந்தை உரைக்கக் கூடாதா? அம்மாது சிரோமணியின் அழகை நான் நினைக்க நினைக்க என் மனத்தில் ஆனந்த வெள்ளம் பெருகுகின்றது.

### கலி வெண்பா.

விள்ளு நகைசெய்யம் மின்னாள் முகங்கண்டோ
தெள்ளு மதிமேனி தேய்ந்துழலும் - கிள்ளையதும்
அஞ்சு மவள்மொழியிற் காகா துவமைகுழல்
கஞ்சமல ரைப்பழித்த கண்ணினாள் - கொஞ்சுதலாய்ப்
பேச்சொன் றுரைத்தாற் பிணிதீரும் வீணையொலி
கூச்சலாய்க் காதைக் குடையாதோ - மூச்சிலெழும்
வாசனைக்குத் தாமரையும் மல்லிகையும் செண்பகமும்
தாசனெனக் கூப்புமே தங்கரத்தைப் - பேசுமுயர்
மாரன் கரும்பு மலரைந்தும் விட்டிவள்தன்
பேரதனைச் சொல்லிப் பிழைக்கலாம் - நேரிழையின்
கூந்தலுக்கு நேர்எதையுங் கூறினால் என்னறிவு
மாந்தமெனத் தூற்றாதோ வையகமும் - காந்தையிவள்
மன்றலள கத்துதவி மன்மதனுக் குள்ளதெனில்
கொன்றைமுடி யோன்விதியும் கோளாறாய் - அன்றமையும்
சேய்ப்பவள மும்கோவைச் செங்கனியும் யாமின்னாள்
வாயிதழைப் போல்வோ மெனவழுத்தில் - நாயமிலை *
தூயவித ழூறும் சுவையமுதுக் காயின்னம்
மாய னவதரிக்கில் மாசில்லை - நேயமுறும்
கோதை யவளதரம் கொண்டிடமெய் யின்மற்றோர்
பாதியையு மீசன் பயந்திடுவன் - வேதமுறை
ஒன்றன்றி மற்றொன்றும் ஓதிடா வேதனுமிம்
மன்றலித ழுக்காசை வாய்ந்திடுவன் - என்றுமொரு
பங்கயமும் சேலும் பசுங்குவளை யும்முகிலுட்
மங்குமிரு ளும்விடமும் மான்விழியும் - சங்கைசிறி
தில்லா துரைப்ப ரிணையென்று கண்ணினுக்கச்
சொல்லெல்லாம் நான்சொல்லும் சொல்லல்ல - அல்லைப்
பகலென்று பேசும் பழம்புலவர் குற்றம்
மிகவும் வெறுப்பெனக்கம் மின்னாள் - மகிழ்வோடு
நோக்கியடு வாள்பலரை நொந்தோரை யுந்திடமாய்
ஆக்கிவிடு வாள்நோக்கி னால். (51)

---

* நாயம் - நியாயம். அநியாயம் என்பதை, 'அநாயம்' என்றார் கம்பரும்; இதை, 'அநாயம் பொன்றுவாய்' என்னுமிடத்துக் காண்க. சுந்தரகாண்டம் நிந்தனைப்படலம் 51-ம் செய்யுள்.

சங்கீதம்.
[ சேவகன் தோன்றல். ]

சேவ: வான் மாறினும் தன் சொல் மாறாத வாய்மையோனா கிய மத்திரதேச மன்னன் அசுவபதிமகாராஜன் துமதசேன மகாராஜ னுடைய ஆசிரமம் நோக்கி வருகின்றார்.

சத்தி: (திடுக்கிட்டு, மனத்துள்,) ஆ, இதென்ன ஆச்சரியம்! அசுவபதிராஜன் அந்தப் பூங்கொடியின் தந்தையல்லவா? அரசனுக்கு இங்கென்னகாரியம்? ஒருகால் நான் விரும்பினதையும் தெய்வம் கை கூட்டி வைக்கின்றதோ?

[ அசுவபதி மகாராஜனும் சாவித்திரியும் தோன்றல். ]

அசுவ: அடா! இவ்வனத்தில் நுழைந்தவுடன் அருந்தவம் புரி கின்ற பெரியோர்களின் பெருமையால் நம் நகரத்தின்மீதில்லாத மன மகிழ்ச்சி உண்டாகின்றதே. தவம் நிறைந்தோர்களின் மாட்சிமைக்கு எதுதான் நிகராகும்?

கலி விருத்தம்.

ஞால மூன்று மகற்றுவர், நாட்டுவர்,
கால னைக்கரு தாது சினப்பர், இவ்
வேலை தீர அருந்துவர், விந்தையாய்ச்
சீல மாதவஞ் செய்யு மனத்தரே. (52)

(சத்தியவானைப் பார்த்து) இந்தப்புதல்வன் யார்? இவ்வழகனைப் பெற்ற புனிதர்கள் யாவர்? சர்வலக்ஷணமும் பொருந்தி இராஜகுமா ரன் போல் விளங்குகின்றனே. (ஆச்சரியம் அபிநயித்து,)

கலி விருத்தம்.

மார னேயுடல் வாய்ந்தவனோ? வோரு
சூர னைப்பகை தூயநல் வேலனோ?
சேரும் வற்கலம் திங்களின் மாசுபோல்
ஆரெ ழில்பெரி தாக்கு மிவற்கதோ. (53)

சத்தி: (மனத்துள்) காலம் மிகவும் சென்றுவிட்டது. கருணை நிதியாகிய என்றந்தை பூஜைபுரியத் தொடங்கும் சமயமும் நெருங்கி விட்டதே. அந்தப் பெண்ணை நினைத்துக்கொண்டு என் காரியத்தை மறந்து நின்றேன். எடுத்த மலர்கள் போதும். காலதாமதமில்லா மல் ஆசிரமம் செல்லவேண்டும். (கொஞ்சதூரம் சென்று மறுபடியும் திரும்பிப்பார்த்து, மனத்துள்) இவர்கள் வந்தகாரணம் இன்னதென்று

அறியவேண்டாமா? அந்த மடவன்னத்தைப் பெற்றெடுத்த பெருமானைக் கண்ணால் பார்ப்பதும் ஆனந்தமல்லவோ? (சாவித்திரியையும் நீதிமதியையும் பார்த்து) என் கண்களே? நீங்கள் காட்டுவது மெய்தானோ? அந்த மாதைவிட்டு இனி அகல்வீர்களோ?

நீதி: (அசுவபதியை நோக்கி) என் தந்தையே! நமது முன்னாக இருப்பதுதான் துமதசேன ராஜனுடைய ஆச்ரமம். இவ்விடத்தில் எங்குமில்லாத சாத்துவிக குணம் நிறைந்திருக்கின்றது.

கலித்துறை.

வீரவென் றழைக்குமிக் கிள்ளைகள் நல்லுற வாயிருந்து
போரவென் றுரைப்பன போற்சிற் காட்டுமிப் பூங்குயில்கள்
மாவிங் கமர்ந்தனள் நம்மெதி ராகியிம் மான்களன்பாய்க்
கூவுஞ் சிறப்பினை நோக்கிட வேண்டும்கண் கோடிகளே. (54)

அந்த துமதசேனராஜன்
னுகையால் அவன் வாசஞ்செய்கின்ற இந்த வனத்தில் தர்மம் மிகவும் நிறைந்திருக்கின்றது. இதோ! அந்தப் பெண்புலியானது தாயை விட்டுப் பிரிந்த இளமானுக்கு முலைகொடுத்துப் பாலூட்டிவளர்க்கின்றது. அதோ பாரும்! மந்தியானது அந்தச் சிறிய கிளிபிள்ளை மேனியில் வெயில் படாதவண்ணம் இலைகளால் மறைத்துக்கொண்டு நிற்கின்றது. (சத்தியவானைப் பார்த்து,) ஐயா, என் அண்ணலே! கும்பிடப்போன தெய்வம் குறுக்கிட்டதுபோல அரசன் மகனாகிய சத்தியவானை நமது வழியிலேயே பார்த்துவிட்டோம். இவர்தாம் நமது சாவித்திரியுடைய கவுரவத்தைப் பாதுகாத்தவர். இவருடைய அழகையும் சௌரியத்தையும் கண்டுதான் நமது சாவித்திரியானவள் முதலில் மையலின்னதென்று உணர்கின்றாள்.

கலி விருத்தம்.

அன்ன மற்றனள் நங்குயி லாசையோ
டின்னு வன்குண மெய்யெழி லெண்ணலால்;
மன்ன! திங்க ளெரித்திட, வாட்டியே
தின்னு மேயவ ளைச்சிறு தென்றலே. (55)

அசுவ: நீதிமதி! அளவற்ற ராஜபோகத்துக்குச் சாதனமான அவயவ ரூபலாவண்ணியமும், பிரகாசமுள்ள வைதிகஸ்ரீ நிறைந்த சிந்தையும் அவனிடத்தில் விளங்குகின்றனவே. இந்தக் கோமகனைத் தானோ நமது கண்மணியாகிய சாவித்திரி கணவனாக வரித்தாள். என்

குலமானது இன்றே என்றும் பெறாத சிறப்பையடைந்தது. என்னுடைய பிதிர் தேவதைகளும் ஒப்பில்லாத சந்தோஷத்தை அடைந்தார்கள். என் கண்களும் அவைகளுண்டானதற்குப் பயன்பெற்றன.

அறுசீர் விருத்தம்.

கனைத்திடு மேகந் தன்னைக் கண்ணுறுந் தோகை யொக்க,
வனப்புறு மதியங் கண்டே மலருநற் குவளை யொக்கக்,
கனத்தபொன் புதையல் வாய்ந்த மிடியர்தங் கருத்தை யொக்க,
மனக்குறை யொழிந்தே னின்னோன் மலர்முகங் கண்ட போதே. ()

(சத்தியவானை நோக்கி) ஐயா! துமதசேன ராஜனுடைய கண்ணினுக்குக் கண்ணே! எங்கும் நிறைந்த சர்வேசுரனுடைய அருள் பெற்று நீடூழிவாழ்வாயாக. (அவன் கையிலிருந்த குடலையின் மலர்கண்டு) அழகெல்லாம் ஒன்றாக நிறைந்த சமுத்திரமே! அறிவினால் பிரமனையும், அருளினால் கேசவனையும், விக்ஞானத்தினால் சம்புவையும் ஒப்பாக உடைய நீயும் எந்தத் தெய்வத்தைப் பூஜிக்கின்றாய்? எதற்காக இந்த மலர்களைக்கொய்து மலரினும் மிருதுவான உன் கையால் இக்குடலையைத் தாங்குகின்றாய்?

அறுசீர் விருத்தம்.

மாசகல் குமரன் போல வனப்பெலாம் மருவி, மேலாம்
தேசமோ டருளு மன்பும் நியமமும் பெருகும் நீதான்
வாசியாய்ப் புரியும் பூசை யின்னதென் றறியேன்; மைந்த!
பூசைநீ புரியப் பூசை புரிந்திடும் பூசை யென்னோ? (57)

நீதி: மன்னவன் மைந்தனாகிய மகாரிஷியே! நானும் என் சகியாகிய சாவித்திரியும் உம்முடைய தாய்தந்தைகளாகிய புனிதர்களுக்கு வந்தனம் செய்கின்றோம்.

சத்தி: (மனத்துள்) சந்திரிகைக்கு முன்னாக விளங்கிவரும் சந்தியைப்போல இம்மாது என்மனத்துக் கமுதம்போன்ற கண்மணியை அழைத்து வந்திருக்கின்றாள். பெண்ணரசே! நீ இது செய்ததற்காக உன் தாய்தந்தைகளுக்கு இதோ கோடி தண்டம் சமர்ப்பிக்கின்றேன். (பிரகாசம்) மலர்மங்கை போன்ற மின்னார்களே! அன்றுமுதல் சுகமாக இருக்கின்றீர்களா? பார்வதியைப் பெற்ற இமயவன் போல உன் சகியாகிய சாவித்திரியைப் புதல்வியாகக் கொண்ட மன்னர் மன்னவன் இப்பாக்கியவான்தானா? (அசுவபதியை நோக்கி) ஐய! உமக்கு வந்தனம்; அரசர்களுக்கெல்லாம் திலகம்போன்ற பெருமானே! நீர் எவருக் கருள்புரிய இவ்வனத்துக்கு வந்தீர்?

கலி விருத்தம்.

தங்கு நற்றர ளந்தனை வாரியே
துங்க மாம்புன லோடைகள் தூற்றிடத்
தெங்கு சேர்ந்திடு முன்றிரு நாடுவிட்
டிங்கு நீவர வெந்தவம் செய்தனம்? (58)

அசுவ: கேளும், தூய்மை நிறைந்த எழிற்கடலே! எனதருமைப் புதல்வியாகிய சாவித்திரி, உம்மை, இகத்துக்கும் பரத்துக்கும் உதவியான கணவனாக வரித்தாள். அவள் உமது பொருளாகையால் உம்மிடத்தில் அவளை ஒப்புவிக்க வந்தேன். அவளை நீர் அன்புகூர்ந்து கைக்கொள்ளவேண்டும்.

சத்தியவான்: (புளகம் அபிநயித்து மூக்கின்மேல் விரல்வைத்து,) இதென்ன ஆச்சரியம்! அகண்ட மண்டலாதிபதியாகிய உமது கண்மணியை, ஒன்றுமில்லாது வனத்தில் தவம்புரியும் நான் மனைவியாகக் கொள்ளுதல் நீதியா? நான் அவளை மணம்செய்தால் உலகம் முழுவதும் நகையாதா? கண்ணில்லாத தாய் தந்தையர்களுக்குப் பணிவிடை செய்வதுதவிர வேறொரு செயலையும் அறியாத நான் அரசன்மகளை விவாகம் செய்யலாமா? சுகமனைத்தும் துறந்த எனக்கு உமது மகள் எப்படிப்பொருந்துவள்?

அறுசீர் விருத்தம்.

மெல்லிய மலரிற் சீரா மேனிய ளுமது செல்வி,
புல்லினி லமர்ந்து நாளும் புரிந்திடுந் தவமு ளேன்யான்,
எல்லையி லிவள்தன் சிந்தைக் கிசைவனோ எளியேன்? கேட்போர்க்
கில்லையென் றுரையா திட்டே இசைபெருக் கியபூ மன்னா! (59)

நானிருப்பது காடு, நான் உண்பது காய் கிழங்கு. தந்தைதாயர்க்குப் பணிவிடை செய்து சுகம் முழுவதையும் வெறுத்த துறவியாயிருக்கின்றேன். சுகத்திலே பிறந்து சுகத்திலே வளர்ந்துவரும் உமது புதல்விக்கு நான் உசிதமான நாயகனல்லேன். நாங்கள் தம்பதியாக இருக்கில் அவளுக்கும் சுகமில்லை. அவளை விவாகம் செய்வது எனக்கும் நியாயம் அன்று. அரசனே! இனி நீர் அவ்விதமான எண்ணம் கொள்ளவேண்டாம்.

சாவி: (மனத்துள்) என் சுகமே உருவாக அமைந்த எழிற்கடலே! எனக்கு உம்மையன்றி வேறு என்ன சுகமிருக்கின்றது? ஒருகால் நீர் என்னைக் கைக்கொள்ளாவிடில் என் உடலை விட்டு விடுவதும் ஒரு சுகம்தான்.

நீதி: (தனித்து) சகி! என்னவிருந்தாலும் புருஷர்களுடைய கபடம் அளவற்றது. இந்தச் சத்தியவான் எவ்வளவு வைராக்கியத்தோடு பேசுகின்றார். உன்னை இவர் அன்று பார்த்தது முதல் இவர் உடலானது உன் நினைவையே உணவாகக்கொண்டு வளர்ந்தமையால் உன்போலும் இளைத்திருக்கின்றது. உன் கீர்த்தியையே இவர் நினைந்திருப்பதால், அதுபோல இவர் முகமும் வெளுத்திருக்கின்றது. உன் நினைவா லிவருறங்கவில்லையென்று இவரது கண்கள் புகலுகின்றனவே.

அசுவ: மைந்த! நீர் அப்படி யுரைப்பது நீதியன்று. உம் நினைவென்னும் உறுதியால் என் புதல்வி உயிர்தரித்திருக்கின்றாள். உம்மையும் உம் குணங்களையுமன்றி வேறொரு பொருளையும் அவள் மதியாள். சுகம் இத்தன்மையதென்பதை என் புதல்வி நன்றாக அறிந்தவள்.

கலி விருத்தம்.

பற்று நல்லர சாட்சியும், பாண்மையோ
டுற்ற மாதரும், ஓம்பிடு செல்வமும்,
சற்றும் மாளிகை யுஞ்சம மாகுமா?
நற்ற வத்திரு வுக்கு நவின்றிடாய். (60)

அன்பே யுருவாக வமைந்த செல்வனே! என் புதல்வியை இப்போதே உமது கையில் ஒப்புவிக்கின்றேன். நீர் அவளை மணந்து இவ்வுலகின்கண் புரந்தரனும் சசிதேவியும்போல நீங்கள் வாழ்வீர்களாக.

சத்தி: ஐய! நானினி என்ன சொல்லத்தக்கது?

அறுசீர் விருத்தம்.

வந்திடும் அமுதம் வேண்டா தொழித்திடும் மதிய ருண்டோ?
அந்தமா யணுகும் பூமா தகன்றிட உதைப்பா ருண்டோ?
சிந்தையிற் கினிய ளாம்நின் செல்வியை யேற்க வென்றன்
தந்தைதா யிசைவ ரென்னில் தமியனுக் கதுமே லாமே. (61)

அசுவ: மைந்த! நீர் உரைத்தது மிகவும் குணமாயிருக்கின்றது.

சத்தி: ஐய! சமீபத்தில்தான் என் தாய்தந்தையருடைய ஆச்ரமமிருக்கின்றது. நீர் அங்குவந்து எங்களுடைய பூஜையைப் பெற்றுக்கொண்டு பிறகு உம்முடைய மன அபீஷ்டத்தை அவர்களிடத்திற் சொல்லலாம். அவர்கள் அதை அங்கீகரிப்பராகில் நீர் இப்போது சொன்ன மொழியை என் சிரசால் வகித்து நடக்கின்றேன். நீரும் உமது புதல்வியரும் எங்கள் ஆச்ரமத்துக்கு எழுந்தருளவேண்டும்.

அசுவ: மைந்த! அப்படியே செல்வோம்.

[எல்லோரும் மறைதல்.]

# பிரவேசகம்.

—:o:—

## சங்கீதம்.

[கத்துரு என்னும் அப்ஸரஸ்திரீ தோன்றுதல்.]

**கத்துரு:** (மனத்துள்) தேவர் கோனாகிய இந்திரனுடைய ஆக்ஞைப்படி சாவித்திரியுடைய கல்யாண காலத்தில் அவளுக்கும் அவளுடைய நாயகனுக்கும் மலர்மழை சொரிந்து ஆசீர்வதிப்பதற்காக எனது அன்பனாகிய விநதசேனன் இப்பூவுலகுக்கு வந்தார். அப்படி வந்து பத்துத் தினங்களாகியும் அவரின்னும் திரும்பிவரவில்லை. மதனன் புருஷனாகையால் புருஷர்களை வருத்தாமல் மாதர்கள் மேலே மட்டும் அம்புகளை யெய்து பாரபக்ஷம் செய்கின்றான். அவனை அரன் கொளுத்தியதுபோல் உமையவளும் ஒரு தரம் கொளுத்தினாலல்லவோ மாதர்களிடத்திலும் புருஷர்களிடத்திலும் அந்த மீனகேதனன் சமமாக நடப்பன். ஐயோ! பேதைமை நிறைந்த மாதர்கள் என்றைக்கு ஒற்றுமையாக நடக்கப்போகிறார்கள்?

[விநதசேனன் தோன்றல்.]

**விநத:** (மனத்துள்) அட, அட! அத்தம்பதியின் அழகையும் அவர்களின் ஒற்றுமையையும் பார்த்துப்பார்த்து என் மனத்தில் பெருகி ஓடின ஆனந்தவெள்ளத்தில் நான் முழுகி யாவற்றையும் மறந்தேன். என் அறிவுக் கமுதம்போன்ற கத்துருவையும் மறந்தேன். (கத்துருவை நோக்கி,) என் கண்ணே! நானிவ்வளவு காலம் வாராதிருந்ததினால் உன் மனம் வருத்தமடைந்ததோ? (கத்துருவைத் தழுவி) கண்மணியே! அந்தச் சாவித்திரியினுடைய மணக்கோலத்தைப் பார்ப்பதற்கு என் இரண்டு கண்களும் போதாதிருந்தன.

**கத்துரு:** நண்ப! உனக்கு நாலுகண்களுண்டே, இந்தக் கண்களும் உன்னுடையவையல்லவோ. அவைகளையும் நீ கொண்டுபோயிருக்கலாமே. கலியாணம் முடிந்ததா? சாவித்திரியைப் பெற்றவர்களும் மற்றவர்களும் திரும்பித் தங்கள் தேசம் போய்விட்டார்களா?

**விநத:** அன்பே! கலியாணம் முடிந்து எல்லாரும் போய்விட்டார்கள்.

**கத்துரு:** நாத! அசுவபதிராஜன் மிகவும் ஐசுவரியம் நிறைந்தவனாயிற்றே. மிகவும் வைழயாகிய சாவித்திரிக்கு என்ன நற்கொடைகள் கொடுத்தான்?

விந்த: கண்ணே! அந்தப் புதுமையை நான் என்னென்று சொல்வேன்? தன் இராஜ்யத்திற் பாதியையும் சாவித்திரியை நிறுத்து அவள் நிறையைப் போல முப்பது பங்கு நிறையுள்ள கனகத்தையும் அசுவபதி கொடுக்கவந்தான். அவைகளைச் சாவித்திரி கைக்கொள்ளா மல் தன் தந்தையை நோக்கி மிகவும் விந்தையா யுரைத்தாள்.

கத்துரு: அவள் என்ன சொன்னாள்?

விந்த: அவள் அசுவபதியை நோக்கி, "என்னை ஈன்றெடுத்த ஐயனே!

வெண்பா.

என்னூர் கணவற் கிருப்பதே என்றேட்டம்,
தின்னு தவன்கழிக்கும் தெள்ளமுதே—பன்னாளும்
நல்லுணவு, நீயுதவும் நற்கொடைக ளென்விணையை
வெல்லவித மாமோ விளம்பு?" (62)

என்று மனங்களித்துச் சொன்னாள். அது மட்டுமா? தானுடுத் திய ஆடைகளையும் தான் அணிந்த ஆபரணங்களையும் அங்கு வந் திருந்த ஏழைகளுக்குத் தானம் செய்துவிட்டுத் தன் கணவனையும் மாமன் மாமியையும்போல மரவுரியைத் தரித்திருக்கின்றாள். அவ ளுடைய மாமன் மாமிக்கு அவளும் அவளுடைய புருஷனும் மனங் களித்துச் செய்யும் கைங்கரியங்களை என்னால் உரைப்பதரிது.

வெண்பா.

அம்மணியும் அப்புனித ஆண்டகையும் அன்புருகிச்
செம்மையொடு பெற்றோர் திருவடிமேல்—அம்ம! நிதம்
பண்ணும் பணிகாணிற் பற்றியினி வாராதுன்
கண்ணிரண்டு மங்குறையுங் காண். (63)

கத்துரு: கேட்கக் கேட்க மிகவும் ஆனந்தமா யிருக்கின்றது. நம்முடைய கிருகத்துக்குச் செல்வோம்.

விந்த: இன்னும் அங்கு நடந்த விந்தைகளை உனக்குப் பின்பு உரைப்பேன். நமது மனைக்குப் போவோம்.

[மறைதல்.]

உ

அம்பிகை துணை.

# ஐந்தாவது அங்கம்.

சங்கீதம்.

[சத்தியவான் தோன்றல்.]

சத்தி: (மனத்துள்) எனக்கு அறிவும் இரண்டாகவும் உடலும் இரண்டாகவும் இருக்கின்றன போல் தோற்றுகின்றது. என் தந்தை தாய்க்குச் செய்யவேண்டிய பணிவிடைகளை யெல்லாம் என் கண்மணியாகிய சாவித்திரி ஒப்புக் கொண்டுவிட்டாள். அட, அட! என்ன ஆச்சரியம்! அந்தப்புரத்திலிருந்து ஐம்புலன்களின் வழியேசென்று சுகங்களைமட்டும் மேலாகக்கொள்ளும் ஜாதியிற் பிறந்த அந்தப் பெண் குயிலுக்குத் தருமங்களெப்படித் தெரிந்தனவோ? வேதார்த்தங்களையும் தெரிந்திருக்கின்றாள். சாஸ்திர முறைகளில் அவளுக்குத் தெரியாதது ஒன்றையுங் காணேமே. கண்கள் தெரியாவிட்டாலும் அவளுடைய குணங்களை உரைத்து உரைத்து என் அன்னையும் பிதாவும் அளவற்ற ஆனந்தத்தை அடைகிறார்கள்.

அறுசீர் விருத்தம்.

குற்றம்பே ரிடினு மாய்ந்தே குணமெனக் கருது மீன்றோர்,
பற்றிலா வறிவு, நன்றே பகருநல் லரிய நண்பர்,
பெற்றவர் மனமு வக்கும் பேதையா மனைவிநான்கும்
உற்றிடி னுலகு மாந்தர்க் கும்பர்நாட் டினுமே லாமே. (64)

[சாவித்திரி தோன்றல்.]

சாவி: என் அன்ப! என் மாமியும் என் மாமனும் இடைவிடாது என்னோடு அன்புடன் வசனிக்கிறார்கள். நான் ஒருநாளும் உணவு சமைத்தறியாதவளாக இருக்க, நானிடும் உணவு தேவாமிர்தமென்கிறார்கள். ஞானமும் நீதியும் உருவுடன் வந்தனபோல் விளங்குகின்ற உமது தந்தையையும் தாயையும் மாமனும் மாமியுமாக அடைய நான் புரிந்த பூஜை எத்தன்மை யுடையதோ?

சத்தி: என் கண்ணே! பயோநிதியின்கண் உதித்த லக்ஷ்மி போல், ஐசுவரியம் நிறைந்த மன்னன் குலத்திற் பிறந்த நீ வறுமை

நிறைந்த என் குடிசையிற் புகுந்தனை; உனக்கினிய பொருள் இங்கே என்ன இருக்கின்றது? யௌவனம் நிறைந்த சிறிய மாதர்களுக்கு, உடல் நிறைந்த ஆபரணங்களும், பெட்டி நிறைந்த தனமும், ஏவல் புரியும் வேலைக்காரர்களும் முக்கியமாக விருப்பமுள்ளவைக ளல்லவா?

சாவி: என் உயிர்க்குயிர் போன்ற அன்பனே! நீ யறியாதது என்ன இருக்கின்றது? ஆபரணத்தையே மேலாக நினைக்கும் பேதை கணவனுடைய ஐசுவரியத்தையும், தனத்தையே மேலாக நினைப்பவள் கணவனுடைய மானத்தையும், ஏவலாட்களை விரும்புகின்றவள் கணவனுடைய சுகத்தையும் அபகரிக்கின்றாள். ஒரு குலமகளுக்கு ஆபரணங்களி லிச்சையுண்டாகி விட்டால், அவள் கணவனுக்குப் பிச்சையும் அரிதாகிவிடுமே. அவளுக்குப் பணத்தில் ஆசையும், திரவியத்தைத் தானகவே கொடுத்து வாங்குவதில் மகிழ்ச்சியும் உண்டாகி விட்டால் அவள் பொதுமகளிலும் கேடு கெட்டவள். அவளை மணஞ் செய்வதிலும் ஒருவன் ஒரு மரத்தையை மணம் புரியலாம். அவளைக் கலியாணஞ் செய்த புருஷனும் ஒரு பிணம்போல் ஆவான். ஏவலாட்களை விரும்புகின்றவளா புருஷனுக்குப் பணிவிடை செய்யப் போகின்றாள்? அவள் தன் சுகத்தையே மேலாக நினைத்துத் தன் கணவனுக்கு உண்ணவும் ஒரு பிடி சோறு உதவாத பேயாக இருப்பாள். உன் அன்புதான் எனக்கு ஆபரணங்களாகவும் நீயே எனக்குக் குறைவற்ற தனமாகவும், உனக்குப் பணிவிடை செய்யும்படியாக முன்னமே புண்ணியங்களைப் புரிந்திருக்கின்ற என் கை முதலிய அவயவங்களே எனக்கு ஏவலாட்களாகவும் இருப்பதால் எனக்கு என்ன குறை யிருக்கின்றது?

சத்தி: கிளியே! என்ன இருந்தாலும் என் வீட்டில் சகல வேலைகளையும் நீயே செய்வது தகுதியா? சர்க்கரைப் பாத்தியில் தேனைப் பாயவைத்து வளர்த்த கற்பகக் கன்றை முள்வால் நிறைந்த தோட்டத்துக்கு வேலியாக வைத்ததுபோல் மலர்போலும் மிருதுவாகிய உன் அவயவங்களை வனத்தில் வாசஞ் செய்யும் எங்களுடைய மனைத் தொழிலில் உபயோகிக்கின்றாய். உன்னுடைய மெல்லிய சுபாவத்தைத் அன்று நீதிமதி எனக்கு உரைக்கவில்லையா?

அறுசீர் விருத்தம்.

மெல்லிய இதழ்கள் சேர்ந்த மெத்தையி லுனையுன் னேவல்
வல்லியர் நடத்தும் போதவ் வன்மைதாங் காம லுன்றான்

செல்லவெண் ணுதுன் மன்றற் செங்கையோ கமலந் தன்னைப்
புல்லவே சிவக்கு மென்னில் பூவையுன் மேனி யென்னும்? (65)

சாவி: பாவமிகுதியால் அமைந்த பெண்பிறவிக்குக் கணவனுடைய வீட்டிற் பணிவிடை செய்வதிலும் வேறு என்ன தருமமிருக்கிறது? என்னகருமத்திஞல் நாராயணிக்கு மதுசூதனனே உடற்பிறந்தாருகவும், ஐந்து இந்திரர்களே ஐந்து கணவர்களாகவும், ஐந்தாவது வேதமென்னும் பாரதம் அவள் மேன்மையைப் புகழும் நூலாகவு அமைந்தன? மேலும்,

கலி விருத்தம்.

கொய்யும் நன்மலர் கொள்ளுவ தெப்பயன்
ஐயன் பூசை தனக்குத வாதெனில்?
துய்ய உம்மனை வேலே தொடாதவென்
பொய்யு மேனி யிருக்கிலென் போயெனும்? (66)

சத்தி: என் தந்தைதாயர்க்குப் பணிவிடைகளெல்லாம் நீயே புரியின் நானுடலெடுத்ததற்குப் பயன் வேண்டுவதில்லையா? அவர்களுக்கு ஸ்நானஞ் செய்விப்பதும் உன் வேலை யென்கின்ருய். அவர்களுடைய பூஜைநேரத்திலும், அவர்களுண்ணும் பொழுதும், அவர்களருகிலிருந்து எல்லாக் கைங்கரியங்களையும் நீயே செய்ய வேண்டுமென்கிருய்.

அறுசீர் விருத்தம்.

நுண்ணிய மலரார் கல்லே நுணுக்குதல் போல என்றன்
கண்மணி! இதழ்நே ருன்றன் கையினுற் பணிய னைத்தும்
பண்ணுத லுசித மாமோ? பாவையே! யெனையின் ருேரை
நண்ணியே பணியிற் கொஞ்சம் நானுமே செயவி ணங்காய். (67)

(திடுக்கிட்டு) அன்னமே! என் தந்தை என்னை அழைக்கிருர். நான் போய்வருகிறேன்.

[மறைதல்.]

சாவி: (மனத்துள்) ஐயோ! எனக்கு இப்போது கிடைத்த மகாபாக்கியமானது இதற்கு முன்னே கிடைக்கவில்லையே. நான் புரிவதனைத்தும் புண்ணியமாகவும், நான் உணர்வதனைத்தும் ஆனந்தமாகவும் இருக்கின்றனவே. எனக்குக் கிடைத்திருக்கும் நிலைமையானது உயர்ந்த பரமபதம்போலும் இருக்கின்றது.

எழுசீர் விருத்தம்.

நீதியென் மாமன்; மாமியோ கருணை
நிதி; யெனைக் கொண்டநா யகனோர்
கோதிலா வமுதம்; நிதமவர் புரிதல்
குறைவிலா நறறவம்; தினமும்
சூதுசெய் பொறியின் வினையகற் றிடுமித்
தூயநற் சோலையெம் மில்லம்;
ஆதலால் யானிங் குற்றவாழ் வதுபோ
லார் அடைந் தார்சகந் தனிலே? (68)

பிராரப்தகருமத்தினு லுலகத்திற் பிறக்கின்றோம். ஒன்றுமறியாத குழந்தை ஒன்றைச் செய்யுமாறு உனக்குப் பழமும் தேனும் சர்க்கரையும் தருகிறேனென்று ஒருவர் பொய்யாக உரைக்கும்போது அக் குழந்தைக்கு மிகுந்த சந்தோஷம் உண்டாகி ஏவினதை அக்குழந்தை செய்வதும், அது ஒன்றைச் செய்யாதிருக்குமாறு இதோ புலிவருகிற தென்று பொய்யாக வுரைக்கும்போது அக்குழந்தைக்குப் பயத்தினுல் துக்கமேலிட்டுத் தடுத்ததை அது செய்யாதிருப்பதும், நம்மால் பார்க் கப்படுகின்றன. அவ்விதமாகவே அவிவேகிகளாகிய மானிடர்களுக்கு அவர்களுடைய இந்திரியங்கள் உண்மையில்லாதவைகளை உண்மை யுள்ளவைபோற் காட்டி வீணுகச் சுகம் போலவும் துக்கம்போலவும் பொய்யான தோற்றங்களை உண்டுபண்ணுகின்றன. பொய் வசன மென்று குழந்தை அறியாததுபோல இந்திரியங்களின் மோசத்தை அவிவேகிகள் அறிகிறதில்லை. அந்த மோசத்தினு லமையும் விகாரங்க ளல்லவோ நம்மைச் சுகிகளாகவும் துக்கிகளாகவும் இருக்கும்படி பேதம் செய்தன. அந்த விகாரங்களுக்குக் காரணமாகிய இந்திரியங்களை ஒடுக்குவதுதான் மானிடப் பிறவிக்குப் பயன். அந்தப் பயனை நான் அங்குமிங்கும் தேடித் திரியாமலும் பிறர்களை நாடி வேண்டுவதின்றி யும் என் அகத்திலேயே நான் அடைகின்றேன்.

[சத்தியவான் தோன்றல்.]

சத்தி: (சாவித்திரியைத் தழுவி) அன்னமே! தினமும்போல நான் காடு சென்று என் தந்தையின் பூஜைக்கு வேண்டிய மலர்களும் தழைகளும், நாம் உண்ணுதற்கினிய கந்தமூலபலங்களும் கொண்டு வருகிறேன். நீ இங்கே யிருந்து உன் மாமன் மாமியர்களைப் பார்த் துக்கொள்.

சாவி: என் உயிர்க்குயிரே! என் மனமும் என் கண்களும் உன் கூடவே வந்துவிடுகின்றனவே. நான் இங்கே சுழுப்தி செய்கின்ற வள்போல் இருக்கின்றேன். நீ போய்ச் சீக்கிரம் வரவேண்டும்.

சத்தி: தாமசமின்றி வந்துவிடுகிறேன்.

[மறைதல்.]

சாவி: (அவன் செல்லும் வழிநோக்கி அஞ்சலிசெய்து, மனத்துள்)

வெண்பா.

மாந்தர்க் கருளும் வனதே வதைகாள்! என்
காந்தன் வருகுவன்றும் கானகத்தில்—சாந்தநிறை
நல்லழக னைத்தீது நாடா துயிர்காக்க
நில்லு மவன்மருங்கே நீர். (69)

சங்கீதம்.

(அங்குவரும் கிளியை முத்தமிட்டு) கிளியே! நானும் என் கணவனும் இரவில் பேசிக்கொள்ளும் வசனங்களைக் கூசாமல் என் மாமன் மாமியோர் முன்னர் புகலுகின்றாயே; உன் வாய்க்கொழுப்பை என்னவென்று உரைப்பேன்?

கிளி: (பறந்து தூரநின்று)

வெண்பா.

தெள்ளமுதே! யன்பு சிறிதேனு மின்றியெனைக்
கள்ள மதன்கையிற் காட்டினாய்—ஒள்ளுமுயர்
உன்கை யடியுற்றா லுண்டே கதி; மாற்றான்
புன்கையடி நன்றோ புகல். (70)

சாவி: (கிளியைப் பிடித்து, அதனுடைய வாயை மூடி, மனத்துள்) இதென்ன அநியாயம்! அன்று இரவில் நான் கொஞ்சம் ஊடலினால் என் நாயகனை விட்டுப் பிரிந்து கோபித்திருந்தபோது, அவன் எனக்குச் சமாதானமாகும்படியாக உரைத்த அன்பான வசனங்களை வாய் பழகி நீ உரைக்கின்றாயே. நல்லவேளை; அதை இங்கொருவரும் கேட்கவில்லை.

[சத்தியவான் தோன்றல்.]

சத்தி: கண்மணியே! நான் அந்த வசனங்களைக் கேட்டுக் கொண்டுதான் வந்தேன். நீ அந்தக் கிளியின் வாயை விட்டுவிடு. நீ பிந்தியுரைத்த தேன்போன்ற மொழிகளையும் அக்கிளி சொல்லட்டும்.

சாவி: (அவன் கொண்டுவந்த மலர்களையும் கனிகளையும் வாங்கிக் கொண்டு) அன்ப! நான் இவைகளைப் பூஜைமனையிற் கொண்டுபோய் வைக்கிறேன்.

[மறைதல்.]

சத்தி: (மனத்துள்) இம்மடக்கொடி யென்னைப் பவரோயினி ருந்து விடுவிக்கவந்த அவுடதமா? கர்மபூமியாகிய இவ்வுலகத்தினின்று பரமபதத்துக்கு நான் ஏறுவதற்காக அமைந்த ஏணியா?

அறுசீர் விருத்தம்.

அன்புகூர்ந் திடலி லன்னை, அறமியற் றிடலி லில்லாள்,
துன்புபோக் குவதிற் றெய்வம், தோன்றும்நன் மதியில் வாணி,
இன்பமீந் திடலில் மேலாம் ரதி, யென விவளி ளங்க
முன்புயான் புரிந்த தென்னும்? மொழிந்திட வறிகி லேனே. (71)

எல்லாக் குணங்களும் பொருந்திய மடக்கொடி ஒருவனுக்கு இல்லாளாக அமைந்தால் நல்லறங்களைச் செய்வதால் பூவுலகத்திலும், சுகத்தை மேலாக அநுபவிப்பதால் சுவர்க்கலோகத்திலும், வைராக்கியம் மேலிடப் பரம்பொருளின் ஸ்வரூப மின்னதென்று தோன்றுவதால் பிர்மலோகத்திலும், அவன் ஒரே சமயத்தில் இருந்துகொண்டிருக்கின்றான். அவனிடத்தில் லோகோபகாரத்தை யுடைய இல்லறமும், அறத்தின் பலப்பிராப்தியாகிய சுவர்க்கானுபவமும், வினையொழிந்த நிலையாகிய பிர்மலோக பதவியும் கலந்து விளங்கிக்கொண்டிருக்கும். ஆனால், இல்லறத்துக்குரிய பந்தமாவது, சுவர்க்க போகத்துக்குரிய பரிமாணமாவது அவனிடத்திலிராது. துறவியாயிருப்பவன் உலகவாழ்க்கையினின்றும் பொருளினின்றும் விலகியிருப்பான். ஆனால் உத்தம நாயகியையுடைய கிருகஸ்தனானவன் பரம்பொருள் போலவே பற்றின்றி எல்லா வாழ்க்கையிலும் பொருளிலும் தாமரை யிலையின் தண்ணீரெனக் கலந்திருப்பான். இவன் துறவியிலும் மேலானவன். நான் சாவித்திரியை மணம்புரிந்து பதினொரு மாதங்களும் சில நாள்களும் ஆகிவிட்டன. இந்த மத்தியகாலத்தில் நானும் என்னை ஈன்றோர்களும் அவளாலடைந்த சௌக்கியத்தையும் ஆனந்தத்தையும் இவ்விதமென்று சொல்லுவதரிது. அவள் என்ன காரணத்தினாலோ நேற்றும் இன்றும் உபவாசமா யிருப்பதுடன், வழக்கத்துக்கு அதிகமான காலம் தியானத்திலு மிருந்துகொண்டிருக்கிறாள்? ஆனால் அது ஆச்சரியமில்லை. நல்ல குலத்திற் பிறந்த மங்கைக்கு விவேகம் மட்டும் இருந்துவிட்டால் அவளுரைப்பதெல்லாம் நீதியாகவும் அவள் செய்வதெல்லாம் தவமாகவுமே யிருக்கும்.

வெண்பா.

சாந்தம் பொறுமை தயையினிய சொல்நாணம்
காந்தன் மிசைதீராக் காதலொடு—சேர்ந்ததுகைக்
கொண்டே மகிழுங் குலமக ளோச்சிறிது
கண்டாலும் போமே வலி. (72)

என் தந்தை பூஜைபுரியும் காலம் இதுவாகையால் நான் அவர் பக்கத்திலிருந்து பணிவிடை செய்யவேண்டும். என் கண்மணியாகிய சாவித்திரி உபவாசத்தினால் மேனி வாடியிருக்கிறபடியால் என் தந்துச் செய்யவேண்டிய கைங்கரியங்களைப் பெரும்பாலும் நானே வண்டும்.

[மறைதல்.]

உ

அம்பிகை துணை.

# ஆறாவது அங்கம்.

சங்கீதம்.

[ சாவித்திரி தோன்றல். ]

**சாவி:** (மனவருத்தம் அபிநயித்து) இந்த உலகத்தின் வாழ்வு அவ்வளவுதான்!

அறுசீர் விருத்தம்.

மானிடப் பிறவி நீர்மேல் வருமொரு குமிழி போலாம்;
ஊனுடல் இளமை வாழ்க்கை உறுதியில் லாத கானல்;
வானருஞ் செல்வம் தோன்றி மறைந்திடு மின்னல்; ஒக்க
ஏனிவை சிறிது மெண்ணு தேங்குவார் ஞாலத் தோரே? (73)

நாரதமகாமுனிவ ருரைத்த காலமானது வந்துவிட்டது. இன்று தான் அவருரைத்த கடைசிநாள். அவர் சொன்னபோது பதினோரு மாதங்க ளிருக்கின்றனவென்று தைரியங் கொண்டேன். அவைகள் சடிதியிற் கழிந்தன. அம்முனிவ ரொருவாறு தேற்றமும் உரைத் தருளி யிருந்தாலும், என் மனம் இன்று சஞ்சலப் படுகின்றதே. ஐயோ, நானென்ன செய்வேன்! பெரிய பாக்கியத்தைப் பெற்று இழப்பவரைக் காட்டிலும் பெறாதவர்களே மெத்தவும் சுகிகள்.

அறுசீர் விருத்தம்.

மகவிலார் நல்லோர் வாய்ந்த மகவினை யிழப்பார் தம்மின்;
தருபொரு ளொழிந்திட் டாரிற் றளர்ந்திடும் மிடியர் மேலாம்;
நிகரிலாக் குணம மைந்த நேயனோ டிந்நாள் வாழ்ந்திட்
டிகமதி லவனைப் பிரிந்தே யென்றுநா னிருப்ப னம்மா? (74)

இன்று வரும் கொடிய விபத்தை நினைக்க நினைக்க என் மனம் பதறுகின்றதே! இதைக் கேட்டால் என் கணவனுடைய சிந்தை வருந்துமாகையால் இதை நான் அவருக்கு உரைக்கவில்லை. இதை என் மாமன் மாமிமாரும் அறியார்கள். அவர்கள் கருணாநிதிகளான தால் என் கணவனுடன் நானும் இன்று காட்டுக்குச் செல்லவேண்டு மென்று நான் கேட்ட வரத்தை அளித்தது மல்லாமல், 'தீர்க்க சுமங்

கலியாக வாழ்வை' யென்று அமிர்தமழை பொழிந்ததுபோல் ஆசீர் வதித்தார்கள். அவர்களுடைய ஆசீர்வாதமும், நாரதமகாமுனிவ ருடைய கருணை நிறைந்த வரமும் என் அன்பனுடைய உயிரைக் காக் காவோ? (ஆகாசத்தைப் பார்த்து) இப்போது ஒன்பது நாழிகை ஆகின் றது. இன்னும் இரண்டு நாழிகைக்குப் பின் இன்னது வருமென்று தெரியவில்லையே.

எழுசீர் விருத்தம்.

யாருமிங் கடையா வருமைதையான் பெறவென்
றருளினு ளம்மையா ளதனைச்
சீருடன் வெகுநாட் பருகியே மகிழச்
செய்வளோ? என்னரும் வினையின்
கூரினு லினியா காதெனக் கென்றே
கொள்வளோ என்கரம் நின்று?
சேருமென் னோன்பும் நல்குமோ பயனச்
செல்வியின் திருவுள மறியேன். (75)

(இருகண்களிலும் ஜலம் பெருக நிற்கின்ருள்.)

[சத்தியவான் தோன்றல், புஷ்பக் கூடையுடன்.]

சத்தி: (சாவித்திரியை நோக்கி, மனத்துள்) என் கண்மணி ஏன் இப்படி வருந்துகின்ருளோ தெரியவில்லை. மூன்றுநாள் உபவாசத்தி ஞல் அவள் உடல் மெலிந்திருக்கின்றது. என்ன காரணத்திஞல் உப வாசத்தை அனுஷ்டிக்கிருயென்று கேட்டால், எல்லாம் உன்னுடைய நன்மைக்காகத்தான் என்று சொல்லுகிருள். அவளை நான் மணம் புரிந்தபின் அடையாத நன்மை என்ன இருக்கின்றது? (தன் வஸ்திரத் திஞல் சாவித்திரியின் கண்களைத் துடைக்கிருன்.)

(பிரகாசம்) மயிலே! நீ ஏன் வருந்துகிருய்? நீ கண்ணீர் விடுவ தற்கு முகாந்தரமென்ன?

வெண்பா.

அன்னமே! என்றந்தை யன்னை வெகுண்டறியார்;
உன்னறிவு நோக உரைத்தேனே?—என்னுயிரே!
சற்றுநீ வாடிற் சகியா வனவுயிர்கள்
நற்றவத்தா லென்பெறுவேன் நான்? (76)

சாவி: என் அன்பே! இரவில் தனிவழி நடப்பவர்கள் தங்கள் மடியிலிருக்கும் தனத்தின்மேல் வைத்திருக்கும் கருத்திஞல் கவலை கொள்ளுதல்போல் எனக்குக் கிடைத்திருக்கின்ற ஒப்பற்ற நிதியாகிய

நீ எந்நாளும் உயிர்பொருந்தி யிருக்கவேண்டுமே என்கிற கவலையினால் சில சமயங்களில் என் மனம் வாட்டமடைகிறது. அது ஒன்றுதவிர நான் சிந்தைப்படுவதற்கு வேறு என்ன காரணமிருக்கின்றது?

**சத்தி:** உன்னை மனைவியாக அடைந்த எனக்கு என்ன குறையிருக்கிறது? என் தந்தையும் தாயும் உன்னுடன் ஏதோ வசனித்து உன்னை முத்தமிட்டு அனுப்பினார்களே. அதென்ன?

**சாவி:** நேய! நான் இன்று காலையில் செய்த பணிவிடைகளினால் அவ்விருவர்களும் மிகவும் சந்தோஷித்துக், 'கண்மணியே! உனக்கு நாங்கள் என்ன கைம்மாறு அளிப்போம்?' என்று உரைத்தார்கள். 'கருணாநிதிகளே! நீங்கள் என்னைப் பார்க்கவும், உங்கள் புதல்வர் நிறைந்த ஆயுள்பொருந்தி யிருக்கவும் நான் பெற்றால், அதுவே நான் செய்யும் பணிவிடைகளுக்குப் பலனாகும்' என்றேன். அதைக்கேட்டு ஸந்தோஷித்து, 'நீ வேண்டிய வரமொன்று கேள்' என்று அவர்கள் புகன்றார்கள்.

**சத்தி:** நீ கேட்ட வரமென்ன?

**சாவி:** 'இன்று என் கணவனுடன் நானும் காட்டுக்குச் சென்று வர விடைகொடுக்கவேண்டும்' என்று கேட்டேன். அவர்கள் அந்த வரத்தையுமளித்து, 'நீ தீர்க்க சுமங்கலியாய் வாழ்வை' என்று சத்தியம் நிறைந்த அவர்களுடைய வாயினால் எனக்கு ஆசியுங் கூறி என்னை முத்தமுமிட்டனுப்பினார்கள்.

**சத்தி:** என் கண்ணே! மூன்றுநாள் உபவாசத்தால் உன் உடல் தளர்ந்திருக்கின்றது. வெய்யோன் மிகவும் கொடுமையாய்க் காய்கிறான். மார்க்கமும் மிகுந்த சங்கடமுள்ளதா யிருக்கின்றது. நீ காட்டுக்கு எப்படி வர முடியும்?

**சாவி:** பெரியோர்கள் கொடுத்த வரத்தை என் சிரசின்மேல் வகித்திருக்கின்றேன். அந்த வரம் கொடுக்கும்படி உன்னையும் யாசிக்கின்றேன். நான் இந்நாள்வரையில் கேட்டதை இல்லையென்று நீ மறுத்ததுண்டா?

கலி விருத்தம்.

கூடு மென்றவ மே! குணக் குன்றமே!
வாடு நல்லுயி ருக்குயி ரே! மனத்
தோடு நீவினை வாதொரு காரணம்
நாடு மிவ்வர மொன்று நயந்திடாய். (77)

(என்று சத்தியவானைத் தழுவுகின்றாள்.)

சத்தி: என் கண்மணி! நீ ஒன்றைக்கேட்டு நான் அதை மறுத்தால் அதற்கு மேலான கொடுமை என்ன இருக்கின்றது? உன் மனப்படியே ஆகட்டும். நாம் போகலாம். இதுதான் மார்க்கம். (இருவரும் மார்க்கம் அபிநயிக்க)

சாவி: நீ செல்லும் காடு இன்னும் எவ்வளவு தூரத்திலிருக்கின்றது?

சத்தி: இன்னும் கொஞ்சம் தூரந்தான் இருக்கின்றது. வழியில் கால் தடுமாருமல் நடக்கவேண்டும்.

சாவி: (முன்னிற்கும் மரத்தைப் பார்த்து,) ஐயோ! (என்று திடுக்கிடுகின்ருள்.)

சத்தி: கண்ணே! ஏன் இப்படித் திடுக்கிடுகின்ருய்?

சாவி: (புன் சிரிப்புடன்) அன்ப! நாயகனும் நாயகியுமாகிய அந்த அன்னங்கள் விளையாடுகையில் ஆண் அன்னம் மரத்திலிருந்து தவறிக் கீழே விழுந்தது. ஐயோ என்று திடுக்கிட்டேன். உடனே அது மறுபடியும் பறந்து அன்னப்பேட்டுடன் கூடி விளையாடுகின்றது. நாயக! அது நல்ல சகுனந்தானே?

சத்தி: என் சிந்தைக்கு அமுதம்போன்ற குயிலே! நீ வருந்தியபடியால் அந்த ஆண் அன்னத்துக்கு அருகில் வந்த யமதேவன் அதை விட்டுவிட்டுப்போனுன்போலு மிருக்கின்றது. இதோ பார். வேருெரு புதுமையை.

எழுசீர் விருத்தம்.

வஞ்சியாங் கிள்ளை ஊடலாற் பதியை
மருவிடீர் தேகவப் பதியாம்
கொஞ்சுநற் கிளிபூங் கனியளித் ததனைக்
கூவிடுங் காலொரு வேடன்
அஞ்சுபேரர் கணைதூ விடவும்நா யகனை
அணுகியே பின்னதின் பக்கம்
கொஞ்சமாய் விலகிச் சென்றதவ் விணைபின்
கூடியே தழுவுகின் றனவே. (78)

சாவி: (மனத்துள்) என்னுடைய கணவனும் அப்படியே உயிர் பொருந்தி என்னுடன் வாழ்வஞே? (கண்ணீருடன் சத்தியவானைத் தழுவுகின்ருள்.)

MAHAMAHOPADHYAYA
... SWAMINATHA IYER LIBRARY

(பிரகாசம்) அன்ப! இவ்வுலகத்தில் மானிடர்கள் சுகம் பெறுவ தற்கு எத்தனை இடையூறுகள் இருக்கின்றன?

சத்தி: கண்ணே! இதுதான் நான் தினந்தோறும் வருகிறகாடு.

சாவி: இதுதானே? மரங்கள் நிறைந்த சோலையினால் எங்கும் அலங்காரமாக இருக்கின்றது. நேயி! இப்போது நாழிகை என்ன இருக்கும்?

சத்தி: இப்போது பதினொரு நாழிகை யாகின்றது.

சாவி: ஆ! அதென்ன மரம்? மிகவும் அழகாகப் பூத்திருக் கின்றது.

சத்தி: குயிலே! அது ரஸால விருக்ஷம். அது இப்போதுதான் மலர்விடுகின்றது. இன்னும் இரண்டு மாதங்களுக்குள் மிகவும் சுவை யுள்ள கனிகளைப் பயக்கும். தினந்தோறும் அந்தக் கனிகளைக் கொண ர்ந்து உனக்கு அளிப்பேன்.

சாவி: (மனத்துள்) இன்னும் ஒரு கணத்துக்குள்ளாக நடக்கப் போகின்றதை என் கணவன் அறியாமல், இரண்டு மாதங்களுக்குப் பின் ஆவதை எண்ணுகிறான்.

கலித்துறை.

இன்றோ இமைப்பொழு தோகண மோஇர வோபகலோ
என்றோ உறங்கையி லோவுண வுண்கையி லோவிசைந்து
மென்றோன் மருவையி லோவுயிர் போகி விடுமதற்குள்
சென்றோடி யெத்தனை யோவிதம் கோடித் திடுஞ்சிந்தையே. ()

(பிரகாசம்) அந்த மலர்கள் மிகவும் செவ்வையா யிருக்கின்றன.

சத்தி: (அந்த மரத்தின்மேற் கொஞ்சமேறி மலர்கள் கொய்கின் றான். உடனே கீழே இறங்கி) என் உயிர்க்குயிரே! எனக்குத் தலைவலி மிகுதியாயிருக்கின்றது. (தலையிற் கைவைத்து) மரத்தின்மேலே கரிய நிறமுள்ளவர்களாக மூன்று பேர்களைப் பார்த்தேன். தலைவலி மிகுதி யால் என் கண்ணுக்கு ஒன்றும் புலப்படவில்லை. நான் இந்த மரத்தடி யிற் கொஞ்சம் படுத்துக்கொள்ளவேண்டும்.

சத்தி: (கீழே உட்கார்ந்துகொண்டு தன் மடிமேல் சத்தியவானைப் படுக்கும்படி செய்து) அன்பே! உனக்கென்ன செய்கின்றது? (சத்திய வானுக்கு மயக்கம் மேலாகி உத்தரம் சொல்லாததுகண்டு) ஐயோ! நானினி என்ன செய்யப்போகிறேன்! (கண்மூடித் தியானித்து,)

எண்சீர் விருத்தம்.

கண்டோர்க்குஞ் சொல்லுதவாக் கருணை மேவுங்
கடலே! ஞானிகட்கினிய கண்ணே! மாயை
விண்டோர்க்கு நல்லுறவே! மறையாம் இல்லின்
மெய்விளக்கே! சனகாதி மேலோர் நாளும்
கொண்டாடிச் சென்னிபுனை மணியே! வானோர்
குலத்துயர்தே வே! கருணைக் குன்றே! ஆலம்
உண்டான்சிந் தைக்கினிகற் கண்டே! தேனே!
உன்னருளா லென்கணவன் உய்ய வேண்டும். (80)

எச்சமயத் தோர்களுமிப் புவியில் நாடி
எங்கடவு ளுன்குலத்தே வென்று பேதித்
திச்சையொடு போற்றுமொரு பொருளே! தொண்டர்க்
கின்பவழி காட்டிடும்நற் றுணையே! பொல்லாத்
துச்சமெனும் பாசமொழித் திட்ட பேர்க்குத்
துரியசுகக் கனிபழுத்துச் சொரிந்த ளிக்கும்
உச்சிதமாங் கற்பகமே! அருளே! அன்பே!
உன்னருளா லென்கணவ னுய்ய வேண்டும். (81)

(மரத்தை நிமிர்ந்து பார்த்து,)

கலி விருத்தம்.

கற்பை மாசறக் காப்பவள் நானெனில்
நற்ப லன்திரி யகூரி நல்குமேல்,
நிற்ப தென்னில் நிலத்தினில் நன்னெறி
முற்ப டட்டு மிருந்தவர் மூவரும். (82)

[மூவர் தேன்றல்.]

நீலன்: அடே, சாரா! அட, தூதா! இதோ சத்தியவான் இறக்கிறான். உலகத்தார் சிப்பியைத் தள்ளி முத்துக்களைக் கொள்வது போல அவனுடலை மண் கொள்ளும்படி அகற்றிவிட்டு அதற்கு உள்ளடங்கி நிற்கும் உயிரைக் கைப்பற்றுங்கள்.

[மூவரும் சத்தியவானை அணுகல்.]

சாரன்: அட, இதென்ன! இந்த மரத்ினிடமிருந்து அக்கினியானது வெள்ளம்போல் பெருகிவருகின்றது. என் உடலிற் பாதி கருகிவிட்டதே.

**தூதன்:** நானிங்கு நிற்கவே மாட்டேன். சத்தியவான் உயிரை நாம் கொண்டுபோக முடியாது. சில சமயங்களில் சித்திர புத்திரன் பொய்க்கணக்கை எழுதி விடுகிறான். அதை நாம் நம்பிவந்து சீர் குலைய வேண்டியிருக்கின்றது.

**நீலன்:** நண்பர்களே! ஏதோ நமக்குக் கஷ்டகாலம் வந்திருக்கின்றது. நாம் அந்த மாதின்முன் தோன்றிச் சத்தியவான் உயிரை நமது கையிலொப்புவிக்கும்படி அவளைக் கேட்போம். சமாதானமாக நமது வேலையை முடித்துக்கொள்ளாத பக்ஷத்தில் மிகுந்த கேடு விளையும்போலிருக்கிறது.

[ மூவரும் சாவித்திரியின்முன் நிற்கின்றார்கள். ]

**சாவி:** (ஒரு கையினால் சத்தியவானை இறுகக் கட்டிக்கொண்டு) நீங்கள் யாவர்? உங்களைக் கண்டவுடன் என் கணவனுக்குத் தலைவலி யுண்டாகி மயங்கிப் படுத்திருக்கிறார். அதற்கு என்ன காரணம்?

**நீலன்:** அம்ம!

அறுசீர் விருத்தம்

பாரினிற் கரும நூலின் பான்மையாற் பிறந்து மாயும்
பேரியற் றிடும்வி னைக்குப் பெறும்பய னுதவுந் தேவாம்
சீரிய நடுவ னாணை கொண்டசே வகர்கள் நாங்கள்;
ஆரிவ னுனக்கு? தூரத் தகலுவா யிவனை விட்டே. (83)

**சாவி:** (வந்தனம் செய்து) என் கணவனுடைய உயிர் போகில் என்னுயிர் நிற்காது. என்மேற் கருணை கூர்ந்து என் கணவனை விட்டு விடுங்கள்.

**நீலன்:** பேதைமை நிறைந்த மாதே! கேள்.

வெண்பா.

எத்தனைபே ராகணவ ரிவ்வுலகி லேயுனக்கே
எத்தனைபே ராவுனைமுன் ஈன்றவர்கள்—நித்தம்
உடுத்தியே நீக்கும் உடைபோல நீயிங்
கெடுத்தவுட லுக்கிலேயே யெண். (84)

பெண்ணே! உன் கணவனென்று நீ ஆசைகொண்டது அந்த உடலே. அதை நாங்கள் கொண்டுபோகிறதில்லை. அதுதான் ஆகி அழிந்துகொண்டிருக்கிறது. அதை நீயே வைத்துக்கொள். அதற்கு உள்ளடங்கியிருக்கும் சேதனன் என்றும் பிறவாதவன்; என்று மிறவாதவன்; அவன் எத்தனை உடல்களையோ எடுத்தவன்; எத்தனை பேர்

களையோ மணம் புரிந்தவன்; ஒரு இடத்தில் கூடிச் சற்றுத்தூரம் சென்று, பிறகு பிரிந்து போகும் வழிப்போக்கர்போல் ஒவ்வொரு உடலுடனும் சேர்ந்தும் பிரிந்தும் செல்லுகின்றான். அவனுக்கும் உனக்கும் என்ன சம்பந்தம்?

சாவி: எமதூதரே! நீங்களறியீர்களா? ஒரு முறையில் அவனுயிர்க்கும் என்னுயிர்க்கும் பேதமில்லை; இரண்டு உயிர்களும் ஒரு பொருளினுடைய தோற்றங்களானபடியால், அவ்விரண்டும் ஒன்றாக மதிக்கப்பட வேண்டும். அப்படியாகில் என்னுயிரையும் கொண்டு போங்கள். ஒருயிரைத்தான் கொண்டுபோவோம் என்று நீங்கள் சொன்னால், என் கணவனுயிருக்குச் சமானமாகிய என்னுயிரைத் தருகின்றேன். அவனுயிரை விட்டுவிடுங்கள். மற்றொரு முறையில், என் கணவனுயிர் அவனுடலையும் அவ்வுடலின் ஒரு அங்கமாகிய என் உடலையும் அபிமானித்து அவ்விரண்டு உடல்களையும் வாழ்வித்து வந்தபடியால் என் உடலுக்கு ஆதாரமாகிய என் கணவனுயிரை நான் விடமாட்டேன். என்னுயிரையும் சேர்த்துக்கொண்டுபோனால் நீங்கள் நாடிவந்த காரியம் பயன்பெறும்.

நீலன்: அம்ம! எங்கள் ஏற்பாட்டை நீ யறியாய். அரும்பாயினும், பூவாயினும், காயாயினும், கனியாயினும், அதன் காம்பு நைந்தாலொழியக் கீழே விழுமாட்டாது. அதுபோல, பால்யம், கௌமாரம், யௌவனம், வார்த்தகம் என்னும் நான்கு தசைகளால் பேதிக்கப்படும் தேகிகளுக்குப் பிராரப்த கருமமே காம்புபோலாகி இப் புவனமாகிய மரத்துடன் சம்பந்தத்தை உண்டுபண்ணுகிறது. அந்தப் பிராரப்த கருமம் நைந்தாலொழிய அந்தச் சம்பந்தம் ஒழியாது. உன் பிராரப்த கருமம் ஒழியவில்லை; உன் உயிர் எங்கள் கைக்கு வராது. சத்தியவானுக்கு இந்த ஜன்மத்துக்குரிய பிராரப்த கருமம் தீர்ந்துவிட்டது. ஆதலால் அவனுயிரை மட்டும் நாங்கள் கொண்டுபோக வேண்டும்.

சாவி: தேவர் நாடாகிய தென்புலவாசிகளாக இருந்தும் நீங்கள் உண்மையை அறியவில்லை; மூவகைக் கருமங்களில் நல்லொழுக்கத்தால் சஞ்சிதமும் ஆகாம்யமும் விளக்கிற்படும் அந்துபோல் எரிந்து போகின்றன. வினையின் பயனை வேண்டாதவர்கள் பிராரப்த கருமத்தைக் காலில் தரிக்கும் பாதரக்ஷைபோல் தங்களுக்கு வேண்டுமாறு தரித்து வேண்டாதபோது அகற்றுகிறார்கள். அவர்களிடத்தில் உங்களுக்கு வேலையுண்டோ?

**நீலன்:** அப்பா! இவள் மெத்தப் படித்தவளாக இருக்கிறாள்; இவள் சொல்லுவது நமக்குப் புலப்பட்டால் நாமேன் இந்தத் தொழில் செய்கின்றோம்? இவ்விதமாகப் பேசித்தானே அந்த மார்க்கண்டேயன் நம்மையும் நமதரசனையும் சிரழியவைத்தான். இவள் அவன் தங்கை போல்தான் இருக்கிறது. ஏதோ நமக்கிங்கெல்லாம் மறுபடியும் கேடு காலம் வந்திருக்கின்றது. ஒரு தரம் பட்டது போதாதா? நமக்கு வேறு பிழைப்பையும் காணோம். நாம் இவள் கையாற் சாகாமல் இங்கு நடந்ததை நமது யஜமானனிடத்தில் தெரிவித்து விடுவோம்.

**சாரன்:** அப்படிச் செய்வதுதான் உசிதம்.

**தூதன்:** சித்திரபுத்திரன் கணக்குச் சரியாயிருந்தால் இப்படி வருமா? அவன் கொடுக்கும் வரியேட்டை வைத்துக்கொண்டு உயிர் தண்டப்போனால் நமக்கு அவமானந்தான் கிடைக்கிறது. கணக்கன் புரட்டனாக இருந்தால் உயிர்களில் ஒன்றாவது கைக்குவரமாட்டாது. எந்தச் சீமைக்குப்போனாலும் அவன் புரட்டுத்தானே தலைசுற்றுகிறது. நாம் மரியாதையாய்ச் செல்வோம்.

[மூவரும் மறைதல்.]

**சாவி:** (சத்தியவான் முகத்தைப்பார்த்து, மனத்துள்) உயிரிருக்கிறது. ஆனால் மயக்கம் தீரவில்லை. என் அம்மணியின் திருவுளம் எப்படியோ?

அறுசீர் விருத்தம்.

நம்பு மடியார்க் கருள்புரியும் நன்மை யிலையோ, உன்னிடம்? வெண்
தும்பை யணிவோன், முப்புரத்தோர் துஞ்ச வகைசெய் திட்டபிரான்
சம்பு வவன்றன் மருங்கிலகத் தானே யமர்ந்த பராஞ்சோதி!
வம்பு புரியா தெனைக்காக்க வருவா யருளத் தருணமிதே. (85)

ஐயோ! ஏதோ பயங்கரமாய் இருளுகின்றதே. காற்றும் ஊழிக் காலத்து வாதம்போல் மிகவும் பலமாய் வீசுகின்றது. எங்கோ கடல் புரண்டு வருவதுபோல் ஒலி கேட்கப்படுகின்றது. அங்கு மிங்கும் நெருப்புப் பொரிகளையும் பார்க்கின்றேன். ஒருக்கால் அந்த யமதேவனே வருகின்றானோ? கருணாநிதியாகிய நாரதமகாமுனிவர் உபதேசித்திருக்கும் மூலெழுத்தின் பலம் எப்படியோ? பரமேசுவரி இவ் வேழையைக் கைவிடுவளோ? (சத்தியவானுடல் துடிப்பதுகண்டு, இரு கையாலும் அவனை இறுகக் கட்டிக்கொண்டு.)

அம்மணி !

அறுசீர் விருத்தம்.

கெர்டுப்பதும்நீ, கொள்வதும்நீ, மனமகிழ வைப்பதும்நீ
குலேந்து நோக
விடுப்பதும்நீ, உய்முறைகாட் டுங்குருநீ, அம்முறையென்
விழிக்கெட் டாது
தடுப்பதும்நீ, என்னுயிர்நீ, என்பொறிநீ, பல்லுருவாய்ச்
சமைவோய்! துன்ப
மூடிப்படுசேற் றிற்றளரும் ஏழையெனேக் காப்பதுவா
வசையு னக்கே. (86)

கலி விருத்தம்.

அல்லல் மிஞ்சு துயர்க்கட லாழ்ந்தியிப்
புல்லள் வீழ்ந்து புலம்பிட, உய்ம்முறை
சொல்லி டாது துரத்திட வாவுளம்
தொல்லே நீங்கிடத் தாயருள் செய்வையே. (87)

[யமன் தோன்றல்.]

யமன்: (மனத்துள்) இது என்ன ஆச்சரியம்! இந்தச் சிறு பெண் என் தூதர்களே வெருட்டிவிட்டாள். நான் வந்து சத்தியவான் உடலேப் பலவாறு புரட்டியும் கசக்கியும் பார்த்தேன். அவள் அவனேக் கையா லிறுகக் கட்டிக்கொண்டிருப்பதால், அவன் உயிர் என் கைக்கு வரவில்லே. உயர்ந்த பதிவிரதைகளின் மகிமை அத்தன்மையுடையது. அவளிருப்பது உமைபோலும், அசைவது மலர்மங்கை போலும், உரைப்பது சரஸ்வதிபோலுமிருக்கிறது. அவளேப் பார்த்தவுடன் என்னுடைய கோபமானது முற்றிலும் அடங்கி எனக்கு இயற்கையில்லாத சாந்தம் மேலிட்டிருக்கிறது. கோபிப்பதினுற்றான் பலனென்ன? அப்பலன் இன்னதென்று முன்னமேயே மார்க்கண்டேயன் காட்டிவிட்டானே. மறுபடியும் இந்தத் தொல்லேயா? (சாவித்திரியைச் சுற்றிவந்து,)

கலி விருத்தம்.

ஓது நான்மறை யுஞ்சிறி துன்னிடேன்,
மாத வன்முத லோரை வணங்கிடேன்,
நீதி யாய்ப்புவி மேல்நிலே நின்றிடும்
மாதர் கற்பு வணங்குமென் றெய்வமே. (88)

(சாவித்திரிக்கு முன் தோன்றி) பெண்ணே! அநாதியாயுள்ள காலசக்கரத்தின் வலியை உன்னுல் தடுக்க முடியாது. எந்தத் தெய்வத்

தின் பலமும் அதற்குமுன் நில்லாது. ஆயுள் ஒழிந்த சத்தியவானை விட்டுவிட்டு நீ உன் அகம் போய்ச் சேர்வையாக.

சாவி: (யமனைத் தலையால் வணங்கி,) தர்ம சொரூபமாயுள்ள பகவானே! என்னுடல், பொருள், ஆவி என்னும் இவை மூன்றையும் உமக்கே அர்ப்பணம் செய்தேன். என்னைக் காப்பாற்றி அருளவேண்டும்; ஆனால் நீர் உரைத்த சொல்லில் நியாயமில்லை.

கலி விருத்தம்.

இவனி லாம லெனக்கினி யேதுயிர்?
அவன கன்றிடி லெங்குள தென்னகம்?
தவம்நி றைந்த மனத்தருஞ் சாற்றொணாச்
சிவம தேயுரு வாகிய தெய்வமே! (89)

நீரே பரம்பொருள். தருமத்தின்மீது நீர் நிறைந்திருக்கின்றீர். நாமரூபங்களா லமைந்த இப்பிரபஞ்சமானது நிலைத்திருப்பதற்குப் பழமை நீங்கிப் புதுமை அவசியமாகையால் பழயனவா யிருப்பவைகளைப் புதியனவாக்கி இப்பிரபஞ்சத்தை வாழ்விப்பதற்காக அழித்தலென்னும் தொழிலை நீர் வகித்திருக்கின்றீர். நாமரூபங்களைத் தரிக்கின்ற சேதனனுக்கு அவன் செய்த கருமங்களுக்குத் தக்கபடி தண்டனைகளை விதிக்கின்றீர்.

யமன்: பெண்ணே! அவர்களுடைய செய்கைகளுக்குத் தக்கபடி நன்மைகளையும் நான் பயக்கவில்லையா?

சாவி: ஞானமே உருவாக வந்த தருமராஜனே! ஸங்கத்தினு லமைந்தது கருமம். அந்தக் கருமத்துக்குக் காரணமும் பலனும் பந்தமாகவே யிருக்கின்றது. பந்தத்தினால் விளைவது துக்கமே யல்லாது சுகமன்று. கருமத்தின் பலனெல்லாம் துக்கமாகவே யிருக்க, கருமத்துக்குப்பலனாக நீர் நன்மைகளைப் பயக்க முடியுமா? கருமத்துக்கு மேற்பட்டவர்கள் அடைய வேண்டியதும் அவர்களுக்கு நீர் கொடுக்க வேண்டியதும் ஒன்றுமில்லை. கருமத்தின் பலனாக நீர் கொடுப்பதெல்லாம் துக்கமாகவே யிருக்க, தேகிகள் அஞ்ஞானத்தினால் சிலவற்றை மட்டும் துக்கம் போலவும் மற்றதெல்லாம் சுகம் போலவும் பாவிக்கின்றார்கள்.

யமன்: (மனத்துள்) நான் வெகுகாலம் கொண்டிருந்த செருக்கானது இன்றுதான் அடங்கிற்று. இந்தப் பெண்மணி உரைத்தபடி கருமமெல்லாம் பந்தத்தினால் விளைவதாகவும், கருமத்தின் பலனெல்லாம் துக்கமாகவும் இருப்பதால் தேகிகளுக்கு நான் கொடுப்பதனைத்

தும் தண்டனையே தவிரச் சுகமாகுமா? (பிரகாசம்) தும், நசேன னுடைய குலத்தின் விளக்கே! இவ்வளவறிந்த நீ எனக்கு விதிக்கப் பட்டிருக்கும் வினையை அறியாயா? அநாதியாயுள்ள கட்டளைப்படி நான் செய்யவேண்டியதற்கு பதிவிரதையாகிய நீ இடையூறு செய்ய வொண்ணாது.

சாவி: தன் உயிரிருக்கத் தன் கணவன் உயிரை அந்தகனாகிய உமது கையில் ஒப்புவிக்கின்ற பேதை பதிவிரதை யாவாளா? அவளுக்குக் கணவனே உயிரல்லவா? அவ்வுயிர் போனபிறகு ஒரு பிணம் போல் அவளிருப்பதிற் பயனென்ன?

யமன்: கண்மணி! பதிவிரதமென்பது என்ன? அது எத்தனை விதமாக உலகத்தில் அனுஷ்டிக்கப்படுகின்றது?

சாவி: பெருமானே! சர்வாந்தர்யாமியாகிய நீர் என்னைப் பரீக்ஷிக்கின்றீர். இகத்திலும் லோகாந்தரங்களிலும் சகல கருமங்களுக்கும் காரணமும் காரியமும் கணவனே என்று மனத்திற்கொண்டு அவ்வாறு நடப்பதுதான் பதிவிரதம். முக்குணங்களின் பான்மையினால் அந்த விரதம் மூன்று விதமாகப் பேதிக்கப்படுகின்றது. சகல சுகங்களுக்கும் கணவனே காரணமென்று நினைத்து அச்சுகங்களை நாடி, அவனுடலிலும் அவ்வுடலுக்குரிய பொருள்களிலும் பிரேமையுடன் நடப்பவள் தாமஸ பதிவிரதை. அவளுக்கு 'ஆத்ம சுகாநுவர்த்தினி' என்று பெயர். அவளுக்கும் அவள் கணவனுக்கும் இவ்வுலகத்துக் கப்புறம் சம்பந்தமே கிடையாது. சகல சுகங்களும் கணவனுக்கே உண்டாக வேண்டுமென்று நினைத்துத் தான் அவைகளைத் தனக்காக நாடாமல் அவனறிவிலும் அவனறிவுக்கு இனிமையான விஷயங்களிலும் பிரேமையுடன் நடப்பவள் ராஜஸ பதிவிரதை. அவளுக்குப் 'பதிசுகாநுவர்த்தினி' என்று பெயர். அவளுக்கும் அவள் கணவனுக்கும் சுவர்க்கலோக பர்யந்தம் சம்பந்தமுண்டு. சுகமென்பதே அஞ்ஞான கற்பிதமென்று அறிந்து, தன்னுடைய நல்ல விருத்தியால் தன் கணவனைச் சங்கற்ப விகற்ப மில்லாதவனாகச் செய்து, அவனுடைய ஞானத்திலும், அதற்கு இனிதான பரம்பொருளிலும் பிரேமையுடன் நடப்பவள் ஸாத்துவிக பதிவிரதை. அவளுக்கு 'ஸாத்வி' என்று பெயர். அவளுக்கும் அவள் கணவனுக்கும் பிர்மலோகபர்யந்தம் சம்பந்த மிருந்து, பிறகு அவ்விருவர்களும் ஒரே சமயத்தில் மோக்ஷானந்தத்தை யடைகிறார்கள். சர்வேசுவரனே! நானுரைத்ததில் குற்றமிருக்கில் பொறுத்தருளவேண்டும்.

யமன்: வாணிபோலும் சிறந்தவளே! உன் சொற்களெல்லாம் ஸாமகானத்திலும் இனிதாக இருக்கின்றன. உன் புருஷனுடைய உயிர் தவிர வேறு ஒரு வரத்தை நீ கேட்டால் அதை அளிக்கிறேன்.

சாவி: பரஞ்சுடரே!

கலி விருத்தம்.

வாடு மென்னுயர் மாமனும் மாமியும்
பாட கன்றகல் பார்மிசை யெங்கணும்
நாடி நோக்கிட நல்விழி தந்திடாய்
வீடு கண்டவர் கண்டிடு மெய்யனே!

யமன்: (சந்தோஷம் அபிநயித்து,) பெண்ணே! (90)

அறுசீர் விருத்தம்.

மண்ணினில் உனது மாமன் மாமியாம் இவர்கள் நோக்கக்
கண்ணையும் அளித்தேன், அன்னோர் களங்கமற் றிளமை காந்தி
நண்ணியே வாழ்வுற் றோங்க நயந்தனன் வரமு னக்குப்
பெண்மணி! கற்பு ளார்கள் பெற்றிடாப் பேறொன் றேதே? (91)

கண்ணே! நீ இச்சித்தபடி உன் மாமனுக்கும் மாமிக்கும் குறையில்லாத விழிகளையும் இளமையையும் தேககாந்தியையும் கொடுத்தேன்; சத்தியவானை விட்டுவிடு.

சாவி: ஐயனே! என் கணவனை விடுதலென்பது என் உயிர் விடுதலென்றே எனக்குப் பொருள்படுகின்றது. என்னுயிரை நீர் கைக்கொண்டால் என் கணவனுயிரும் உமது கைக்கு வந்துவிடும்; தருமமே உருவாகிய நீர் அந்தப்படியே செய்யவேண்டுமென்று நான் பிரார்த்திக்கின்றேன்.

யமன்: பெண்ணே! தர்மம், தவம், வைராக்கியம், துறவறம் இவைகளிற் சிறந்தவைகளெவை?

சாவி: அறியாதவளாகிய என்னை மேன்மேலும் சோதிக்கின்றீரே. தருமத்திற் சிறந்தது பிறருக்குத் தீங்கு செய்யாமை. தவத்திற் சிறந்தது மெய்யுரைத்தல். கிடைத்தது போதுமென்று உன்னுவதே சிறந்த வைராக்கியம். விதித்தவாறு கருமங்களைப் புரிந்து பலன்களை நாடாதிருத்தலே உயர்ந்த துறவறம்.

யமன்: (ஆனந்தம் அபிநயித்து,) பெண்ணே! நீ துறவறத்திற்கு மொழிந்த லக்ஷணம் பொருத்தமுள்ளதாயின் தண்டந்தரித்துக் காஷாய

உரி புனைந்து அனுஷ்டிக்கப்படும் ஸந்யாச ஆசிரமத்திற்குப் பெருமை யென்ன?

சாவி: பரம்பொருளின் தோற்றமே! ஞானத்தினுலும் உபாஸனையினுலும் நித்தியமான நம் ஸ்வரூபத்தை நன்குணர்ந்து அனுபவிக்கும் புனிதர்கள், 'வித்வான்கள்' என அழைக்கப் படுவார்கள். அவர்கள்தாம் அந்த ஆசிரமத்தை அனுஷ்டிக்க யோக்கியர்கள். அவர்கள் உடல் அழியுங்கால் சூக்ஷ்ம தேகிகளாக நூற்றியோராவது நாடியின் வழியாய் வெளிவந்து, அவர்கள் தரிக்கும் தண்டத்தின் வலியால் இந்திரனுடைய சிம்மாசனத்திலேறி உட்காருகின்ருர்கள். அப்பொழுது, இந்திரன் எல்லாத் தேவர்களுடனும் வந்து அவர்களைப் பூஜித்துக் கொண்டாடிப் பிர்ம்மலோகத்துக்கு அனுப்புகிருன். வித்வான்கள் அல்லாதவர்கள் பிரதாபத்துக்காகமட்டும் அந்த ஆச்ரமத்தில் புகுந்தால், அன்னோர் தரிக்கும் தண்டமானது அவர்களுக்குத் தண்டனையையே இயற்றுகின்றது. அவர்கள் இந்திரனைப் பார்க்கிறதில்லை. இந்திரனுல் ஏவப்படும் செந்நாய்கள் அவர்களைக் கடித்துப் பலவாறு வருத்தி யிழுத்து நரகத்தில் ஆழ்த்துகின்றன. அந்தத் தண்டனையையும், செந்நாய்களையும் எக்காலமும் மறந்திடாவண்ணம் தண்டத்தையும் செங்காவியுடையையும் ஸந்யாசிகள் தரிக்கின்ருர்கள். நான் புகன்ற துறவறம் அவ்வித இழுக்குடையதன்று.

யமன்: (ஆனந்தம் அபிநயித்து) கிளியே! உன் வாயிலிருந்து வருவதெல்லாம் வேதவசனமாயிருக்கின்றன. நீ உன்னுடைய கணவனுயிரைக் கேளாமல் பின்னுமோர் வரத்தைக் கேள்.

சாவி: கருணாநிதியே!

வெண்பா.

பொய்யாவென் மாமன் புவியிற் கொருபதியாய்
உய்யா ருயிர்கள் தமையோம்பி—மெய்யாக
நாளும் அவனுடைய நன்னாட் டினைச்சுகமாய்
ஆளவென நீயருளு வாய். (92)

யமன்: குயிலே!

அறுசீர் விருத்தம்.

மங்கையர்க் கரசே! நின்றன் மாமன்முன் னாண்டு வாழ்ந்த
திங்களின் டதனை வாய்ந்து, தூயநன் முடிபு னைந்தே
பொங்கொளி யுடுக்கள் சூழும் புவியெனப் பொலிந்து, மன்னர்
தங்குழாம் வணங்கிப் போற்றத் தரணியை யாள்வ னம்மா. (93)

10

கற்பு நிறைந்த கண்மணியே! நீ வினவினபடி உன் மாமனாகிய த்யுமத்சேனன், அவனுடைய நாடாகிய சாலவதேசத்துக்கு மன்னனாகி மற்றெல்லா அரசர்களும் வணங்க முடிதரித்து வெகுநாள் இருந்து, பின் முக்தியையும் பெறுவன். இனியாகிலும் சத்தியவானை விட்டுவிடு.

சாவி: உம்மை யறிந்தவர்களே வேதம் அறிந்தவர்கள். சாதுவாகிய உமது சங்கம் கிடைத்தவருக்கு ஏது குறையுண்டு? இன்னும் என்னைச் சோதியாமல், என் உயிரை நீர் முதலிற் கைக்கொண்டு பின்னர் என் கணவனுயிரைக் கொள்ளவேண்டும்.

யமன்: பெண்ணே! சாதுசங்க மென்பதென்ன? அது எத்தன்மை யுடையது? அதன் பிரயோஜன மென்ன?

சாவி: சர்வக்ஞராகிய உமக்கு நான் ஞாபகப் படுத்துவது தவிரப் புதிதாக அறிவிப்பது என்ன இருக்கின்றது? சங்கமென்பது பற்று. ஸாது ஸங்கமென்பது, இந்திரியங்களையும் அவைகளின் விஷயங்களையும் ஒழித்தவர்களின் உறவு. அது அக்ஞானத்தின் பயனாகிய துக்கத்தைப் போக்குந் தன்மையுடையது. அந்த உறவானது ஸ்பர்சவேதிபோல் சாதுக்களை அடுத்தவர்களும் ஸாதுக்களாம்படி செய்கின்றதுமல்லாமல், பிரமரகீட நியாயமாகவே அவர்களுக் கியற்கையில்லாமல் வாஸனையினால்மட்டும் அமைந்த அநித்திய ஸ்வரூபம் விலகி, அவர்களுடைய வாஸ்தவமான நித்திய ஸ்வரூபத்தை அவர்கள் அடையும்படி செய்கின்றது.

யமன் பெண்ணே! சாதுக்களென்று நீ உரைத்தவர்கள் எத்தன்மை யுடையவர்கள்? அவர்கள் நிலை எவ்வாறு அமையும்? அவர்கள் பொருந்தும் கதி என்னும்?

சாவி: பெருமானே! நும் ஸந்நிதியின் வலியாற் புகல்கிறேன். சாதுக்கள் என்போர் புனிதம் நிறைந்த பாகவதர்கள். அவர்களுடைய அகங்காரமானது தீயில்வெந்த வஸ்திரம்போல, இருந்தும் இல்லாததாய் அமைவதால் காமம் வெகுளி என்னும் இருவிதப் புன்மைகளும் ஒழிந்தவர்கள். எதைச் செய்தாலும், எதைப் புஜித்தாலும், எதை ஆஹுதியாகச்செய்தாலும், எதைப் பிறருக்கு அளித்தாலும், என்ன தவம்புரிந்தாலும் அவைகளின் பலன் ஒன்றையும் தாங்கள் வேண்டாமல், அவைகளைத் திரிகரண சுத்தியோடு பரமேசுவரனுக்கு அர்ப்பணஞ் செய்துகொண்டு, தேகயாத்திரை யுள்படத் தங்களுடைய யோகக்ஷேமங்களை அவனிடத்தில் ஒப்புவித்து அவர்கள் பற்றற்ற

வர்களாய் இருப்பவர்கள். அவர்கள் பிராரப்தம் ஒழிந்தவுடன் தாங்கள் ஆராதிக்கும் தேவதையின் பக்கத்தில் வசித்து மகிழ்வடைவார்கள். அதுவே அன்னவர்க்கு உரித்தான கதியாகும். பிறப்பிலும் வயதிலும் தாழ்ந்த யான் பிழையுரைப்பினும் தயாநிதியாகிய தேவரீர் பொறுத்தருளவேண்டும்.

யமன்: மாது சிரோமணி! மேன்மேலும் உன் வசனங்கள் கருணையையும் மிகுந்த ஸந்தோஷத்தையும் உண்டுபண்ணுகின்றன. உன் கணவனுயிர் தவிர இன்னொரு வரத்தை நீ கேட்பாயாக.

சாவி: பக்தவற்சல!

அறுசீர் விருத்தம்.

தென்னிலத் தமரர் போற்றும் செல்வனே! மிகவும் நோற்றே
என்னையீன் றருளுந் தந்தைக் கினியவோர் மகவுண் டாகித்
துன்னிடும் வாய்மை வீரம் துலங்கிட விருந்த வற்குப்
பின்னுமக் குலம்மே லாகப் பெருகிட வருள்செய் வாயே. (94)

யமன்: அறிவுக்கு அமுதம்போன்ற அன்னமே!

அறுசீர் விருத்தம்.

இமையவன் உமையாள் தன்னை யீன்றபாக் கியம்போல், உன்னை
அமைவுறப் புதல்வி யாக அடைந்தவன் றந்தை பாரிற்
சமமிலாக் குணத்த னோமோர் தனயனைப் பெறுவன், தூய
துமதசே னன்கு லத்தைத் துலக்கிடு மதிபோன் றுளே. (95)

அருந்ததிக்கும் சிறந்தவளே! நீ விரும்பின்படியே உன் தந்தைக்கு அழகும், சத்தியமும், சௌரியமும், ஆயுளும், கீர்த்தியும் நிறைந்த ஒரு மகன் பிறந்து வாழவும், அவனுக்குப்பின்னும் நீ பிறந்த குலம் எந்நாளும் தழைக்கவும் வரம் கொடுத்தேன். இனி என்னுடைய வேலைக்குத் தடையின்றிச் சத்தியவானை நீ விட்டு விலகிப்போ.

சாவி: கிருபாசமுத்திரமே! என்கணவனை விட்டிருந்தால் உம் அருள் எனக்குக் கிடைத்திருக்குமா? கணவனைக் காட்டிலும் ஒரு குலமகளுக்கு வேறு தெய்வம் உண்டோ? இப்புவனமானது அக்ஞானமென்னும் அந்தகாரம் நிறைந்த காடு. அதில் காமம், குரோதம், லோபம், மோகம், மதம், மாற்சரியம், என்னும் ஆறு திருடர்கள் அங்குவரும் மாந்தர்களுடைய விவேகமென்னும் பொருளைப் பறித்தோடுகின்றார்கள். தீனர்களைக் காப்பாற்றும் கருணை உம்மிடத்திலிருந்தாலும் பழவினையென்னும் பிரதிபந்தகமானது இடர்வந்தபோது

வருந்துவோர் உம்மைக் கூவவொட்டாமலும், கூவினும் உம்மருள் அவர்களுக்குக் கைகூடவொட்டாமலும் செய்கின்றது. அந்தப் பிரதி பந்தகத்தை முதலில் அகற்றுவதற்குக் குருவின் கடாக்ஷம் வேண்டி யிருக்கின்றது. மாதர்களுக்குக் கணவர்களே குரு. ஆகையால், கணவனை ஒழிந்த மாது மணம் ஒழிந்த மலர்போலும், ஒளியொழிந்த கனகம்போலும், உயிரொழிந்த உடல்போலுமாவாள். உம் அருள் பெற்ற எனக்கு அந்தக் கதியும் வருமோ?

யமன்: (மனத்துள்) அட! இனி என்னசெய்யத் தக்கது? இம் மாதோ ஒப்பற்ற பதிவிரதையாயிருக்கிறாள். இவளுடைய கற்புக் கும் சீலத்துக்கும் இந்த மூன்று உலகங்களையும் இவளுக்குக் கொடுத் தாலும் அவை போதாதவைகளாயிருக்கும். எனக்கு இடப்பட்டிருக் கும் ஆணைப்படி நான் நடக்கவேண்டியதாயிற்றே. (பிரகாசம்) பெண் மணி! நீ கேட்ட வரங்களையெல்லாம் அளித்தேன். சத்தியவா னுடைய உயிரை விடுவதற்கு முடியாது. எப்படியாவது என் வேலை யை நான் நடத்தவேண்டியதாகையால், இதோ என்னுடைய பாசத் தைப்போட்டு உயிரை வாங்குகிறேன். (என்று பாசத்தைவீசுகிறான்.)

சாவி: (உடல் நடுங்கி)

கலி விருத்தம்.

பாச மற்றவள் யானெனில், பான்மையாய்
மாசி லானெனில் என்மண வாளனே,
பேசும் வாய்மைய னென்னிலென் மாமனும்,
வீசு பாசம் அறுந்திட வீழ்குமே. (96)

[மடமட என்னும் சப்தத்தோடு காலபாசமானது அறுந்து வீழ்ந்தது. மழை பொழிந்ததுபோலச் சாவித்திரியின்மேல் மலர்கள் சொரியப்பட்டன.]

யமன்: (இது கண்டு) நீதியே யுருவாயிருக்குங் குயிலே! உன் ஞானமுங் குணமும் அற்புதங்களாய் இருக்கின்றன. உன் புண்ணி யமும் அளவற்றதா யிருக்கின்றது.

அறுசீர் விருத்தம்.

உன்றவப் பெருமை கண்டேன், உமையவள் பதுமை வாணி
யன்றியுன் றனக்கு நேரா ராவரித் தரணி மீது?
நன்றியுன் றனக்கு நானே நயப்பது? உன் முகம்யான் நோக்கிக்
குன்றிடாப் பெருமை பெற்றேன்; குணமதிற் சிறந்த கோதாய்!

சாவி: நீரே மூவரும் ஒருவராய் அமைந்த மூர்த்தி.

### கலித்துறை.

பொல்லா வினையின் செனியேனை யோர்பொருட் டாகவெண்ணி
எல்லாம் அளித்தனை, யார்வாழ்ந்து மென்றனக் கென்ன? என்றன்
நல்லா னெனக்கொரு மைந்தனும் பெண்ணும் நயந்தவரோ
டெல்லாச மாயவன் பன்னா ளிருக்க வுரைசெய்வையே. (98)

[ திரைக்குள், பலர்கூடி 'தீர்க்க சுமங்கலீபவ, தீர்க்க சுமங்கலீபவ, தீர்க்க சுமங்கலீபவ, என்னும் ஒலிகளுடன் மலர்மழை பொழிதல். ]

யமன்: கண்மணியே!

### அறுசீர் விருத்தம்.

மூவுல கினையும் வென்றாய்; முன்வினை வரம்பு தாண்டித்
தேவரும் வணங்கப் பெற்றாய்; திகழுமுன் கணவ னின்றே
மேவுநல் லுயிரைப் பெற்றான்; விரியும்நீ டாயுள் பெற்றான்;
பூவை!யுன் னிடம வற்கோர் புதல்வனு மகளு மீந்தேன். (99)

பெண்ணே! பதிவிரதத்தைக் குறையில்லாது அனுஷ்டிக்கும் மாதர்களுக்குக் கிடையாதது ஒன்றுண்டோ? இதோ பார்! ஆகாசத்தில் சகல தேவர்களும் ரிஷிகளும் சேர்ந்து, உன்னை ஆசீர்வதித்து உன்மேல் மலர்மழை சொரிகின்றார்கள். உன்னைச் சகல குணங்களும் பொருந்திய கலைமகளென்று நினைக்கிறேன். உனக்கு நான் கொடுப்பது என்ன இருக்கிறது? உன் கணவன் நிறைந்தஉயிரையும் பெறுவான். நீயும் நித்திய சுமங்கலியாய் உலகத்திலுள்ள மாதர்களுக்கு வழிகாட்டும் குருவாயிருக்கக்கடவாய். உன் மணவாளனுக்கு உன்னிடம் ஸ்ரீதரன்போல ஒரு புல்வனும், உமையவள்போல ஒரு புதல்வியும் உண்டாகி வாழ்வார்கள். நீ சகல பாக்கியங்களுடனும் வாழ்ந்திருந்து பிறகு நீயும் உன் கணவனும் சாசுவதமான பதவியை அடைவீர்கள். பதிவிரதம் மேன்மை பெற்றது. நானும் உன்னால் பெருமையடைந்தேன்.

### கலி விருத்தம்.

வேத னுக்குவன்; மேலரி யோம்புவன்;
பூத னாத னொடுக்குவன்; பூவையர்
நீதி மூவினை யுஞ்செயும் நேர்மையால்
மாதர் கற்பை வணங்கி யிறைஞ்சுவாம். (100)

[ மறைதல். ]

சங்கீதம்.

**சாவி:** (யமன் முன்னம் நின்ற இடத்தைப்பார்த்து அஞ்சலிசெய்து, தியானித்து) அம்மணி! உன் அருளின் வலிமையால் யாவும் பெற்றேன்.

கலித்துறை.

தொட்டாற் பிடித்திட் டிழுக்குமை யோவினை சூழ்புவியான்
விட்டாலு மம்மைதென்னை விட்டிடு மோ,வதில் மெய்ம்மறந்து
கெட்டாலும் நின்றிரு வாசல்வந் தேகிடப் பேனங்கடி
பட்டாலும் யானக லேன்,வெறுத் தாலப் பழியுனக்கே.. (101)

(சத்தியவான் முகத்தைப்பார்த்து) நாயக! உமக்கு இப்போது தலைவலி தீர்ந்துவிட்டதா?

**சத்தி:** (எழுந்திருந்து) என் தலைவலி தீர்ந்துவிட்டது. நான் மிகுந்தகாலம் தூங்கினேனல்லவா? நான் தூங்கும்போது ஒரு கரிய நிறமுடைய புருஷன் உன்னைச் சுற்றிவந்து வணங்கிச் செல்ல ஒரு கனவுகண்டேன். இதென்ன! எங்கும் புதுமையான மலர்கள் சிதறிக் கிடக்கின்றன. மிகுதியான காற்று அடித்ததினாலோ அப்படிச் சிதறியிருக்கின்றன? நாம் செல்லுவோமா?

**சாவி:** (சத்தியவானைத்தழுவி)

துன்ப மாங்கடல் தாண்டினம், தூய்மைசேர்
உன்பெ ருந்தவ மின்றுரு வாயது,
பின்பு யாமடை யாவரும் பேறிலை,
அன்ப! நீயமர் வாய்சிறி திங்ஙனே. (102)

**சத்தி:** (மனத்துள்) என் தலைவலி தீர்ந்ததற்காகச் சாவித்திரி இவ்வளவு சந்தோஷப்படுகின்றாள். (பிரகாசம்) நாம் போம் வழியில் மலர் கொய்துகொள்ளுவோம். காலம் மிகுதியாய்க் கழிந்துவிட்டபடியால் இனி நாம் இங்கே தாமதம் செய்யக்கூடாது. என் களைப்பும் ஆறிவிட்டது. நாம் புறப்படுவோம்.

[இருவரும் எழுந்து மறைதல்.]

உ

அம்பிகை துணை.

# ஏழாவது அங்கம்.

சங்கீதம்.

[ துமத்சேனனும் அவன் மனைவியும் தோன்றுதல். ]

துமத: சுசீலே! இதென்ன புதுமை. நம்மிருவருக்கும் ஒரே சமயத்திற் கண்கள் தெரிகின்றனவே. இப்படியானதற்குக் காரணம் தெரியவில்லை.

சுசீலை: நாதா! இன்று காலையில் நமது கண்மணியாகிய சாவித்திரி நம்மை நோக்கி, 'நீங்கள் என்னைப் பார்க்கவும், உங்கள் புதல்வர் நிறைந்த ஆயுள்பொருந்தி யிருக்கவும் நான் பெற்றால், அதுவே நான் செய்யும் பணிவிடைகளுக்குப் பலனாகும்' என்று உரைத்தாள். அப்பொழுதே எனக்குக் கண்கள் கிடைத்தன போல் நினைத்தேன். இப்பொழுதே அந்தச் செல்வியையும், நமது செல்வனையும் பார்ப்பதல்லவோ இந்தக் கண்கள் கிடைத்ததற்குப் பலனாகும். அவர்கள் இன்னும் வரவில்லையே. அவர்களை நோக்கும் வரையில் இந்தக் கண்களாற் பயனென்ன?

அறுசீர் விருத்தம்.

அகமுற முதல்வன் நாமம் அறைந்திடா நாவும், பண்பால்
தகுமெளி யோர்க்கு நல்காத் தனமும் நல் வினைகள் செய்யாத்
திகையுமோ ருடலும் போலச் சிந்தையிற் கினிய ராமெம்
மகளொடு மகனை நோக்கா வன்கணு லாவ துண்டோ? (103)

துமத: சுசீலே! பகல்முழுதும் அநேகமாய்க் கழிந்துவிட்டது. குழந்தைகள் இன்னும் வரவில்லை. தினந்தோறும் பன்னிரண்டு நாழிகைக்குள் சத்தியவான் வந்துவிடுவது வழக்கமல்லவா? அவர்கள் ஒரு விதக் குறைவு மில்லாமல் வந்துவிட்டால், அதுவே எனக்கு ஆயிரங் கண்கள் கிடைத்தனபோலாகும். அவர்கள் இல்லாத நேரத்தில் இக் கண்களால் ஒரு பயனுமில்லை. நீ மிகவும் மதியிற் சிறந்தவளாயிற்றே; அவர்கள் இன்னும் வராததற்கு என்ன காரணத்தை யூகிக்கின்றாய்?

சுசீலை: நாதா! நேற்று இரவில் யான்கண்ட கனவு நல்லபலன் களைப் பயக்குமே யல்லாமல், நமக்கு யாதொரு துன்பத்தையும் கொடாது. ஒரு பெரிய கருநாகமானது நமது சத்தியவானுடைய கழுத்தில் சுற்றிக்கொண் டிருக்கவும், அதைச் சாவித்திரி கோபித்துப் பார்த்தவுடன் அது எரிந்து சாம்பலா யுதிர்ந்துவிடவும், சாமளவர்ண முடைய ஒரு மாது அங்கே வந்து, கற்பகமலரால் அமைந்த இரண்டு மாலைகளை அவர்களுக்குக் கொடுக்கவும், அந்த மாலைகளை அவர்கள் ஒருவர் கையால் மற்றொருவருக்கிட்டு இருவரும் அணிந்துவிளங்கவும் கனவு கண்டேன். இதனால், சகல மங்களங்களும் அவர்களை அடையு மென்பதிற் சந்தேகமே இல்லை.

மேலும், அறுசீர் விருத்தம்.

நாயக! அந்தச் செல்வி நம்மனை புகுந்த நாள்தொட்
டாயுநற் றவமே லாகி, அன்பொடு பெரியோர் நட்பும்,
தூயநம் மனத்தின் மேலாஞ் சுகமுமே யடைந்தோம்; அந்தச்
சேயவள் கற்பால் நம்மைத் தீமையொன் றணுகி டாதே. (104)

சங்கீதம்.

[சத்தியவானும் சாவித்திரியும் தோன்றல்.]

சத்திய: கண்ணே! இதென்ன ஆச்சரியம்; கண்ணில்லாதவ ராய் எந்நாளும் மனைக்குள்ளேயே யிருந்த என்னுடைய அன்னையும் பிதாவும் கண்களுடன் வெளியில் வந்து எல்லாவிதப் பொருள்களையும் பார்க்கின்றார்களே!

சாவி: இதெல்லாம் உன்னுடைய தவத்தின் பலன். இன்று நாம் இன்னும் எத்தனை ஆச்சரியங்களையோ பார்க்கப் போகின்றோம்.

[இருவரும் துமதசேனனையும் சுசீலையையும் வணங்குகின்றார்கள்.]

துமத: (சத்தியவானையும் சாவித்திரியையும் மாறிமாறித் தழுவி) என் பிராணனைப்போன்ற குழந்தைகளே! இந்நாள்வரை உங்களைப்பார்க்க எங்களுக்குப் பாக்கியமில்லை. (சத்தியவானைத்தொட்டு)

ஐய, உன்னெழி லும்
(சாவித்திரியைத்தொட்டு) புகழ் அம்மணி!
செய்ய பூமக ளொக்குமுன் தேகமும்,
(இருவரையும் பார்த்து) மொய்யெம் புன்வினை யால்முனம் கண்டிலம்,
மையில் வேலனும் வள்ளியும் போல்விரே.

சுசீலை: (குழந்தைகளை மறுபடியும் தழுவி) என் கண்மணிகளே! ஏன் இவ்வளவு தாமதம்? பாதை தவறி நடந்தீர்களோ? ஒருக்கால் சாவித்திரி நடக்கமுடியாமல் மார்க்கத்தில் இருவரும் இருந்து களைப் பாறினீர்களோ?

[சேவகன் தோன்றல்.]

சேவ: சாலவதேசத்து மந்திரியாகிய சுமதி வருகின்றார்.

சத்தி: மந்திரிக்கு இங்கென்னவேலை? சாவித்திரி! நடக்கப் போகிறதாக நீ சொன்ன ஆச்சரியங்களில் இதுவும் ஒன்றுபோ லிருக் கின்றதே. உன் அறிவு மிகவும் அற்புதமாயிருக்கின்றது.

[சுமதி தோன்றல்.]

சுமதி: (துமதசேனனை நோக்கி,) பொய்யுரையாத கோமானே! இன்று உமது திருமுகத்தைப் பார்த்தபின்புதான் என் கலியானது விலகிற்று. (சுசீலையை நோக்கி,) அம்மணி! இது நீர் வசிக்கும் காடா கையால் மாதம் மும்மாரி பொழியச் சகல உயிர்களும் செழிப்பாய் வளர்கின்றன. (இருவரையும் வணங்குகிறான்.)

துமத: சுமதி! உமக்கு மங்களம் உண்டாகட்டும். இந்நாள் வரை எவ்விடத்தி லிருந்தீர்?

சுமதி: நான் இதுவரையில் விந்திய பர்வதத்தி லிருக்கும் ஒரு காட்டில் மறைந்துகொண்டிருந்தேன். நமது நாட்டினர் சிலர் அங்கு வந்து, நமது நாட்டைக் கவர்ந்திருந்த சைந்தவ மன்னன் ஒரு புலி யாற் கொல்லப்பட்டு இறந்துவிட்டதாகவும், அவர் மந்திரிமார்களும் சிந்து நாட்டுக்குப் போய்விட்டதாகவும் தேவரீரை நமது நகரத்துக்கு அழைத்துவந்து முடிசூட்டுவிக்க வேண்டுமென்றும் சொன்னார்கள். அவர்களெல்லாரும் பிந்தி வருகின்றார்கள். அவ்விதமே தேவரீர் வந்து முடிதரித்து எல்லா உயிர்களையும் பாதுகாக்கவேண்டும்.

சங்கீதம்.

[நாரதர் தோன்றல்.]

அறுசீர் விருத்தம்.

தென்புலத் தவரைத் தேவை அதிதிஒக் கலினைத் தேயா
அன்பொடு தன்னை யோம்பு மைவகைக் கடமை மின்னார்
தன்புகழ் வினையா லோங்கித் தரித்திடு மென்னில், வேதம்
பின்பவர் மகிமை யல்லால் பேசுமோ எதையும் மேலாய். (106)

[ அவரை அனைவரும் வணங்குகின்றார்கள். ]

சாவி: (நாரதரை வணங்கி) ஐயனே! உம் அருளால் எல்லா நன்மைகளையும் பெற்றேன். நான் என்றும் உம் திருவடியை மறவா திருக்கும்படி அருள் செய்யவேண்டும்.

நாரதர்: (சாவித்திரியைக் கட்டித் தழுவி) கண்மணியே! மங்கலங்களெல்லாம் உன்னை யடைந்தே சிறப்புற்றன. பதிவிரதம் என்னும் தர்மமும் இன்று உன்னால் பெருமை பெற்றது. (துமத்சேனனை நோக்கி,) அரசனே! உனக்கு மருமகளாக வந்திருக்கும் சாவித்திரி அந்தக் கலைமகளென்றே நினைக்கத் தக்கவள். இன்று காட்டில் உன் மகனுடைய உயிர்கொள்ளவந்த யமனும் அவளது கற்புக்கு அஞ்சி உன் மகனுக்கு நிறைந்த ஆயுளும் கொடுத்து, உனக்கும் உன் மனைவிக்கும் கண்களை அளித்து, உனக்கு நாட்டினையும் உன் மகனுக்குப் புதல்வனையும் அளித்துச் சென்றனன். இக்கண்மணியால் நீ இகத்திலும் பரலோகத்திலும் ஒப்பில்லாத சுகத்தைக் கைக்கொண்டாய்.

சுசீலை: (சாவித்திரியை மடிமேல் தாங்கி) என் கண்ணே! நடந்ததை உன் திருவாயால் உரைசெய்வாயாக.

சாவி: அம்மணி! நான் ஒன்றுமறியேன். இந்த நாரதமகா முனிவருடைய வரத்தினாலும், தங்களுடைய கிருபா கடாக்ஷத்தினாலும், இன்று சகலவிதமான பாக்கியங்களையும் பெற்றேன்.

அறுசீர் விருத்தம்.

அங்குரும் விழியும், உங்க ளரசியற் பேறும், அன்போ
டுங்கள்நல் மகனுக் கோங்கு முயிரும், ஓர் மகனும் பெண்ணும்
மங்கிடா தெனது தந்தை மகிழுவோர் சுதனும், காலன்
பொங்கமோ டளிக்க விந்தப் புனிதனன் றருள்செய் தானே.

சத்தி: என்னுயிர்க்குயிரே! நீ மூன்று நாள் உபவாச மிருந்ததும், இன்று என்னுடன் நீ காட்டுக்கு வந்ததும், வரும்போது சகுனத்தைப் பார்த்து மனவுறுதி கொண்டதும், அடிக்கொருதரம் என்னைத் தழுவி வருத்தத்தோடு கண்ணீர் விட்டதும், இப்போதுதான் இன்ன காரணத்தினாலென்று புலப்படுகின்றது. அட! மரத்தின் மேல் நான் பார்த்த மூவர்கள் யமதூதர்களா? என் கனவில் உன்னை வணங்கிச்சென்றதாக நான் கண்ட அவன் யமதேவனா? என்ன ஆச்சரியம்!

துமத: (சாவித்திரியை நோக்கி) என் குலத்தின் விளக்கே

கலி விருத்தம்.

கண்கொடுத்தனை காத்துயி ரீந்தனை
மண்கொடுத்தனை வானுயர் பண்பினால்
விண்கொடுத்தனை மின்னொடி யுன்னையெம்
ஒண்குலந்தொழுந் தெய்வமென் றன்னுவாம். (108)

சுசீலை: (சாவித்திரியைத்தழுவி) பதிவிரதா ரத்தினமே!

கலி விருத்தம்.

நற்ற வத்தவர் போற்ற ஜ்லிந்திடா
துற்ற கற்பு நிறைந்துய ரென்மகற்
கற்ற நல்லுயி ரீந்த அணங்குனைப்
பெற்ற பேர்கழல் போற்றுவம் பேறளாய்! (109)

நாரதர்: துமதசேன! காட்டில் நடந்த விந்தைகளை யெல்லாம் சாவித்திரி உனக்கு விஸ்தாரமாகச் சொல்லுவள். நீ உன் நாட்டுக்குச் சென்று முடிதரித்து அரசாட்சிசெய்து, நீங்கள் அனைவரும் சுகமாயிருப்பீர்களாக. சாவித்திரி! எல்லாப் பாக்கியங்களையும் அடைந்து உனக்கு நான் என்னவரம் அளிக்கவேண்டும்?

சாவி: கருணைக்கடலே?

கலி விருத்தம்.

பற்றி என்கதை பாடுவர், கேட்பவர்
உற்ற நன்மக வோடுயர் செல்வமும்
நற்ற வப்பொலி வும்பல நன்றியும்
பெற்று வாழ்ந்திடு வாரெனப் பேசுவீர். (110)

நாரதர்: அப்படியே வாழ்வார்கள்.

சங்கீதம்.

[அனைவரும் மறைதல்.]

# பரத வாக்கியம்.

சபையோர்களே! பதிவிரதத்தின் மகிமையை நன்றாய்ப் பார்த்தோம். பின்பு, துமதசேனன் முடிதரித்தரசாண்டு சுசீலையுடன் திவ்ய லோகஞ் சென்றான். அசுவபதிராஜனுக்கு மிக்க அழகு பொருந்திய புதல்வன் பிறந்து அவன் குலத்தை மேலாகச் சிறப்பித்தான். சத்திய வானுக்கும் சாவித்திரிக்கும் தர்மபிருத் என்னும் குமாரனும், புலோமஜை என்னும் புதல்வியும் பிறந்து, அக்குலமும் தழைத்து வாழ்ந்தது. சாவித்திரியும் சத்தியவானும் வெகுநாள் இவ்வுலகிலிருந்து வாழ்ந்து, கடைசியில் ஒப்பற்ற பதவியை அடைந்தார்கள். பார்த்தீர்களா! பதிவிரதத்துக்கு யமனும் பயந்து விலங்கினன். பதிவிரதத்துக்கு மேலான விரதம் ஒன்றுமில்லை. பதிவிரதத்தை அநுஷ்டிக்கத் தெரியாத மாதர்கள்தாம் மற்ற விரதங்களை நாடி அலைகிறார்கள். ஆதலால் தான்,

"தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யு மழை" என்றும்

"பெண்ணிற் பெருந்தக்க யாவுள கற்பென்னுந்
திண்மையுண் டாகப் பெறின்" என்றும்

நீதிவசனங்கள் பிறந்தன.

மங்களம்.

சங்கீதம்.

MAHAMAHOPADHYAYA
DR. U.V. SWAMINATHA IYER LIBRARY
TIRUVANMIYUR :: MADRAS 41